விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

உலகெங்குமுள்ள உறவு களுக்கு உடனுக்குடன்
கடிதங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
உடு புடைவைகள்
CD,VCD க்கள் அனுப்ப
நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-4374)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 07 புதன்கிழமை (20.04.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 123

# ஊழல் புரிந்த நபர்களுக்கு உதவுகிறது நல்லாட்சி அரசு

## ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பு சாடல்

(கொழும்பு)

நாட்டின் பல துறைகளில் ஊழல் மோசடி புரிந்த நபர்கள் தண்டனையிலிருந்து தப்பித்து நிம்மதியாக வாழ்வதற்கு மைத்திரி - ரணில் அரசும் நல்லாட்சி என்ற பெயரில் உதவிவருவதாக தெரிவித்த ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பின் ஏற்பாட்டாளர் வசந்த சமரசிங்க, தமது அமைப்பு பதிவு செய்த 48 ஊழல் முறைப்பாடுகளுக்கும் இதுவரையில் உரிய தீர்வு எதுவும் வழங்கப்படவில்லை எனவும் சாடியுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)




## ஜனாதிபதி மைத்திரியின் அமெ.விஜயம் இரத்து



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமெரிக்காவுக்கு மேற கொள்ளவிருந்த பயணம் திடீரென இரத்துச் செய்யப்பட்டுள்ளது. 24ஆம் பக்கம் பார்க்க....

## எழிலன் தொடர்பான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்து பின் காணாமல்போன விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் 23ஆம் பக்கம் பார்க்க....

## நீதிமன்றிலிருந்து கைதி தப்பியோட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் பொலிஸ் பாதுகாப்பிற்கு மத்தியில் வழக்கு ஒன்றிற்காக 23ஆம் பக்கம் பார்க்க....

## தங்க கடத்தலை தடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோத தங்க வர்த்தகம் தொடர்பில் ஜனாதிபதி தலைமையில நேற்று மாலை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து சட்ட விரோதமான முறையில் தங்கம் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படும் நடவடிக்கையை கட்டுப் படுத்துவது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதில் அரசாங்க மற்றும் தனியார் துறை வங்கிகளில் மேற்கொள்ளப்படும் தங்க ஏல விற்பனைகளில் கொள்வனவு செய்யப்படும் தங்கம் சட்ட விரோதமான வழிகளில் பாரியளவில் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பிலான தகவல்கள் முப் 23ஆம் பக்கம் பார்க்க....

## சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் 24ஆம் திகதி இலங்கை வருகை

### யாழில் வீட்டுத்திட்டத்தையும் பார்வையிடுவார்



(சூரிச்)

சுவிட்ஸர்லாந்து வெளிவிவகார அமைச்சர் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரையும் சந்தித்து சுவிஸ் அமைச்சர் 23ஆம் பக்கம் பார்க்க....




## ஐ.நா. கூட்டத்தில் அமைச்சர் சாகல



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் விசேட கூட்டமொன்றில் சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரட்நாயக்க 24ஆம் பக்கம் பார்க்க....

## சட்டம், ஒழுங்கு பதில் அமைச்சராக சுவாமிநாதன்



(கொழும்பு)

நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கு பதில் அமைச்சராக அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஜனாதிபதி 24ஆம் பக்கம் பார்க்க....

## சுன்னாகம் நீர்மாசு வழக்கு; மே–3ஆம் திகதி தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கழிவெண்ணை நீர் பாதிப்பு வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

கழிவொயில் காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் சீராக மேற்கொள்ளப் படுவதில்லையென கழிவொயில் காரணமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த இரு பொதுச் சுகாதார வைத்திய பரிசோதகர்களால் மல்லாகம் நீதிமன் றத்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் மல்லாகம் நீதிமன்றில் நடைபெற்று 24ஆம் பக்கம் பார்க்க....

## விசாரணைக்கு அழைக்கப்பட்டவர் ரி.ஐ.டியினால் நேற்று கைது!

(கொழும்பு)

விசாரணைக்காக கொழும்பு 2 ஆம் மாடிக்கு அழைக்கப்பட்ட முல்லைத்தீவைச் சேர்ந்த முன்னாள் போராளி ஒருவரை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் நேற்றையதினம் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு ஜீவநகர் இடது கரை முத்துஜயன்கட்டைச் சேர்ந்த முத்துலிங்கம் ஜெயகாந்தன் (வயது 36) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

குறித்த நபர் கடந்த 2013 ஆம் ஆண்டு தொழில் நிமித்தம் டோகாவுக்குச் சென்று அங்கு இருந்து கடந்த 12ஆம் திகதி இலங்கைக்கு திரும்பிய நிலையில் இவர் விமான நிலையத்தில் வைத்து விசாரணை செய்யப்பட்ட 23ஆம் பக்கம் பார்க்க....

## ஜீவகவாத ஒத்தட பத்து

முதுகுத்தண்டு,கழுத்து, கணுக்கால், முழங்கால், இடுப்பு மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய இடங்களிலும் கார்ட்டிலேஜ் எனப்படும் எலும்பு திசுக்கள் குறைதல், திசுக்கள் கடினமடைதல் அல்லது தேய்மானம் ஆகியன காரணமாக ஏற்படும் வலிகளுக்கு ஜீவகவாத ஒத்தட பத்து மருந்தை பயன்படுத்துவதன் மூலம் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனைப் பயன்படுத்துவதன் மூலம் எலும்பு மூட்டுக்களில் திசுக்களின் வளர்ச்சி அதிகரிக்கும்.

**Manufactured by:**
Jeewaka Herbal Products (pvt) Ltd
Yakkala

சந்தைப்படுத்துவோர்
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகாமையில்)
தொ.பே - 021 - 222 2567

C-4380)


## வாகன விபத்து குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் – ஹயஸ் வாகன விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றுக்காலை 8 மணிக்கு புங்குடுதீவு – மேசன் கடை வீதிக்கு முன்னால் இடம்பெற்றுள்ளது.

இதில் புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த லோறஸ் அன்ரனி (வயது–42) என்ற குடும்பஸ்தரே விபத்தில் சிக்கி காயமடைந்தவராவார்.

மேற்படி குடும்பஸ்தர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த ஹயஸ் வாகனம் மோதியதில் மேற்படி விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

படுகாயமடைந்த பிரஸ்தாப குடும்பஸ்தர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-30)

## பிரசாந்தனுக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு ஆரையம்பதியில் இடம்பெற்ற இரட்டைக்கொலை தொடர்பான முறைப்பாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பிரசாந்தன் மற்றும் அவரது சகோதரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை மட்டக்களப்பு நீதிவான நீதிமன்ற நீதிபதி எஸ்.கணேசராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது மே மாதம் 03ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டது. (இ-5)

## வில்லிசை நிகழ்வு

இன்று 20.04.2016 புதன்கிழமை தொண்டைமானாறு சந்திவைரவர் ஆலயத்திலும் நாளை 21.04.2016 வியாழக்கிழமை மாங்குளம் அம்பகாமம் மம்மில்ப் பிள்ளையார் ஆலயத்திலும் சிறுப்பிட்டியூர் கலைஞானமாமணி க.சத்தியதாஸ் குழுவினரின் வில்லிசை நிகழ்வு இடம்பெறும். (4246)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் விஞ்ஞான பாட ஆசிரியர் திரு **சி.மதிபாலன்** அவர்களின் அன்புத் தந்தை

**திரு.நாகநாதர் சிவசுப்பிரமணியம்**

அவர்கள் 2016.04.19 அன்று காலமானதையிட்டு எமது கல்விச்சமூகம் ஆழ்ந்த துயரடைகின்றது. மேலும் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பாடசாலைச் சமூகம்**
**யா/மானிப்பாய் மெமோறியல்**
**ஆங்கிலப் பாடசாலை**

(4249)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## கண்ணீர் அஞ்சலி



உடுவில் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும் எமது சங்கத்தின் பொருளாளருமாகிய திரு.சி.உமாபாலன் அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு.நாகநாதர் சிவசுப்பிரமணியம்**

அவர்கள்

19.04.2016 அன்று காலமானதையறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மேலும் இன்றையதினம் வராகி அம்மன் வீதி, கொக்குவில் மேற்கு எனும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் பி.ப ஒரு மணியளவில் இடம்பெறும் இறுதிக் கிரியைகளிலும் எமது சங்க அங்கத்தவர்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம், கச்சேரி, யாழ்ப்பாணம்.**

(4248)


## UNIVERSITY OF NORTH EAST LANKA

"கல்வியியல் கலாநிதிப்பட்டம்" பெறுவதற்கான விண்ணப்பம் கோரல் கல்வியாண்டு 2016-2017

**Doctor of Education (Duration:- Two - Three Years)**

சர்வதேச தரத்திலான பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் மேற்படி பாடநெறிக்கு:

01.கல்வியியல் முதுதத்துவமாணி (M.Phil in Education) கல்வியியல் முதுமாணி (M.Ed.) மற்றும் இதை ஒத்த பாடநெறிகள் 2வது பட்டப்பாட நெறிகளைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

02. பாடநெறிகள் தமிழ், ஆங்கில மொழி மூலம் இடம்பெறும்.

03. ஆங்கிலத்தில் IELTS 6 புள்ளிகள், தகவல் தொழில் நுட்பம் ஆகியவற்றோடு Professional Practice in Education, Advanced Research Methods for Education, Applying Research Methods in Education, Professional Work Place Culture and Learning ஆகிய பாடங்களுடன் தரம் வாய்ந்த ஆய்வுக்கட்டுரையும் சமர்பிக்க வேண்டும். வழிகாட்டல்கள் எம்மால் வழங்கப்படும்.

04. ஆய்வுத்தலைப்புக்கள் மாணவர் விருப்பப்படி தம் தொழில் கல்வி வாண்மையும் சமூகத்துக்கும் பயனுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதாக அமையவேண்டும்.

05. சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் ஆய்வுத்தலைப்பு, ஆய்வு முன்மொழிவை 2016-05-02 திகதிக்கு முன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

06. ஆய்வு முன்மொழிவில் Introduction, Review of Literature, Research Questions or Research Hypotheses, Method of Inquiry, Expected outcomes, References அடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**M.Ed.** வகுப்புக்கள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
பதிவுகள் நடைபெறுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு:-

**Dr.B.Thanabalan Ph.D**
Dean
Faculty of Education
Business University Costa Rica, San Juan University & University of North East Lanka
Collaboration Project 2016
T.P 0770681958

**Registrar:**
Dr. N.Nallaiah Ph.D
University of North East Lanka
Top Floor, People's Bank Building,
Stanley Road, Jaffna.

(சி-4384)


## மரண அறிவித்தல்

### நாகநாதர் சிவசுப்பிரமணியம்

(ஓய்வூதியர்-மண்டைதீவு கிராமசபை)



மண்டைதீவு 5ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட நாகநாதர் சிவசுப்பிரமணியம் அவர்கள் 19.04.2016 நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதர்-தில்லைவனம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற நாகமுத்து-நாகம்மா தம்பதிகளின் மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லையா, அன்னப்பிள்ளை, இலட்சுமியம்மா, அப்பாத்துரை, அப்பாப்பிள்ளை மற்றும் முத்துலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, குணரத்தினம், யோகலிங்கம் மற்றும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் பரமேஸ்வரி, அருமைத்திருநாயகம், கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், பத்மாவதி, நடனசண்முகம் ஆகியோரின் அன்புச் சகலனும், சிவபாலன் (சுவிஸ்), ஜெயபாலன் (ஆசிரியர்-யாழ்.இந்துக் கல்லூரி), ஸ்ரீபாலன் (கண்ணன்-ஜேர்மனி), உமாபாலன் (கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம்-உடுவில்), கலையரசி (பிரான்ஸ்), மதிபாலன் (ஆசிரியர்-யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), அன்பரசி (ஆசிரியை-யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலை), ஆகியோரின் அன்புத் தந்தையும் கோகுலவாணி (சுவிஸ்), சுதேஸ்வரி (ஆசிரியை-யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), சுஜிதா (ஜேர்மனி), கவிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், சுமநலசேவைகள் நிலையம்-உரும்பிராய்), மதியழகன் (பிரான்ஸ்), ஜெயந்தி (ஆனைக்கோட்டை), நல்லைக்குமரன் (அலுவலகப் பணியாளர்-பிரதேச செயலகம்-வேலணை) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவானுஜன், பிரணவன், மதுமினன், ஆருஷா, அபிநயா, அனோஜா, வைஷாலினி, அக்ஷயன், அக்ஷயா, அபிசஜன், காருண்யா, அபிஷேக் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.04.2016 இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கொக்குவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முகவரி
இல.06 வராகி அம்மன் கோவில் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(0212052661)

தகவல்:-
குடும்பத்தினர்

(இ)

# கடந்த 10 நாட்களில் 14கோடி வருமானம்


(கொழும்பு)

தமிழ். சிங்கள புதுவருட விடுமுறை காலத்தில். தெற்கு அதிவேக பாதையின் மூலம் சுமார் 14 கோடி ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.


கடந்த ஏப்ரல் 8 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரையான காலத்தில் தெற்கு அதிவேக பாதையில் பயணம் செய்த 4 இலட்சத்து 76 ஆயிரத்து 671 வாகனங்கள் (476.671) பயணம் செய்ததன் மூலம் சுமார் ரூபா 14 கோடி 36 ஆயிரத்திற்கும் அதிகமான வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் எஸ். ஓபநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்களில். ஏப்ரல் 16 ஆம் திகதி பி.ப 6 மணி முதல் 17ஆம் திகதி பி.ப. 6 மணி வரையான காலப்பகுதியில் சுமார் ரூபா 1 கோடி 83 இலட்சத்து 97 ஆயிரத்து 300 இற்கும் (18.397.300) அதிகமான வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர். இதற்கு முன்னர் பெற்ற வருமானங்களிலும் பார்க்க. இது மிக அதிகளவான வருமானம் பெற்ற சந்தர்ப்பமாகும் எனத் தெரிவித்தார்.

அக்குறிப்பிட்ட காலப்பகுதியில் 58.477 வாகனங்கள் பயணம் செய்ததாக அவர் சுட்டிக்காட்டினார். (இ-5)




# சம்பந்தனும் விக்னேஸ்வரனும் புலிகளின் பிரதிநிதிகள்





## சிங்கள ராவய குற்றச்சாட்டு

(கொழும்பு)

**எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்போதைய பிரதிநிதிகளாக செயற்பட்டு வருவதாக சிங்கள ராவய அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.**

கிருலப்பனையில் அமைந்துள்ள பொதுபல சேனா அமைப்பின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த இருவரும் இனவாத. பிரிவினைவாத பிரசாரங்களை மட்டுமே தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாக சுதந்த தேரர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# கத்தியால் குத்தியவர் மே 2வரை மறியலில்

வடமராட்சி கரவெட்டிப் பகுதியில் கத்தியால் குத்தி ஒருவருக்கு காயத்தை ஏற்படுத்திய நபர் ஒருவரை எதிர்வரும் மேமாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்

கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதி கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கத்தியால் குத்தியமை தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த மேற்படி நபரினை நெல்லியடிப் பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்திருந்தனர். இதனையடுத்து நேற்றுமுன்தினம்திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியபோதே மேமாதம் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-5-60)

# இந்தியாவின் தேஜஸ் போர் விமானங்களை வாங்குவதில் இலங்கையும் எகிப்தும் ஆர்வம்

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தேஜஸ் போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதில், இலங்கையும், எகிப்தும் ஆர்வம்காட்டி வருவதாக. பிரிஜ செய்தி நிறுவனம். தகவல் வெளியிட்டுள்ளது.

சீனாவின் உதவியுடன் பாகிஸ்தான் தயாரித்த ஜே. எவ்-17 போர் விமானங்களை இலங்கை அண்மையில் நிராகரித்ததுடன். பிரான்சிடம் இருந்து 24 ராபல் போர் விமானங்களை வாங்கும் உடன்பாட்டில் எகிப்து கையெழுத்திட்டது.

இந்த இரண்டு நாடுகளும் இப்போது. தேஜஸ் போர் விமானத்தின் தற்போதைய வடிவத்தை வாங்க ஆர்வம் காட்டுகின்றன.

எனினும். தேஜஸ் போர் விமானங்களைத் தயாரிக்கும். இந்திய அரசுத்துறை நிறுவனமான ஹிந்துஸ் தான ஏரோநொட்டிக்ஸ் நிறுவனம். முதலில் இந்திய விமானப்படைக்கு இந்த விமானத்தை விநியோகிப்பதில் கவனம் செலுத்தி வருகிறது.

'எமது விமானங்கள் மீது ஏனைய நாடுகள் ஆர்வம் காட்டினாலும். இந்திய விமானப்படைக்கு தேவையான விமானங்களைத் தயாரித்துக் கொடுப்பதிலேயே முதலில் கவனம் செலுத்தி வருவதாக ஹிந்துஸ்தான் ஏரோநொட்டிக்ஸ் நிறுவனத்தின் தலைவர் ஸ்வர்ண ராஜு தெரிவித்துள்ளார்.

எமது விமானப்படை மகத்தானமாகப் பறக்கும் போது. ஏனையவர்களுக்கு நம்பிக்கை வரும். எனவே முதலில். இந்திய விமானப் படையின் குறைந்தபட்ச ஆரம்பத் தேவையை நிறைவேற்ற வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை. தேஜஸ் விமானங்களை வாங்குவதற்கு எந்தெந்த நாடுகள் விருப்பம் தெரிவித்திருக்கின்றன என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்க மறுத்து விட்டார்.

ஆனால். இலங்கையும். எகிப்துவும். மட்டும் இப்போது இந்த விமானங்களை வாங்க விருப்பம் கொண்டிருப்பதாக. இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-5)

# ஜன்னலூடாக திருட்டுக்கள் எச்சரிக்கின்றது பொலிஸ்

தற்போது நிலவும் வெப்பமான காலநிலையைக் கருத்தில் கொண்டு இரவில் வீட்டு ஜன்னல்களை திறந்து விடுவதால் திருடர்களுக்கு அது வாய்ப்பாக அமைந்துவிடும். எனவே இது குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

கொழும்பு சினமன் விடுதி வளாகத்திலுள்ள தங்குமிடத்திற்கு திறந்து விடப்பட்டிருந்த ஜன்னல் ஒன்றினூடாக இரவு நேரம் உள்நுழைந்த திருடன் ஒரு மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதிமிக்க ஆபரணங்களை கடந்த வாரம் திருடிச் சென்றுள்ளான்.

இந்நிலையில் பொதுமக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என பொலிஸார் வலியுறுத்தியுள்ளதுடன் தற்போதைய காலநிலையைதிருடர்கள் சாதகமாக்கிக்கொள்ளாதவாறு விழிப்பாக இருக்குமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர். (3)

# கூட்டுறவுச்சங்க கிளைக்கு நேற்று தீ வைத்த விசமிகள்


கரணவாய் தெற்கு சோழங்கன் பகுதியில் உள்ள உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கிளை ஒன்றுக்கு இனம்தெரியாத சில விசமிகளால் நேற்று அதிகாலை தீ வைக்கப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸில் நேற்றைய தினம் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

அதிகாலை வேளையில் சங்க கிளையில் புகை எழும்பியதை அருகில் உள்ள வீட்டார் அவதானித்ததுடன் இது தொடர்பில்நெல்லியடிப்பொலிஸ் நிலையத்திற்கும் சங்கக் கிளை முகாமையாளருக்கும் அறிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு உடனடியாகச் சென்ற பொலிஸார் மற்றும் கிளை முகாமையாளர் ஆகியோர் கதவினை திறந்து பொதுமக்கள் உதவியுடன் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இச்சம்பவத்தில் கடைக்குள் இருந்த பொருட்கள் எவையும் தீயில் சேதமாக்கப்படவில்லை என பொலிஸாரின் விசாரணையில்இருந்து தெரிய வந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5-60)

# பஞ்சாப்பை வென்றது கொல்கத்தா நைட் ரைடர்ஸ்



மொஹாலியில் நேற்று நடைபெற்ற ஐ.பி.எல்.போட்டியில் பஞ்சாப் அணியை கொல்கத்தா அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணித் தலைவர் காம்பீர் முதலில் பந்து வீச முடிவு செய்தார்.

இதன்படி முதலில் துடுப்பாடக் களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு கடந்த போட்டியில் வெற்றிக்கு காரணமாக இருந்த வோரா 8 ஓட்டங்களில் மோர்கல் பந்தில் ஆட்டமிழந்தார். முரளி விஜய் நிதானமாக ஆடி 26 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அணித் தலைவர் மில்லர் (6), மக்ஸ்வெல் (4), சஹா(8) ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். ஷோன் மார்ஷ் மட்டும் நிலைத்து நின்று ஆடி ஓட்டங்கள் குவித்தார்.

20 ஓவர் முடிவில் பஞ்சாப் அணி 8 விக்கெட்களை இழந்து 138 ஓட்டங்கள் எடுத்தது. ஷோன் மார்ஷ் 56 ஓட்டங்கள் எடுத்து இறுதிவரை ஆட்ட மிழக்காமல் இருந்தார். கொல்கத்தா தரப்பில் மோர்கல், நரேன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்களை வீழ்த்தினர்.

139 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற சிறிய இலக்குடன் களமறிங்கிய கொல்கத்தா அணி 17.1 ஓவர்களில் 4 விக் கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் உத்தப்பா 53, கம்பீர் 34 ஓட்டங்களை எடுத்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக கொல்கத்தாவின் உத்தப்பா தெரிவானார். (க)

# தெருவில் சிறுவர்களுடன் கிரிக்கெட் விளையாடிய டேல் ஸ்ரெய்ன்



தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன் மும்பையில் சிறுவர்களுடன் இணைந்து கிரிக்கெட் விளையாடுவது போன்ற வீடியோ சமூகத் வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளரான ஸ்ரெய்ன், தற்போது ஐபிஎல் தொடரில் குஜராத் லயன்ஸ் அணியில் விளையாடி வருகிறார். தற்போது மோசமான போர்மில் இருக்கும் ஸ்ரெய்ன், மீண்டும் பழைய நிலைக்கு வரவேண்டும் என்பதில் முனைப்பு காட்டி வருகிறார்.

இதற்காக பலத்த பயிற்சியில் ஈடுபட்டு வரும் ஸ்ரெய்ன், தனது இன்ஸ்டாம்கிராம் பக்கத்தில் வீடியோ ஒன்றை பதிவிட்டுள்ளார்.

Little bit of street cricket in Mumbai, my 1st wicket of the IPL என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள அந்த வீடியோவில், மும்பையில் தெருவில் சிறுவர்களுடன் இணைந்து கிரிக்கெட் விளையாடுகிறார்.

இந்த வீடியோ தற்போது சமூக வலைத் தளங்களில் வைரலாக பரவி வருகிறது. (க)

## கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற விரும்பிய ரவீந்திர ஜடேஜா

இந்திய கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜா கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற விரும்பிய அதிர்ச்சி தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

ரவீந்திர ஜடேஜாவுக்கும் அவரது தோழி ரிவா சோலங்கிக்கும் கடந்த ஞாயிற்றுக் கிழமை அன்று திருமணம் நடந்துள்ளது.

இந்நிலையில் ஜடேஜா கடந்த 2005ஆம் ஆண்டு கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற நினைத்ததாக ஒரு அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த ஜடேஜாவின் தந்தை பாதுகாவலராக பணியாற்றி வந்துள்ளார். 2005ஆம் ஆண்டு ஜடேஜாவுக்கு 17 வயதாக இருந்த போது, அவரது





தாயார் விபத்து ஒன்றில் உயிரிழந்துள்ளார். தாயின் இழப்பை தாங்க முடியாத ஜடேஜா கிரிக்கெட்டை தொடர முடியாமல் தவித்துள்ளார். எனவே அவர் கிரிக்கெட்டை விட்டு வெளி யேற முடிவு செய்துள்ளார்.

ஆனால் அவரது குடும்பத்தினரும், நண்பர்களும் அவரை கிரிக்கெட்டை தொடர்ந்து விளையாடுமாறு வற்புறுத்தியுள்ளனர்.

இதையடுத்து கிரிக்கெட்டை தொடர்ந்து விளையாடிய ஜடேஜா, 2006 மற்றும் 2008ஆம் ஆண்டுகளில் நடந்த 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ண போட்டியை விளையாடியுள்ளார்.

இதையடுத்து 2008ஆம் ஆண்டு தொடங்கிய ஐ.பி.எல்லில் ராஜஸ்தான் அணியில் களமிறங்கிய ஜடேஜா, 2009ஆம் ஆண்டு இந்திய ஒரு நாள் அணியிலும், ரி20 அணியிலும் இடம்பிடித்தார்.

பின்னர் 2012ஆம் ஆண்டில் இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியிலும் அவர் இடம் பிடித்தார். தற்போது இந்திய அணியின் முக்கிய சகலதுறை வீரர்களில் ஒருவராக இருக்கும் ஜடேஜா 2005இல் இந்திய அணியில் நுழைவதற்கு முன்பே, கிரிக்கெட்டை விட்டு வெளியேற நினைத்த விடயம் தற்போதுதான் வெளிவந் துள்ளது. (க)


## மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் யோகரட்ணம்

(ஓய்வுபெற்ற நெல் ஆராய்ச்சியாளர் - விவசாயத் திணைக்களம்)



நல்லூர் கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும் கச்சேரி நல்லூர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட உயர்திரு.பொன்னம்பலம் யோகரட்ணம் (ஓய்வுபெற்ற நெல் ஆராய்ச்சியாளர் -விவசாயத் திணைக்களம்) 19.04.2016 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பாலாம்பிகை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான முருகேசு-நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் இந்திராணிதேவி, லலிதாதேவி மற்றும் காலஞ்சென்றவர்களான சரோஜினிதேவி, அழகுரட்ணம், யோகேந்திரன், பத்மாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீபத்மநாதன், இராஜேஸ்வரி, வாமதேவன், சண்முகசுந்தரம், சிவபாதசுந்தரம், பரமேஸ்வரி தேவதாசன், இராஜேஸ்வரி ஸ்கந்தா, காலஞ்சென்றவர்களான இராஜேந்திரம், வர்ணகுலசிங்கம் மற்றும் சிவசிதம்பரம், வியாகேஸ்வரி, லீலலோகேஸ்வரி குமாரகுலசிங்கம், காலஞ்சென்ற சச்சிதானந்தம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிலானி (ஆசிரியை-சண்டிக்குளி மகளிர் கல்லூரி), நிருசன் (கட்டார்) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr.கோபிசங்கர் (எலும்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர்-யாழ்.போதனா வைத்தியசாலை), பானு (Hatton National Bank, Kollupity) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிநயா, சுவாஸ்தி, மனஸ்வினி, அஸ்வினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.284, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (20.04.2016) புதன்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Dr.T.Gobyshanger (மருமகன்)
0777749271, 0212222011

(4281)



## கண்ணீர் அஞ்சலி




மண்டைதீவு திருமுறைக்
கழகத்தின்
உப தலைவர்
திரு.சி.உமாபாலன் (RDO)
அவர்களின்
அன்புத் தந்தை

சிவத்திரு.
நா.சிவசுப்பிரமணியம்

(தர்மகர்த்தா, கடையிற்
சுவாமிகள் ஆலயம், மண்டைதீவு)

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச்
செலுத்தி அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருமுறைக் கழகம், மண்டைதீவு. (இ)



# ஏழாலை அருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தானம்

## புனராவர்த்தன அஷ்டபந்தன
## பஞ்சகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேக
## விஞ்ஞாபனம் -20.04.2016

மஹா கும்பாபிஷேகம் 20.04.2016
இன்று புதன்கிழமை காலை 9.15
மணி முதல் 10.45 மணிவரை

## புதன்கிழமை

உ

**18, 19, 20.04.2016 புதன்கிழமை நடைபெறும்**
**ஏழாலை அருள்மிகு**
**கண்ணகை அம்பாள் தேவஸ்தான**
**புனராவர்த்தன அஷ்டபந்தன**
**மஹாகும்பாபிஷேகப் பெருவிழாவை**
**மனமார வாழ்த்துகின்றோம்.**

கண்ணகை அம்பாள் அனைவருக்கும் நல்லருள்
பாலிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**ராஜி கடைக்கட்டிடம்** ***Raji Building***

**No - 297, K.K.S. Road, Chunnakam.**
**T.P - 0777279426**

(4381)

# தொழில் வாண்மையை விருத்தி செய்யும் ஆசிரியர் மாநாடு வலிகாமம் வலயத்தில்

## மே 13, 14 ஆம் திகதிகளில் நடைபெறும்

ஆசிரியர்களின் தொழில்வாண்மையை விருத்தி செய்யும் நோக்குடன் வலிகாமம் கல்விவலயத்தில் எதிர்வரும் மே மாதம் 13,14 ஆம் திகதிகளில் ஆசிரிய மாநாடு நடைபெறவுள்ளதாக வலிகாம வலய கல்வி பணிப்பாளர் செ.சந்திரராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

வடமாகாண கல்வி அமைச்சினுடைய கல்வி முறைகளின் மீளாய்வு பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த வருடத்தில் இருந்து ஆசிரியர் மாநாடு நடைபெறும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டு வடக்கில் உள்ள 12 வலயங்களிலும் இச்செயற்பாடு நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

அந்த வகையில் வலிகாமம் வலயத்தில் மே மாதம் 13 , 14 ஆம் திகதிகளில் ஆசிரியர் மாநாட்டை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம். இதில் வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள அனைத்து ஆசிரியர்களும் பங்குபற்றுவார்கள்.

இந்த ஆசிரியர் மாநாடானது ஆசிரியர்கள் வெற்றிகரமாக தமது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை ஏனைய ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொள்வதும் ஏனைய கல்வி சார் பிரச்சினைகள் தொடர்பான ஆய்வுகளை முன்வைப்பதும் புத்தாக்கம் மிக்க கல்வி சாதனங்களை காட்சிப்படுத்துவது போன்ற நோக்கங்களை கொண்டு நடைபெறவுள்ளது. இதன்மூலம் ஆசிரியர் தமது தொழில் வாண்மையை வலுப்படுத்திக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் பிரதானமாக கருத்தரங்கு மற்றும் கண்காட்சி என 2 நிகழ்வுகள் உள்ளடக்கப்படவுள்ளன.

கருத்தரங்கில் ஆசிரியர்கள் கல்விசார் பிரச்சினைகள் தொடர்பாக செய்த ஆய்வுகளின் சமர்ப்பணம் அதாவது அடைவு மட்டம் குறைந்த பாடசாலைகளில் விசேட செயற்பாடுகளை செய்து அடைவு மட்டத்தை கூட்டியிருப்பின் அவர்கள செய்த விசேட செயற்பாடுகள் மற்றும் அடைவு மட்டத்தை அடைவதற்கு மேற்கொண்ட உத்திகள் தொடர்பான சமர்ப்பணம் இடம்பெறும.

2 ஆவது நிகழ்வான கண்காட்சியில் விசேட கற்பித்தல் சாதனங்கள் உதாரணமாக எண்ணக்கருவை விளக்குவதற்கான இலகுவான உபகரணங்கள், மாதிரி உருக்கள் வரைபடங்கள், ஆசிரியர்கள் வெளியிட்ட கையேடுகள்,சஞ்சிகைகள் என்பன காட்சிப்படுத்தப்படும்.

இரு நிகழ்வுகளின் இறுதியில் ஆசியர்களின் முற்றுமுழுதான பங்களிப்புடன் கலைநிகழ்வுகள் இடம்பெறும்.

அத்துடன் விசேட நிகழ்வாக இரண்டு நாட்களும் கல்வியியற்றுறை சார்ந்த பேராசிரியர்களின் நினைவுப்பேருரையும் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




## மஹோற்சவ விஞ்ஞாபனம்

துன்னாலை தெற்கு கலிகை கந்தசாமி கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனம் கடந்த 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி முற்பகல் 10 மணிக்கு தேரில் முருகன் வலம் வருவார். நாளை 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி மு.ப 10 மீணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். (இ

## நகர சங்கீர்த்தனம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக இராமநாதன் வீதியிலுள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை 21 ஆம் திகதி வியாழக்கிழமை அதிகாலை 4.45இற்கு நகர சங்கீர்த்தனம் இடம்பெறும்.

காலை 8.30 மணிக்கு பிரசாந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் பகல் நிகழ்வுகளில் அஷ்டோத்திரம், காயத்திரி மந்திரம். பஜனை மற்றும் விசேட சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளன.

மேலும் அவதார மகிமை எனும் தலைப்பில் வைத்தியகலாநிதி ஆர். கணேசமூர்த்தி சொற்பொழிவாற்றவுள்ளார். (இ

## லெனினிசக் கட்சியின் மே தினக் கூட்டங்கள்

உலக தொழிலாளர்களின் சர்வதேசப் புரட்சிகர தினமான மே தினத்தைப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி யாழ்ப்பாணம் வலி.கிழக்குப் புத்தூரிலும் வன்னியில் வவுனியா நகரிலும் மலையகத்தில் மாத்தளை நகரிலும் நடத்தவுள்ளது.

மக்கள் அதிகாரத்திற்கான வெகுஜென அரசியலை முன்னெடுப்போம் என்னும் தொனிப்பொருளில் மேற்படி மே தினப் பேரணிகள், பொதுக்கூட்டங்கள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம் வலி.கிழக்கு புத்தூர் கலைமதி விளையாட்டு மைதானத்தில் பொதுக்கூட்டமும் யாழ்.பருத்தித்துறை வீதி ஆவரங்கால் சந்தியிலிருந்து மே தினப் பேரணியும் இடம்பெறும். வவுனியாவின் ஏ9 நெடுஞ்சாலையில் மத்திய மகா வித்தியாலயம் அருகில் இருந்து ஆரம்பமாகும் மே தினப் பேரணி பிரதான வீதிகள் ஊடாக வவுனியா புதிய கலாசார மண்டபத்தில் நிறைவடைந்து அங்கு கூட்டம் இடம்பெறும். மாத்தளையில் ஆலடி பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பமாகும் மே தினப் பேரணி நகரின் பிரதான வீதிகளின் ஊடாக மாநகர சபை மண்டபத்தை சென்றடைந்து அங்கு கூட்டம் இடம்பெறும். மேற்படி பேரணிகளிலும் கூட்டங்களிலும் தொழிலாளர்கள், விவசாயிகள், மீன வர்கள், பெண்கள், இளைஞர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அறிவித்துள்ளது. (இ

## சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம்

சமூக விஞ்ஞானப்படிப்பு வட்டம் நாளை 21 ஆம் திகதி பி.ப 3.30 மணிக்கு கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

உலகில் நிகழ்ந்த புரட்சிகளும்-தத்துவங்களும் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கருத்துரையினை ஓய்வு நிலை பிரதிக்கல்விப்பணிப்பாளர் பி.முத்துலிங்கம் வழங்குவார்.

தொடக்கவுரையினை த.ஸ்ரீபிரகாஸ் நிகழ்த்தவுள்ளார். இக் கருத்துரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். சமூக, கலை, இலக்கிய விஞ்ஞான அறிவியல் ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ

## வருடாந்த உற்சவம்

புங்குடுதீவு வீராமலை வயலூர் ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய துர்முகி வருட வருடாந்த உற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும். முற்பகல் 10 மணிக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெற்று மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

மாலை வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து மங்கள வாத்தியங்கள் சகிதம் முருகப்பெருமான் முத்துச் சப்பறத்தில் திருவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (இ

## சித்திரா பௌர்ணமி விசேட பூஜை வழிபாடு

யா/வண். வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் சித்திரா பௌர்ணமியை முன்னிட்டு நாளை 21 ஆம் திகதி விசேட பூஜை நடைபெறும்.

இதேவேளை எதிர்வரும் 25 ஆம் திகதி சதுர்த்தி உற்சவம் மாலை 5 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து மூலமூர்த்தி பூஜை வசந்தமண்டப பூஜையுடன் விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவார். (இ

## இருவேறு விபத்துக்களில் சிக்கிய மூவர் வைத்தியசாலையில் அனுமதி

இரு வெவ்வேறு விபத்துக்களில் சிக்கி படுகாயமடைந்த மூவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் வல்வைச் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் உடுப்பிட்டியை சேர்ந்த இ.ஜெபன்சன் (வயது-33), இராஜ கிராமத்தைச் சேர்ந்த கி.விஜயபாலன் (வயது-58) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

இதன்பின்னர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நண்பகல் வேளை நெல்லியடி மாலுசந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் ஆட்டோ விபத்தில் சி.பிரபாகரன் (வயது-35) என்பவர் காயத்திற்குள்ளானார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5-60)

## 1008 சங்காபிஷேகம்

இருபாலை கிழக்கு, அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி பிள்ளையார் ஆலய அலங்கார உற்சவ பூர்த்தி விழா இன்று 20 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. 1008 சங்காபிஷேகமும் அன்னதானமும் நடைபெற்று மாலை திருவூஞ்சல் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (இ

# யாழ். பொலிஸாரின் ஏற்பாட்டில் போட்டிகள்







(படங்கள்:உ.சாளின்)

யாழ்ப்பாணம் பொலிஸாரின் ஏற்பாட்டில் சித்திரைப்புத்தாண்டு நிகழ்வுகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்றது. காலை முதல் மாலை வரை சைக்கிள் ஓட்டம்,மரதன் ஓட்டம், அழகு ராணி போட்டி, கிறீஸ் மரம் ஏறுதல், தலையணை சமர், சட்டி உடைத்தல், விநோத உடை போட்டி, சங்கீத தொப்பி மாற்றல், யானைக்கு கண் வைத்தல், பணிஸ் சாப்பிடுதல், பலூன் உடைத்தல், தேங்காய் துருவுதல், கயிறு இழுத்தல், றபான் அடித்தல், சாக்கு ஓட்டம், என்பன இடம்பெற்றன.

இப்போட்டிகள் திறந்த போட்டிகளாகவும் ஆண் பெண் குழந்தைகளுக்குமான போட்டிகளாகவும் அமைந்ததுடன் உள்ளூர் போட்டியாளர்கள், பொலிஸாரின் குடும்பத்தினர் அதிகளவாக பங்குபற்றினர். இந்நிகழ்விற்கு வட மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் பெர்னாண்டோ ,பொலிஸ் உயரதிகாரிகள்,அரச அதிகாரிகள் பலரும் விருந்தினர்களாக கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களை வழங்கினர். இந்நிகழ்வில் நடைபெற்ற கயிறு இழுத்தல் போட்டியல் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய ஆண்கள் அணி சம்பியனாகியது.

ஆண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டி பொலிஸ் நிலையங்களிற்கு இடையே நடைபெற்றன. இறுதி சுற்றுக்காக கயிறு இழுத்தல் போட்டியில் யாழ்ப்பாண பொலிஸ் அணியும் வட்டுக்கோட்டை பொலிஸ அணியும் போட்டியிட்டன. இறுதியாக யாழ்ப்பாணம் பொலிஸ் அணி கயிறு இழுத்தல் போட்டியில் சம்பியனாகியது. இதில் உப பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீ கஜன் அணியை வழிநடத்தி சென்றதுடன் அணியின் சார்பாக பரிசில்களையும் பெற்றுக்கொண்டார். (இ-4)

# மகனை சித்திரவதைக்குட்படுத்திய தாய், தந்தைக்கு சிறைத்தண்டனை

(கொழும்பு)

பெற்ற மகனை மிகவும் கொடூரமாக நடத்திய தாய் மற்றும் தந்தைக்கு நீதிமன்றம் சிறைத்தண்டனை மற்றும் அபராதம் விதித்துள்ளது.

நீர்கொழும்பு உயர்நீதிமன்றம் அண்மையில் இந்த தண்டனையை விதித்துள்ளது.

14 வயதான பாடசாலை மாணவர் ஒருவரை தாயும் தந்தையும் மிகவும் கொடூரமான முறையில் தாக்கி சித்திரவதைக்கு உட்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

சம்பவத்துடன் தொடர்புடைய பெற்றோருக்கு இரண்டு ஆண்டுகால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, அந்த தண்டனை பத்தாண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்டதுடன், 5000 ரூபா அபராதம் செலுத்துமாறும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீர்கொழும்பு உயர்நீதிமன்ற நீதவான் ஜானகீ ஜயரட்ன இந்த தண்டனையை விதித்துள்ளார்.

கே.ஏ.சுதேஸ் லக்மால் என்ற தரம் 8இல் கல்வி கற்று வந்த மாணவரை பெற்றோர கொடூரமாக தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

2006ஆம் ஆண்டு மாரச் மாதம் 19ஆம் திகதி குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொடகமுவ உடவெல வீதியைச் சேர்ந்த தம்பதியினரே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளனர்.

இந்த பெற்றோர் இருவரும் கடுமையாக சட்டவிரோத மதுபானம் (கசிப்பு) அருந்தும் பழக்கத்திற்கு அடிமையாகியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு உணவு சாப்பிட முன்னதாக சட்டவிரோத மதுபானம் வாங்கிக் கொணடு வந்து தருமாறு தரம் 8இல் கல்வி கற்ற மாணவரை பெற்றோர் வற்புறுத்தியுள்ளனர்.

இதனை மறுத்த மாணவரின் கை, கால்களை கட்டிய பெற்றோர் கம்பி ஒன்றை சூடாக்கி கால்களை சுட்டு, உப்பு தடவி வீட்டைச் சுற்றி இழுத்துச் சென்றுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் மாணவர் மடம்பெல்ல பாடசாலையில் தரம் 8இல் கல்வி கற்று வந்துள்ளார், மறுநாள் குறித்த மாணவர் சம்பவத்தை பாடசாலையின் அருட் சகோதரி ஒருவரிடம் கூறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்து வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (இ-5)

# கல்வி நிர்வாக சேவையாளர்கள் இன்று சுகயீன லீவுப் போராட்டம்

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவையாளர் சங்கம் இன்று நாடு தழுவிய ரீதியில் சுகயீன லீவுப்போராட்டம் ஒன்றை கல்வி அமைச்சு இசுறுபாயவுக்கு முன்னால் முன்னெடுக்கவுள்ளது.

இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவை, இலங்கை கல்வி நிர்வாக சேவை இலங்கை கல்வியியலாளர் சேவை ஆகிய வகுதிகளைச் சேர்ந்தவர்கள் அரசியல் ரீதியான நியமனங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டவர்களுக்கு நிவாரணம் கோரியும் இந்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இந்த சுகயீன லீவுப் போராட்டத்தில் வடமாகாண கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களும் இணைந்து கொள்ளவுள்ளனர். (3)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

| |
|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 4.75<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: B/5764 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 13சூரிசெவ் 10 இல்<br>உயரம் 6'<br>தகைமை/தொழில்: BSc, MSc/QS<br>அவுஸ்திரேலியா குடியுரிமை<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/5766 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 30<br>உயரம்: 168cm<br>தகைமை/தொழில்:BSc, MSc/ஆசிரியர்<br>தொ.இ: B/5768 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கி.பா: 16 செவ் 1 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:O/L/அரசதொழில<br>தொ.இ: B/5769 |

இவர்களுக்கு மணமகன் தேவை

| |
|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 52 செவ் 8 இல்<br>உயரம்: 5<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5018 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 11செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5024 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 32செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: G/5027 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 28 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5036 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# வீண்பழி சுமத்தாதீர்கள்

கல்விப்பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையில் 2014, 2015 ஆம் ஆண்டுகளில் வடக்கு மாகாணம் பின்னிலைக்குச் சென்றமைக்கு அதிபர்கள், ஆசிரியர்களே பொறுப்பு என குற்றம் சுமத்துவதை ஏற்க முடியாது. அதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

முன்னைய காலத்தில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் ஒருவரின் தலைமையில் வட்டாரக்கல்வி அதிகாரிகளின் மேற்பார்வையில் வடக்கு மாகாணம் கலவியில் மேலோங்கி இருநததனை எவரும் மறுக்க முடியாது. அப்போது வட கிழக்கு மாகாணம் இணைந்திருந்து அந்த இணைந்த மாகாணத்தின் வெற்றிகளை வடக்கு மாகாணம் பாதுகாத்து வந்தமையை எவரும் மறந்துவிட முடியாது.

அதன் பின்னர் நிர்வாக பரவலாக்கம் தொடங்கி பல நூறு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இன்று வடக்கு மாகாணத்தின் நிலை கவலைக்கிடமாக மாறியுள்ளது.

இந்த தோல்விக்கு எல்லோரும் வாய்க்கு வந்தபடி அதிபர்களையும், ஆசிரியர்களையும் குறைசொல்லி தப்பிக்க நினைப்பது. எல்லோரையும் முட்டாள்களாக்கும் செயற்பாடு மட்டுமன்றி மக்கள் மத்தியில் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் செயறபாடு என சங்கம் கண்டிக்கிறது.

உதாரணமாக கிளிநொச்சி கல்வி வலயம் இலங்கையில் உள்ள கல்வி வலயங்களில் கடைசி இடத்தில் உள்ளது. இதற்கு என்ன காரணம் என்பதனை ஆராயாமல் அதிபர்கள், ஆசிரியர்களை குறைசொல்வது எவ்வகையில் நியாயமானது.

2005ஆம் ஆண்டிற்குப் பின்னர் புதிய நியமனம் கிடைத்த வினைத்திறன் உள்ள அனைத்து ஆசிரியர்களும் கிளிநொச்சி வலயத்திற்கு நியமிக்கப்பட்டனர். இன்று வரை அந்த நடைமுறை தொடர்ந்த வண்ணமே உள்ளது. அவ்வாறிருக்க அக்கல்வி வலயம் கடைசி இடத்திற்குச் செல்வதற்கு என்ன காரணம் என்பதனை ஆராய்வதனை விட்டு விட்டு வீண்பழி சுமத்துவதை பழி சுமத்துவோர் நிறுத்திக் கொள்ள வேண்டும் என மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ)

# இராசி பலன்

20.04.2016
(சித்திரை 07, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
திரயோதசி காலை 7.04 மணிவரை
அத்தம் பின்னிரவு 4.47 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை

வளவன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
பூரட்டாதி

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி புத | | |
| கேது | | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | சந் |

**மீனம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், களஸ்திர நன்மையுண்டு.

**மேடம்:** தொழிலில் இருந்த மறைமுக எதிர்ப்புகள் மாறும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.

**இடபம்:** அரசு வழியில் அனுகூலமுண்டு, அருமையான நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மிதுனம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாக மடைவீர்கள், பொதுக்காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள், பண வரவு திருப்திதரும்.

**கும்பம்:** குடும்பத்தினரிடம் பேசும் போது விட்டுக்கொடுத்து நடப்பது நல்லது, முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம், அமைதிக் குறைவான நாள்.

**கடகம்:** பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்:** போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்றோர்களின் ஒத்தாசைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** தொழில் ரீதியாக புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், உற்சாகமான நாள்.

**விருச்சிகம்:** பணத் தேவைகள் பூர்த்தியாகும், விருந்தினர்களின் வருகையுண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**துலாம்:** புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், கூட்டாளிகளிடம் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி:** பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது.





முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கென புலம்பெயர் உறவுகளால் 85 மில்லியன்ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய ஆண்கள் விடுதிக்கான கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. மாலை 3.00 மணிக்கு இடம்பெற்ற இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் புதிய கட்டடத்தை திறந்துவைத்தார். இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பினர்களான ரவிகரன், சிவநேசன், கமலேஸ்வரன், பிரதி அவைத்தலைவர் அன்ரனிஜெகநாதன் மற்றும் நிதி அன்பளிப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# கிளிநொச்சியில் 5 ஏக்கர் வயல் காணியை வாங்கி விடுதி அமைக்க முற்படுகின்ற இராணுவ அதிகாரி

## செய்தி வெளிவந்தால் உயிரிருக்காது என அச்சுறுத்தல்– சிறிதரன் எம்.பி.ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

ஊடகவியலாளர் ஒருவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை மற்றும் அது தொடர்பான முறைப்பாட்டை பொலிஸார் ஏற்க மறுத்தமை ஆகியவை தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள மருத நகர், கிளிநொச்சி எனும் முகவரியில் வசிக்கும் தர்மலிங்கம் பரமசிவம் என்ற ஊடகவியலாளருக்கே இராணுவத்தினரால் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மருத நகர் கிராம அலுவலர் பிரிவின் ஐந்து ஏக்கர் வயல் நிலமொன்றை கொள்வனவு செய்த இராணுவ அதிகாரி ஒருவர், உல்லாச விடுதியொன்றை அந்நிலத்தில் அமைப்பதற்காக கமநல சேவைகள் திணைக்கள சட்டங்களுக்கு முரணாக வயல் நிலத்தில் மண்ணை நிரப்பி, குடியிருப்பு நிலமாக மாற்றம் செய்துள்ளார்.

அவ்வாறு மாற்றம் செய்வதற்கு மற்றுமொரு வயல் நிலத்திலிருந்தே 200 டிப்பர் மண்ணை அகழ்ந்து பயன்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் உண்மையைக கண்டறிவதற்காக குறித்த இடத்திற்குச் சென்ற ஊடகவியலாளர் தர்மலிங்க பரமசிவத்தை அங்கிருந்த இராணுவக் குழுவினர் மோசமாக நடத்தியதுடன், "இந்த சட்டவிரோத செயல்கள் குறித்த செய்தி வெளிவருமானால், நீ உயிருடன் இருக்க மாட்டாய்" என அச்சுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் குறித்த ஊடகவியலாளர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த போது குறித்த முறைப்பாட்டை ஏற்க மறுத்த பொலிஸார், இராணுவ குழுவினருடன் சமரசம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தியுள்ளனர். இந்நிலைமை சட்டத்தின் நீதி குறித்து அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

ஜனநாயகத்தின் பிரதான வெளிப்பாடான ஊடக சுதந்திரம் மிளிர்கின்றது. கடந்த ஆட்சிக்காலத்தில் ஊடகத்துறை மீது மேற்கொள்ளப்பட்ட சர்வாதிகார செயல்களில் இருந்து, மீண்டும் ஜனநாயத்தின் நான்காவது தூணாக ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத் துறையினரது சுதந்திரம் உறுதி செய்யப்பட வேண்டும்.

சட்டத்தின் ஆட்சியை உரிய முறையில் அதிகாரிகள் சரிவரக் கடைப்பிடிக்காதவரை நல்லாட்சியின் பிரதிபலிப்புக்களை மக்கள் உணரப்போவதில்லை.

எனவே குறித்த சம்பவம் தொடர்பாக உடனடியானதும், உண்மையானதுமான விசாரணையொன்றை நடத்த தாங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் இக்கடிதத்தினை சமர்ப்பிக்கின்றேன் என அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (3-400)




## கவின்கலைக் கல்லூரியில் முழுநிலவு கலை விழா நாளை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி காவேரி கலாமன்றத்தின் நிதியுதவியில் பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக் கல்லூரியும் யோகர் சுவாமிகள் நற்பணி மன்றமும் இணைந்து நடத்தும் மாதாந்த முழு நிலவு கலை விழா நாளை வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் இயக்குநர் க.சவுந்தரராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக காவேரி மன்றத்தின் இயக்குநர் வண. கலாநிதி.ரி.எஸ்.யோசுவாவும், ஓய்வு பெற்ற மருத்துவர் க.சிதம்பரநாத னும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திட்டமிடல்பணிப்பாளர்க.மோகனபவன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுபெற்ற விரிவுரையாளர் திருமதி.சிதம்பரநாதன் தர்மபூபதி, கரைச்சி பரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கு.ரஜீவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நடனம், வயலின் இசை மற்றும் கலை நிகழ்வுகள் என்பனவும் இதில் இடம்பெறவுள்ளன. (3-277)

## கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கும் பயிற்சிநெறி நேற்று ஆரம்பம்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பிலான கற்கை நெறி நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள் உட்பட பலர் பங்கு கொண்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திகள் தொடர்பில் கிராமங்கள் தோறும் முன்னெடுக்க வேண்டிய அபிவிருத்தி பணிகள் தொடர்பில் அறிக்கை தயாரிக்கும் வகையிலான பயிற்சி நெறி ஆரம்ப நிகழ்வு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கிராம சேவையாளர்கள் தலைமையில் ஒவ்வொரு கிராமத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திகள் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிராமங்களின் அபிவிருத்தி தொடர்பில் எவ்வாறு அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பது என்பது தொடர்பான பயிற்சிகள் கிராம சேவகர்களுக்கும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் இடம்பெறவுள்ளது. வெள்ளி, சனி ஆகிய தினங்களில் இப் பயிற்சிகள் பிரதேச செயலக ரீதியாக வழங்கப்படவிருக்கிறது.

இப் பயிற்சிகளின் பின்னர் கிராமங்கள் ரீதியாக கிராம சேவகர்கள் தலைமையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இவ்வாறு தயாரிக்கப்படும் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் மாவட்டத்தின் அபிவிருத்தி திட்டமாக முன்மொழியப்பட்டவிருக்கிறது.

# 'கலாசாரம் தகர்க்கும் கலாசாரம்' மாற்றுவலுவுடையோர் நிகழ்வு



(பனிக்கன்குளம்)

முள்ளியவளை றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் மாற்றுவலுவுடைய மற்றும் வலது குறைந்த சிறார்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

சைல்பீல்ட் (Childfield) மற்றும நிதர்சனம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 3 மணி முதல் மாலை 6 மணிவரை நடைபெற்றது.

"கலாசாரம் தகர்க்கும் கலாசாரம்" என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வில் இப் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் அனைத்து மாற்றுவலுவுடைய மற்றும் வலது குறைந்த சிறார்களும் அவர்களுடைய பெற்றோர்களும் பங்குபற்றியிருந்தனர்.

முட்டி உடைத்தல், கரும்பு முறித்தல, கிடுகுபின்னுதல், கோலம் போடுதல், பலூன் உடைத்தல், கண்ணைக கட்டிக்கொண்டு வரையப்பட்ட யானை உருவத்திற்கு கண் வரைதல் போன்ற பல விளையாட்டுக்கள் நடைபெற்றதுடன் போட்டியில் வெற்றிபெற்ற அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்களும் அத்துடன் கைவிசேடமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-281)




இயக்கச்சி கரந்தாயில் நேற்று முன்தினம் தமது காணிகளுக்கு எல்லையிட முயன்ற பொதுமக்களை தடுத்து கைது செய்ய முயன்ற பொலிஸாருடன் பொது மக்கள் முரண்படுவதையும் அங்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனுடன் பொலிஸார் தர்க்கிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட யோசனைகளை கவனத்தில் எடுத்து செயற்பட வேண்டிய நேரம் வந்துள்ளது

## கூட்டமைப்பு எம்.பி. சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு



(மாந்தை)

**தமிழ் மக்களினுடைய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வைக்காண வேண்டிய இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் பேரவையினாலும், வடமாகாண சபையினாலும் தனித்தனியே முன்மொழியப்பட்ட தீர்வுத்திட்ட யோசனைகளை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு சாதகமாகப பரிசீலிக்கும் என்று தாம் எதிர்பார்ப்பதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே சிவசக்தி ஆனந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்,

நீண்டகாலமாக தமிழ் மக்கள் தமக்கான தீர்வு என்ன என்பதை முழுமையாகக் கூறவில்லை என்று பலராலும் குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், குறிப்பாக பிரதமரும் முக்கிய அமைச்சர்களும் தமிழ் தேசியக்கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கான தீர்வு என்ன? என்பதை முன்வைக்கவில்லை என்று குறை கூறியுள்ள நிலையில், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவராகவும் வடமாகாண முதலமைச்சராகவும் திகழும் சி.வி.விக்னேஸ்வரனால் முன்வைக்கப்பட்டிருக்கின்ற தர்வுத்திட்ட யோசனைகளை நாம் கவனத்தில் எடுத்து செயற்பட வேண்டிய நேரம் வந்துள்ளதுஎன்றுதெரிவித்தார்.

கலந்துரையாடலில் கலந்துகொண்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பாராளுமன்ற உறுப்பினரிடம் தமது பிரதேசங்களின் குறைகளையும் தேவைகளையும் முன்வைத்தனர். நீண்டகாலமாக மிகவும் மோசமாக சேதமடைந்துள்ள போக்குவரத்து பாதைகள் புனரமைத்து தரப்பட வேண்டும். மல்லாவி பொலிஸ் நிலையத்தின் காணியில் ஒரு பகுதியை (மூன்றரை ஏக்கர்) பிரதான பேருந்து நிலையத்துக்குப் பெற்றுத்தர வேண்டும்.

மல்லாவி சந்தை கட்டடத்தொகுதியில் ஏற்கனவே சந்தையில் கடை வைத்திருந்தவர்களுக்கே முன்னுரிமை வழங்க வேண்டும். மல்லாவி பொலிஸாரின இலஞ்சம் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை உடனடியாக தடுத்து நிறுத்த வேணடும். ஆலங்குளம் பொது நோக்கு மண்டபம், முன்பள்ளி கட்டடம் அமைந்துள்ள ஒரு ஏக்கர் காணியை விடுவித்து தரவேண்டும்.

மத்திய மாகாண அரசுகள் அரச நியமனங்கள் வழங்கும்போது மாவட்ட அடிப்படையில் வெற்றிடங்களுக்கு ஏற்ப வழங்க வேண்டும். பிரதேசத்தில் குறையாக உள்ள மின்சார வேலைகளைப் பூர்த்தி செய்து தரவேண்டும். மல்லாவியில் ஒரு கலாசார மண்டபம் கட்டித்தரவேண்டும். வடமாகாணத்தின் தலைநகரமாக மாங்குளத்தை அமைக்க வேண்டும்.

மாகாண அமைச்சர்கள் மாவட்டங்களுக்குச் செலவு செய்த பணத்தை மாவட்ட ரீதியாக வெளிப்படுத்த வேண்டும். வவுனிக்குளத்திலிருந்து தென்னியங்குளத்துக்கு ஏறறு நீர்ப்பாசனத் திட்டம் அமைத்து தரவேண்டும்.

பிரதேசத்துக்கான மரண விசாரணை அதிகாரி, துணுக்காய் வலயத்துக்கான நிரந்தரமான வலயக்கல்வி பணிப்பாளர் ஆகியோர் நியமிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து தீர்வை பெற்றுத்தருமாறு கேட்டுக்கொண்டனர்.

இந்த நிகழ்வில் மாந்தை கிழக்கு முன்னைநாள் தவிசாளர் தணிநாயகம், உபதவிசாளர் செந்தூரன், அதிபர்கள், ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்கள், மல்லாவி மனிதநேய இளைஞர் மன்ற உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (3-4-250-281)

## முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் கீழ் ஆயிரத்து 400 ஏக்கரில் சிறுபோக பயிர்ச் செய்கை

முள்ளியவளை கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட 13 நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் நடப்பாண்டில் சிறுபோகப் பயிர்ச் செய்கையாக நெற்செய்கை ஆயிரத்து 400 ஏக்கரிலும் உப உணவுப் பயிர்ச் செய்கையாக கச்சான் 104 ஏக்கரிலுமாக மொத்தம் 1504 ஏக்கரில் இம் முறை சிறுபோகப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக முள்ளிவளை கமநலசேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் இராஜரட்ணம் சுகந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், நீர்ப்பாசன குளங்களான கணுக்கேணி குளத்தின் கீழ் 669 ஏக்கர், மதவாளசிங்கன் குளத்தின் கீழ் 357 ஏக்கர், நீராவி குளத்தில்100ஏக்கர்,சீனியாமோட்டை குளத்தின் கீழ் 30 ஏக்கர், முள்ளியவளை வடக்கு குஞ்சுக்குளத்தின் கீழ் கழிவு நீரைப் பயன்படுத்தி பள்ள வெளியில் 50 ஏக்கர், கண்டன்கரை பரவகந்தையில் 40 ஏக்கர், கீச்சுக் குளத்தின் கீழ் 26 ஏக்கர், பெரிய புளியங்குளம் 10 ஏக்கர், புதுரிக்குடா குளத்தின் கீழ் 30 ஏக்கர், நாவற்காடு ஊற் றுக்குளத்தின் கீழ் 40 ஏக்கர், முள்ளிய வளை வடக்குக் குஞ்சுக் குளத்தின் கீழ் 44 ஏக்கருமாக மொத்தம் ஆயிரத்து 400 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. இதேபோல் ஆராய்ச்சி முறிப்பு குளத்தின் கீழ் 45 ஏக்கர், பாவெட்டிக் குளத்தின் கீழ் 25 ஏக்கர், கேப்பாபிலவு பிரம்படி வெளிக்குளத்தின் கீழ் 11 ஏக்கர், கீச்சுக் குளத்தின் கீழ் 13 ஏக்கர், பெரிய புளியங்குளத்தின் 10 ஏக்கர் என மொத்தம் 104 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கையாக கச்சான் பயிரிடப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (3-15)




## ‘ஒளிரும் வாழ்வு’ அமைப்பிற்கான புதிய கட்டடத்திற்கு அடிக்கல்

### 13 துவிச்சக்கரவண்டிகளும் அன்பளிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 267 மாற்றுத் திறனாளிகளின் மருத்துவ, கல்வி, சமூக, பொருளாதார பண்பாட்டு விழுமியங்களை கட்டிக் காக்கும் அமைப்பாக 2012 ஆம் ஆண்டு தை மாதம் உருவாக்கப்பட்ட **ஒளிரும் வாழ்வு** அமைப்பானது இதன் அங்கத்தவர்களுக்கு பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது

இதன் வளர்ச்சியின் ஒரு கட்டமாக இந்த அமைப்பிற்கான ஒரு கட்டடத்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முற்பகல் 10 மணிக்கு மல்லாவியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்ட வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா முதலாவது அடிக்கல்லினை நாட்டி வைத்தார்.

இத்தோடு துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் மல்லாவி மத்திய கல்லூரியில் இயங்கி வரும் விசேட தேவையுடையவர்களின் பிள்ளைகளின் போக்குவரத்து வசதிக்காக 13 துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் துணுக்காய் பிரதேச செயலாளர், பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.(3-281)

## அழுத்தம் பிரயோகித்த அரசாங்க ஊழியர்கள்; உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அறிவிக்குக மன்னார் நீதவான் உத்தரவு

(மன்னார்)

மன்னாரில் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் கல்வி கற்பதற்காக வந்த மாணவி ஒருவருக்கு பாலியல் தொந்தரவினை கொடுத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு சநதேகத்தின் பேரில் கைதான கல்வி நிறுவன இணைப்பாளரது பிணை மனு இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் அவரது விளக்கமறியல் எதிர் வரும் 2ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உத்தரவினை மன்னார் நீதவான் நீதிமன்ற நீதவான் ஜீ.அலெக்ஸ்ராஜா பிறப்பித்து ள்ளார்.

மன்னார் நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் இணைப்பாளராக கடமையாற்றும் நபர் ஒருவர் கல்வி கற்பதற்கு வந்த மாணவியொருவரை பாலியல் ரீதியிலான தொந்தரவுக்குள்ளாக்கினார் என்ற குற்றஞ்சாட்டப்பட்ட முறைப்பாட்டுக்கெதிரான வழக்கு நீதவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அவ்வேளையில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக மன்றில் தோன்றிய சட்டத்தரணிகள் குறித்த சந்தேக நபரு க்கு சார்பாக பல வழிகளில் பாதிக்கப்பட்டவரையும் அவரது குடும்பத்தவரையும் குறத்த வழக்கிற்கான முறைப் பாட்டினை மீள கைவாங்கிக்கொள்ளுமாறு செல்வாக்கு செலுத்தியதாக மன்றிற்கு முறையிட்டதுடன் அது தொடர்பாக பாதிக்கப்பட்டவரது தந்தையாரது முறைப்பாட் டினை ஒரு சத்தியக்கடதாசி வடிவில் மன்றுக்கு தாக்கல் செய்தனர்.

இதில் குறிப்பாக மன்னார் மாவட்ட பிரதேச செயலாளர், மன்னார் பிரதேச செயலகத்தில் கிராமசேவையாளர்கள் பிரிவிற்கு மேற்பார்வை உத்தியோகத்தராக கடமை செய்யும் உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் சந்தேக நபரது மாமியார், நணபர் போன்றோர் சாட்சிகளையும் பாதிக்கப்பட்டவரையும் பாதிக்கப்பட்டவரது குடும்பத்தினரையும் தனது அதிகாரத்தினை பயன்படுத்தி முறைப்பாட்டினை மீளப் பெறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே இவ் வழக்கு நீதிமன்றில் விசாரணையில் இருக்கும் போது சாட்சிகளை அச்சுறுத்தும் முயற்சியில் ஈடுபட்ட சந்தேக நபர் நீதிமன்ற நடவடிக்கைகளை முடக்கும் செயலில் ஈடுபட்டுவருகின்ற நிலையில் சந்தேக நபர் இச்சூழ்நிலையில் பிணையில் இருப்பது சாட்சிகளுக் கும் பாதிக்கப்பட்டவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அச்சுறுத்தலான ஒரு விடயம் என மன்றுக்கு தெரிவிக்கப் பட்டது.

இதனையடுத்து மன்னார் மாவட்ட நீதவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா இவ்வழக்கின் விசாரணையினை மனனார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரினது நேரடி கண்காணிப்பின் கீழ் சரியான விதத்தில் மேற்கொண்டு மன்றிற்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி கட்டளையிட்டதுடன் நீதிமன்ற விசாரணையினை குழப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பான விசாரணையினை மேற்கொண்டு மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படியும், அவ்வாறு நீதிமன்ற நடவடிக்கைக்கு இடையூறு விளைவிப்பது உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும்படியும் கட்டளையிட்டார்.

இத்துடன் குறித்த பிரதேச செயலாளர் மற்றும் மன்னார் பிரதேச செயலகத்தில் கிராமசேவையாளர்கள் பிரிவிற்கு மேற்பார்வை உத்தியோகத்தராக கடமை செய்யும் குறித்த உத்தியோகத்தர் போன்றோரது செயற்பாடு தொடர்பாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கும்படியும் கட்டளையிடப்பட்டது.

அத்துடன் மன்னார் மாவட்டத்தில் இயங்கும் சகல தனியார் கல்வி நிலையத்தையும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தருடன் இணைந்து மன்னார் பெண்கள், சிறுவர் பொலிஸ் பிரிவினர் மேற்பார்வை செய்ய வேண்டும் என்பதுடன் வாரநாட்களில் வெள்ளிக்கிழமை மாலையிலும் ஞாயிற்றுக்கிழமையிலும் தனியார் வகுப்புக்கள் இடம்பெறக் கூடாது எனவும் நீதவான் கட்டளையிட்டார்.

சந்தேக நபருக்கு வழங்கப்பட்ட பிணை இரத்து செய்யப்பட்டு அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் வழக்கு மேலதிக வசாரணைக்காக மே மாதம் 02ஆம் திகதி எடுத்துக் கொள் ளப்படவுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக சட்டத்தரணிகள் அன்ரன் புனிதநாயகம் ,திருமதி. மங்களேஸ்வரி சங்கர், ரனித்தா ஞானராஜா மற்றும் த.வினோதன் ஆகியோர் மன்றில் வாதித்திட்டிருந்தனர். (செ-9)

# சுதந்திரக்கட்சியின் மே தினக் கூட்டத்தில் பங்கேற்குமாறு மகிந்தவுக்கு அழைப்பு

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு முன்னாள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று முன்தினம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும், நீரியல், மீன்பிடி வளத்துறை அமைச்சருமான மகிந்த அமரவீர இந்த அழைப்பை தொலைநகல் மூலம் மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேதினக் கூட்டம் இம்முறை காலியில் நடை பெறவுள்ளது.

அதே நேரம் மகிந்த ஆதரவு அணியான கூட்டு எதிர்க்கட்சியின் மே தினக் கூட்டம் கொழும்பு, கிருலப்பனையில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் தனக்கு சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்படாத நிலையில் தான் கூட்டு எதிர்க்கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.



இதனையடுத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை அமைச்சர் மகந்த அமரவீர, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்பொதுச செயலாளர் என்ற வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான மே தினக் கூட் டத்தில் கலந்து கொள்ளுமாறு மகிந்தவுக்கு அழைப்பு விடுக்கும் தொலைநகல் செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

கட்சி பிளவுபடுவதைத் தவிர்த்து, எதிர்வரும் தேர்தல்களில் சுதந்திரக் கட்சியை வலுப்படுத்துவதற்கு ஆதரவளிக்குமாறும் குறித்த செய்தியில் மகிந்த அமரவீர முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-5)

## ஐரோப்பிய ஒன்றியத்தின் மீன் ஏற்றுமதித் தடை அடுத்த வாரம் நீக்கம்

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை மீது விதித்துள்ள மீன் ஏற்றுமதித் தடை அடுத்த வாரமளவில் நீக்கப்படவுள்ளதாக நம்பகமான தகவல் வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது. இந்தத் தடை நக்கம் குறித்த அறிவிப்பை அடுத்த வாரம ஐரோப்பிய நாடாளுமன்றம் விடுக்கவுள்ளது.

குறித்த தடைவிதிப்பின் காரணமாக சுமார் மூன்று ஆண்டுகளாக ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடுகளுக்கு மீன் ஏற்றுமதி செய்ய முடியாத நிலையை இலங்கை எதிர் கொண்டிருந்தது.

இலங்கை மீன்பிடித் தொழிலில் சர்வதேச சட்டதிட்டங்களை மீறி நடப்பதாக குற்றம் சாட்டியே இத்தடை விதிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் கடல்பரப்பில் சீன மீன்பிடி வள்ளங்கள் இலங்கைக் கொடியுடன் மீன்பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததும் இதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்துடன் தொடர்ச்சியாக மேற்கொண்ட கலந்துரையாடல்களின் மூலமாக மீன் ஏற்றுமதித் தடையை நீக்க ஐரோப்பிய ஒன்றியம் இணங்கியுள்ளது.

எனினும் சர்வதேச கடல் பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் போது சர்வதேச சட்டதிட்டங்களை மதித்து நடக்க வேண்டுமென்ற கடுமையான நிபந்தனை இலங்கை மீது விதிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-5)

தலைக்கு எண்ணெய் வைக்கும் நிகழ்வில்

## நீரில் மூழ்கி நால்வர் பலி

(கொழும்பு)

பிறந்துள்ள புதுவருடத்தையொட்டி கடந்த சனிக்கிழமை நடந்த தலைக்கு எண்ணெய் வைத்து நீராடும் நிகழ்வில் நீரில் மூழ்கிய நால்வர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

இதன்படி அத்தனகல்ல ஓயூாவில் திஹாரிய பிரதேசத்திலும் கொன்கஹவத்த பிரதேசத்திலும் நீரில் மூழ்கிய 17 மற்றும் 34 வயதான இருவர் ஆபத்தான நிலையில் வத்துபிட்டிவல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

கினிகத்தேனை யட்டி பேரிய பிரதேசத்தில் களனி கங்கையில் நீராடிக் கொண்டிருந்த ஒருவரும் (வயது 27), கொக்கரெல்ல மெல் சிரிபுரயிலுள்ள ஹோட்டலொன்றின் நீச்சல் தடாகத்தில் மூழ்கிய ஒருவரும் (வயது 27) உயிரிழந்திருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)

## கூட்டு எதிரணியின் மே தினக் கூட்டத்தில் பங்கேற்கும் மகிந்த முடிவில் மாற்றமில்லை

அழைப்பில்லாமல் திருமண வீட்டிற்குச் செல்வது முறையற்றது. அந்த வகையில், எதிர்வரும் மே தினத்தில் கூட்டு எதிர்க்கட்சியின் அழைப்பை ஏற்று கொழும்பில் இடம்பெறும் கூட்டு எதிரணியின் மே தின கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினம் என்பது கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்ட தொழிலாளர்களின் நலனை உறுதி செய்யும் தினமாகும். எனவே குறிப்பிட்ட கட்சியின் மே தின கூட்டத்தில் தான் கலந்து கொள்ள வேண்டும் என யாரும் கட்டளையிட முடியாது. உழைக்கும் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக சவால்களை எதிர் கொண்டு போராடுவோம் எனவும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பத்தரமுல்லையில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அலுவலகத்தில் பால் பொங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே முன்னாள் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி பாதையில் முன்னெடுத்திருநதோம். மிகவும் எளிதாக உண்ணக்கூடிய வகையில் "கேக்"கை தயாரித்திருந்தோம். ஆனால் தற்போதைய அரசாங்கம் திடீரென ஆட்சிக்கு வந்து அனைத்தையும் சீரழித்து விட்டது. அதாவது நாம் தயாரித்து வைத்திருந்த கேக்கை தற்போதைய அரசாங்கம் ஒழுங்காக உண்ண வில்லை. அனைத்தையும் குழப்பிவிட்டது.

நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது. நாட்டு மக்கள் எவ்வாறு புத்தாண்டை கொண்டாடினார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். எனவே பொது மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். எதிர்வரும் மே தினம் தொடர்பாக நாங்கள் செயற்பட்டு வருகின்றோம். கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டு எதிர்க்கட்சியின் மே தின கூட்டத்திற்கு எனக்கு அழைப்பு கிடைத்துள்ளது.

ஆனால் காலியில் நடைபெறவுள்ள மே தின கூட்டம் தொடர்பில் எமக்கு எவ்வித மான அழைப்போ அல்லது அறிவிப்போ இதுவரை கிடைகப்பெறவில்லை. எனவே அழைப்பில்லாமல் திருமண வட்டிற்கு செல்வது முறையல்ல என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைப்பாடாகும்.

மே தினம் என்பது உழைக்கும் மக்களின் உரிமைகளை வலியுறுத்தும் உன்னதமான நாளாகும். இங்கு கட்சி பேதங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க முடியாது. எமது மேதின கூட்டத்திற்கு தான் வர வேண்டும் என்றும் யாரும் கட்டளையிட முடியாது. அன்றைய தினம் உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக போராடுவோம என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## சிவனொளிபாதமலை சென்று வழி தவறிய யாத்திரிகர்கள்

சிவனொளிபாத மலைக்கு யாத்திரை மேற்கொண்டவர்களில் சுமார் 200 பேர் வழிதவறியுள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தாண்டின் பின்னரான காலப் பகுதியில் மாத்திரம் சுமார் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான யாத்திரிகர்கள் சிவனொளிபாத மலைக்கு வருகைத் தந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

ஹற்றன் வழியாக மலை ஏறியவர்கள் வழி தவறி இரத்தினபுரி வழியாக இறங்கிய சம்பவங்கள் பல பதிவாகியுள்ளன.

இவ்வாறு வழி தவறியவர்களில் அதிகளவான சிறுவர்களும் முதியவர்களும் அடங்கியுள்ளனர்.

அதிக சனநெரிசல் காரணமாகவே இவர்கள் வழி தவறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை பொலிஸார் மீட்டு குடும்ப உறவினர்களுடன் சேர்த்து வைத்துள்ளனர்.

யாத்திரை மேற்கொள்ளும் பொழுது முதியோர் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் அதிக கவனத்துடன் இருக்கும் படி நல்லதண்ணி பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5)

## ஆசிரியர் உதவியாளர்களை இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்குங்கள்

2015ஆம் ஆண்டு பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர் உதவியாளர்களை இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள் வாங்குமாறு மத்திய அரசாங்கத்தை கோரும்பிரேரணையை மத்திய மாகாணசபை உறுப் பினர்களான கணபதி கனகராஜ் மற்றும் பழனி சக்தி வேல் ஆகியோர் முன்வைத் துள்ளனர்.

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு ஆசிரியர் உதவியாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு தற்போது 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவு மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன், திட்டமிடப்பட்டு வழங்கத் தீர்மானித்த நியமனங்களில் இன்னும் 800 பேருக்கான நியமனத்தை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதாக கூறப்படுகிறது.

நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற கொடுப்பனவு தொகையை கொண்டு தமது போக்குவரத்து செலவைக் கூட ஈடுசெய்ய முடியாத நிலையில் இந்த ஆசிரியர் உதவியாளர்கள் இருக்கின்றார்கள். இதனால் இந்த தொழிலை விட்டு வெளியேறுகின்றவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டு செல்கின்றது என தெரிவிகப்படுகிறது.

இந்த விடயங்களை கருத்திற் கொண்டு இந்த ஆசிரியர் உதவியாளர்களை இலங்கை ஆசிரியர் சேவை 3.IIற்கு உள்வாங்கி அவர்களுக்கான கொடுப்பனவையும் இலங்கை ஆசிரியர் சேவை 3.IIற்கானதாக பிரகடனப்படுத்த வேண்டும் என மத்திய மாகாணசபையின் உறுப்பினர்களான கணபதி கனகராஜ், பழனி சக்திவேல் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

# SLEAS போட்டி பரீட்சை விடய ஆய்வு வினாக்களுக்கான விடைக்குறிப்புக்கள்



நடராஜா அனந்தராஜ்
B.A.(Hons.), M.A
Dip-In-Edu., Dip-In Jour
SLPS, SLEAS

(நேற்றைய தொடர்ச்சி... பக்கம் 10)

1. இல்லை. பாடசாலையைச் சுற்றிப் பார்வையிடுவதன் மூலம், பின்வரும் சாதகமான விளைவுகள் ஏற்படும்:

❖ பாடசாலையின் இயங்கு நிலையையும், குறைபாடுகளையும் அவதானிக்கலாம்.

❖ பாடசாலையின் ஆளணியினரின் நேர முகாமைத்துவம் பேணப்படும்.

❖ பாடசாலையில் எழும் முகாமைத்துவப் பிரச்சினைகளை அறிந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க உதவியாக இருக்கும்

❖ ஒவ்வொருவரும் உயிர்த் துடிப்புடன் இயங்குவார்கள்

❖ ஒழுங்கு கட்டுப்பாடுகள் பேணப்படுவதை உறுதிப்படுத்தலாம்.

❖ கற்பித்தல் கற்றல் செயற்பாடுகள் இயல்பாகவே எவரும் அறிந்து கொள்ள முடியாதபடி கண்காணிப்புக்குள்ளாக்கப்படுகின்றது.

❖ பாடசாலையின் சுற்றுச் சூழல் பேணப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.

❖ தரவட்டத்தின் செயற்பாடுகளின் ஊடாக கல்வி அபிவிருத்தியை உயர்த்துவதற்கான தொடர் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

2. அதிபர் கையாண்ட முகாமைத்துவ உத்திகள்:

❖ முன்திட்டமிடல்- இனங்காணப்பட்ட பணிகள், ஆளணியினர், பொறுப்புக்கள் தொடர்பானவை

❖ பாடசாலை தொடர்பான முறைமையான அவதானிப்பு (Systematic Observation)

❖ நாளாந்த செயற்பாடுகள் திட்டமிட்டபடி கிரமமாக நடைமுறைப படுத்தப்பட்டமை

❖ பிரச்சினைகள் இனங் காணப்பட்டு விரைவாகக் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு உரிய தீர்வுகள் துரிதமாக எடுக்கப்பட் டன.

❖ தீர்வுகளைத் தீர்மானிக்கும் பொழுது, சம்பந்தப்பட்டவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல்.

❖ ஆசிரியர்கள் பெற்றோருடனான சிறந்த தொடர்பாடல்

❖ பின்னூட்டல் வழங்கப்படுதல்

❖ ஊக்குவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தல். (Motivator)

❖ பங்கேற்றுச் செயற்படுதல். (Participatory Approach)

❖ நடைமுறைப்படுத்தப்பட்டவற்றின் முன்னேற்றத்தையும் தரத்தையும் கண்காணித்துப் பரிசீலித்தல். (Monitoring)

3. அவரது முகாமைத்துவப் பண்புகள் காரணமாகவே சிறந்த உத்திகளை எடுக்கக் கூடியதாக இருந்தது. ஆயினும் அவரிடம் காணப்படும் தலைமைத்துவப் பண்புகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

❖ சிறந்த தொடர்பாடல்

❖ ஆசிரியர்களுடனான நல்லுறவு

❖ பெற்றோருடனான நல்லுறவு

❖ பிறரை ஊக்குவிக்கும் தன்மை

❖ பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்தல்.

❖ கூட்டாகச் செயற்படுதல்

4. அதிபரால் மேற்கொள்ளப்பட்ட சில முன்னேற்றகரமான வேலைத் திட்டங்கள்:

❖ தரவட்டம் அமைத்துச் செயற படுத்துதல்

❖ குறுங்காலச் செயற்றிட்டங்களைச் செயற்படுத்தல்

❖ மெல்லக் கற்போருக்கான பரிகாரக்கல்வி நடவடிக்கைகள்.

5. குறுங்காலச் செயற்றிட்டம், நீண்டகாலச் செயற்றிட்டம்

❖ குறுங்காலச் செயற்றிட்டம் என்பது ஒருவருடத்திற்குள் செய்து முடிக்கப்படவேண்டிய கல்வி அபிவிருத்தி அல்லது உட்கட்டமைப்பு தொடர்பாக வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அமைக்கப்படும் செயற்றிட்டங்களாகும். இவை ஒரு மாதத்திற்குரியவையாகவோ அல்லது ஆறு மாதங்களுக்குரியவையாகவோ அல்லது 1 வருடத்திற்குரியவையாகவோ இருக்கலாம்.

உதாரணமாக வாசிப்புத் திறன் குறைந்த மாணவர்களை வாசிக்கச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயற்றிட்டத்தை 3 மாதங்களுக்குள்பூர்த்தி செய்வதற்காக அமைக்கப்படும் குறுங்காலச் செயற்திட்டத்தைக் குறிப்பிடலாம்.

❖ நீண்டகாலச் செயற்றிட்டம் என்பது உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியாகவோ அல்லது கல்வி அபிவிருத்தி சார்ந்ததாகவோ இருக்கலாம். அவை ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்தைக் கொண்டவையாக இருக்கும். பொதுவாக இவற்றை 5 ஆண்டுத் திட்டம் என்றும் குறிப்பிடலாம். உதாரணமாக, தரம் ஆறு மாணவர்களின் விஞ்ஞான பாட அடைவை உயர்த்துதல் என்ற ஒரு செயற்றிட்டத்தை அமைக்கும் பொழுது, தரம் 6 இல் கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கான சில கற்றல் செயற்றிட்டத்தை தொடர்ச்சி யாக தரம் 11 வரை கொண்டு சென்று க.பொ.த. சாதாரண தரத்தில் தோற்றும் பொழுது அவர்களின விஞ்ஞான பாடத்தின் அடைவு மட்டம் உயர்ந்து காணப்படும்.

❖ ஏற்கனவே வலம்புரியில் வெளியான இவ் வாறான ஒரு குறுங்காலச் செயற்றிட்டத்தை அமைக்கக் கூடிய கான்ற் வரைபடத்திற்கு அமைய குறுங்காலச் செயற்றிட்டத்தைத் தயாரிக்கவும்.

(முற்றும்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மணலிக்கீரை

**Botanical Name**- Gisekia Molluginoides

**Family**- Aizoaceae

**Sinh**- Etirillapala

மணற்பாங்கான இடங்களில் இது அதிகமாகக் காணப்படுவதால் இப்பெயர் வந்தது போலும். வேரினின்றும் நாலா பக்கங்களிலும் பல கொடிகள் சுமார் 15 செ.மீ. தூரம் வரைக்கும் படர்ந்து வளரும். கணுக்களில் வேர் தோன்றுவதில்லை. மிக மெல்லிய கொடிகள் வெண்மையும் பசுமையும் அல்லது மங்கலான சிவப்பு நிறமுடையன.

மிக மென்மையான சிறிய இலையின் நீளம் 5-15 மி.மீ, அகலம் சுமார் 5 மி.மீ ஆகும். சிறிது தடிப்புள்ள இந்த இலை மங்கிய பசுமை நிறமுடையது. சில இலைகளின் நடுவில் மட்டும் கருமை கலந்த சிவப்பு நிறக்கோடுகளைக் காணலாம். இலைகளும் பூக்களும் சேர்ந்தே உள்ளன. இது விரைவில் பூத்துவிடும். பூ மொட்டு சுமார் கடுகளவுள்ளது. பூவின் புறவிதழ் பெரியது.

மங்கலான வெண்ணிறப் பூவிதழ் கடுகின் அரைக்கால் பாக அளவு கூட இராது என்று கூறலாம். கருமை நிறமுடைய உறுதியற்ற கூடுபோன்ற இதன் விதை சுமார் கடுகின் அரைக்கால் பாக அளவேயுள்ளது. இது ஓராண்டுப் பயிராகும்.



இதில் கொடி, காம்பு, இலையின் பின்புற ஓரம், பூவின் புறவிதழ் ஆகியவைகளில் கருமை கலந்த சிவப்பு நிறம் பெற்றுள்ள ஒரு இனமும் இருக்கிறது. ஆனால் பூவிதழ் மட்டும் சிவப்பு நிறம் பெறாமல் மங்கலான வெண்மை நிறத்தை பெற்றே இருக்கும்.

### பரம்பலும் இன விருத்தியும்

யாழ்.மாவட்டத்தில் மட்டுவில் பிரதேசத்தில் இதன் பரம்பல் அதிகமாகக் காணப்படுகின்றது. விதைகள் தூவப் பயிரிடலாம், தானாகவே அதிகமாக பயிராக வளருகின்றது. எனினும் மணல், செம்மண், கலப்புள்ள இடங்களில் அதிகம் காணலாம்.

### 100 கிராம் இலையிலுள்ள சத்துக்கள்

நீர்ச்சத்து- 82.1 கிராம், புரதம்-5.9 கிராம், கொழுப்பு-1.0 கிராம், மாப்பொருள்-2.3 கிராம், கல்சியம்-370 மி.கிராம், பொஸ்பரஸ்-67 மி.கிராம், இரும்பு-12.3 மி.கிராம், சக்தி-22 கிலோயூல்

### மருத்துவப் பயன்கள்

பச்சையாக இருக்கும் போது சிறிதளவு கசப்பும் கரகரப்பும் உள்ள இக்கீரையை சமைக்கும் போது அத்தன்மை குறைந்து நல்ல சுவையுடன் காணப்படும். சக்கை அதிகமில்லை. விதை இல்லாத பூக்கள், இளங்கொடிகளுடன் சேர்த்து 75 கிராம் கீரையை 50 கிராம் முளைக் கீரையுடன் சேர்த்துச் சமைக்கலாம். 125 கிராம் தனிக்கீரையுடன் சிறிது தயிர், தக்காளி, தேங்காய் மட்டும் சேர்த்து சமைக்கலாம்.

இக்கீரை கூடுதலாக பரம்பிக் காணப்படும். மட்டுவில் பிரதேச மக்கள் கூட பசுமாடுகளுக்கே இக்கீரையை தீனியாக பயன்படுத்துகிறார்கள். மக்கள் தமது உணவில் பயன்படுத்துவதில்லை.

ஆரோக்கியத்தை ஏற்படுத்தும் இக்கீரை வகைகளை மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில் தினமும் மாற்றி மாற்றி பயன்படுத்த வேண்டும். நோய்கள் எதுவுமே அணுகாத நிலையையும் எமது உடலில் ஏற்படுத்திக்கொள்ள கீரை வகைகளை கட்டாயம் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

தலைப்பாரம், பீனிசம் உள்ளவர்கள் மணலிக் கீரைச்சாற்றில் அரிசித் திப்பிலிகளை ஊறவிட்டு உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு தேனில் காலை, மாலை சாப்பிட தீரும்.

மணலிக்கீரைச்சாற்றில் வாய் விளங்கத்தை (2) அரைத்து இரவில் சாப்பிட்டால் குடற்புழுக்கள் ஒழியும்.

மணலிக்கீரைச்சாற்றில் சீரகத்தை ஊறவைத்து உலர்த்தி பொடியாக்கி தினமும் காலை, மாலை இரு வேளை 1-2 கிராம் அளவு சாப்பிட அதி உயர் இரத்த அழுத்தம் குணமாகும்.

மணலிக்கீரைச் சாற்றில் உலர்ந்த திராட்சையை ஊறவைத்து அரைத்துச் சாப்பிட்டால் வறட்டு இருமல் குணமாகும்.

இரவில் தூக்கமின்மை இருந்தால் மணலிக்கீரை, கருந்துளசி, வில்வவேர் மூன்றையும் சம அளவு எடுத்து உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு பாலுடன் இரவில் சாப்பிட தூக்கம் வரும்.

இதனால் மார்புச்சளி அகலும். குடற்புழுக்கள் ஒழியும். வாத, கப நோய்கள் தீரும். இக்கீரையை குடிநீரிட்டு 30-60 மில்லி குடிக்க குடலிலுள்ள தட்டைப்புழுக்கள் ஒழியும். பெண்களுக்குஏற்படும்வெள்ளை சாய்தல் நோய்க்கு இக்கீரையை வாரத்திற்கு 3 நாட்கள் சமைத்துண்ணலாம்.

கீரையை வேகவைத்து வெள்ளரிக்காய் சேர்த்து தயிர் கலந்து மிளகுத்தூளிட்டு நன்றாக பிசைந்து தாளிதம் செய்து அவியல் தயாரிக்கலாம். சுவையாக இருக்கும். மலச்சிக்கல், பசியின்மை தீரும், வயிற்றுப்பொருமலும் அகலும்.

சூப் தயாரிக்க இக்கீரையை மற்றைய காய்கறிகளுடன் சேர்த்து மிளகு, உள்ளி சேர்த்து சூப் தயாரித்து பருக உணவு இலகுவில் ஜீரண்மாவதுடன் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

இக்கீரையை குடிநீரிட்டு 30-60 மில்லி அருந்த (தேன் கலந்து) கழிச்சல் தீரும்.

மூட்டுவலிக்கு மணலிக்கீரையை மிளகு, உள்ளி, மஞ்சள், ஓமம் ஆகியவற்றோடு சேர்த்து அரைத்து சாப்பிட்டால் மூட்டுவலி குணமாகும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# 7வது முறையாக அ.தி.மு.க வேட்பாளர்களில் மாற்றம்

7 ஆவது முறையாக அ.தி.மு.க. வேட்பாளர்கள் பட்டியல் மாற்றி அமைக்கப்பட்டுளளது. கோவில்பட்டி, ஈரோடு மேற்கு, ஸ்ரீவைகுண்டம் உள்ளிட்ட 8 தொகுதிகளுக்கு வேட்பாளர்களை மாற்றம் செய்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதில், அமைச்சர்கள் எஸ்.பி.சண்முகநாதன்,ப.மோகன், பி.பழனியப்பன் ஆகிய 3 அமைச்சர்களுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, பாளையங்கோட்டை தொகுதிக்கு அ.தமிழ்மகன், உசேனுக்கு பதிலாக எஸ்.கே.ஏ.ஹைதர் அலி போட்டியிடுகிறார். அரக்கோணம் (தனி) தொகுதிக்கு புதிய வேட்பாளராக சு.ரவியும், திருச்சி கிழக்கு தொகுதிக்கு வெல்லமண்டி நடராஜனும் புதிய வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

பாப்பிரெட்டிப்பட்டி தொகுதிக்கு குப்புசாமிக்கு பதிலாக அமைச்சர் பி.பழனியப்பன், ஈரோடு மேற்கு தொகுதிக்கு வரதராஜனுக்கு பதிலாக முன்னாள் அமைச்சர் கே.வி.ராமலிங்கம் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீவைகுண்டம் தொகுதிக்கு அமைச்சர் எஸ்.பி.சண்முகநாதன், சங்கராபுரம் தொகுதிக்கு அமைச்சர் ப.மோகன், கோவில்பட்டி தொகுதிக்கு ராமானுஜம் கணேசுக்கு பதிலாக கடம்பூர ராஜீவுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. (இ-5)




# ஒடிசாவில் 300 அடி பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்து 27பேர் பலி



ஒடிசா மாநிலத்தின் தியோகார் மாவட்டத்தில் சுமார் 300 அடி ஆழ பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்த கோர விபத்தில் 27 பேர் உயிரிழந்தனர். மேலும் 10இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

ஒடிசா மாநிலத்தின், பர்கார் மாவட்டத்தில் 'பாரதி கானநாட்டியா' என்ற பெயரில் இசை நாடகக் குழு செயற்படுகிறது. இக்குழுவைச் சேர்ந்த சுமார் 40 பேர், இதே மாநிலத்தின் தியோகார் மாவட்டத்தில் கலைநிகழ்ச்சி நடத்திவிட்டு, நேற்று முன்தினம் இரவு பேருந்தில் தங்கள் சொந்த ஊருக்கு திரும்பிக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் குறுகிய வளைவில் பேருந்து திரும்பும்போது, கட்டுப்பாட்டை இழந்து சுமார் 300 அடி ஆழ பள்ளத்தில் கவிழ்ந்தது. இந்த விபத்தை தொடர்ந்து மீட்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நீடித்த மீட்புப் பணியில் 27 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன.

காயம் அடைந்த 10 இற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

விபத்தில் கலைஞர்களின் மறைவுக்கு முதல்வர் நவீன் பட்நாயக் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். (இ-5)

# தேர்தலில் குற்றவாளிகள் போட்டியிடுவதை ஏன் தடுக்க முடியவில்லை? நீதிபதிகள் கேள்வி

பல்வேறு நடவடிக்கைகளுக்குப் பின்பும் குற்றப் பின்னணி உள்ளவர்கள் தேர்தலில்போட்டியிடுவதைஏன தடுக்க முடியவில்லை என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தலைமை நீதிபதி டி.எஸ். தாக்குர் உள்ளிட்ட உச்ச நீதிமன்ற நீதிபதிகள் 25 பேர் பங்கேற்ற மாநாடு மத்தியப் பிரதேசமாநிலம்போபாலில்உள்ள தேசிய நீதித்துறை அகடமிவளாகத்தில் கடந்த 3 நாட்கள் நடந்தது.

முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் குரேஷி பங்கேற்றார்.

அவரிடம் நீதிபதிகள், 'தேர்தலில் குற்றப் பின்னணி உள்ளவர்கள் நுழைவதை தடுக்க பல்வேறு தீர்ப்புகள் வழங்கப்பட்ட பின்பும் ஏன் தடுக்க முடியவில்லை?' என்று கேள்வி எழுப்பினர்.

அதற்கு குரேஷி, 'தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் குற்றப் பின்னணி பற்றி விசாரிக்க தேர்தல் ஆணையத்திடம் பணியாளர்கள் இல்லை. புகார் வந்தால் தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கும் என்றார். (இ-5)

பாரதச் செய்தி

# ஒடிசாவில் சுட்டெரிக்கும் வெயிலால் 45பேர் பலி!



(புவனேஸ்வர்)

நாடு முழுவதும் கோடை வெப்பம் உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது. ஆந்திரா, தெலுங்கானா, ஒடிசா, கர்நாடகம், ராஜஸ்தான், மராட்டியம் மற்றும் வட மாநிலங்களிலும் இந்த ஆண்டு கோடை வெயில் சுட்டெரிக்கிறது.


குறிப்பாக ஒடிசா மாநிலத்தில் தான் அதிக அளவு வெயில் கொளுத்துகிறது. பகலில் மக்கள் வெளியே நடமாட முடியாத அளவுக்கு நெருப்பை அள்ளிக் கொட்டுவது போல் இருக்கிறது. காற்று வீசினாலும் அனலாக கொதிக்கிறது.

அதிகபட்சமாக நேற்று முன்தினம் ஒடிசாவின் சோனிபூர் பகுதியில் 115 டிகிரி வெயில பதிவானது. கடற் கரையோர பகுதியிலும் ஒடிசாவின் உள் பகுதியிலும் தொடர்ந்து வெப்பம் அதிகரித்த வண்ணம் இருக்கிறது. சோனிபூர் தவிர மற்ற இடங்களில் 110 டிகிரி அளவு வெயில் பதிவானது.

வெயில் கொடுமை காரணமாக வீதிகள் வாகன போக்குவரத்து குறைந்து காணப்பட்டது. மக்கள் நடமாட்டமும் இல்லை. வெயிலுக்கு பயந்து மக்கள் வீடுகளை விட்டு வெளியேறாமல் முடங்கிக் கிடக்கிறார்கள்.

இயல்பை காட்டிலும் அதிக அளவு வெப்பம் நீடிப்பதால் சுந்தர்கார், பவானிபட்னா, சித்லகார் உள்ளிட்ட மாநிலத்தின் 16 நகரங்களில் வெப்பத்தால் கடும் வறட்சியும், குடிநீர் தட்டுப்பாடும் நிலவுகிறது. (இ-5)

# வேட்பாளர்களின் செலவுகளை ஆராய்வதற்காக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தமிழகம் வருகை



(சென்னை)

தமிழக சட்டசபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் செலவு கணக்கை கண்காணிப்பதற்கு மத்திய தேர்தல் கண்காணிப்பாளர்கள் தமிழகம் வருகை தரவுள்ளனர் என தமிழக தலைமை தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானி தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபை தேர்தல் மே மாதம் 16 ஆம் திகதி நடைபெறுகிறது. தேர்தலுக்கான அனைத்துப் பணிகளுநம முழுவீச்சில் நடந்து வருகின்றன.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் நாளை மறுதினம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் தங்களது வேட்பு மனுக்களை தாக்கல் செய்யலாம்.

வாக்குப்பதிவு தினமான மே மாதம் 16ஆம் திகதிக்கு 48 மணி நேரத்துக்கு முன்பாக ஒட்டுமொத்த எஸ்.எம்.எஸ்.களுக்கு (புல்க் எஸ்.எம்.எஸ்.) தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மே மாதம் 14 ஆம் திகதி மாலை 6 மணி முதல் 48 மணி நேரத்துக்கு ஒட்டுமொத்தமாக எஸ்.எம்.எஸ்.களை அனுப்பக் கூடாது என்று தொலைபேசி நிறுவனங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேபோல ஒட்டு மொத்தமாக வொய்ஸ் எஸ்.எம்.எஸ்.சும் அனுப்பக்கூடாது. அரசியல் கட்சியினர் வானொலி மூலம் பிரசாரமும் செய்யக் கூடாது.

சட்டமன்ற தேர்தலையொட்டி, தமிழகம், புதுச்சேரி, கேரளா ஆகிய மாநிலங்களுக்கு வரும் தேர்தல் பார்வையாளர்களுக்கு டில்லியில் நேற்று முன்தினம் ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது.

தமிழகத்துக்கு முதல் கட்டமாக கண்காணிப்பாளர்கள் 12 பேர் இன்று தமிழகம் வருகிறார்கள். ஐ.ஆர்.எஸ். அதிகாரிகளான இவர்கள் தமிழகத்தில் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் செலவினங்களை தீவிரமாக கண்காணிப்பார்கள். அதன் பின்னர் ஏனைய பார்வையாளர்கள் படிப்படியாக தமிழகம் வருவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# டில்லியில் சிலிண்டர் வெடித்து 7 பேர் பலி 33 பேர் படுகாயம்



டில்லியின் கிழக்கு பகுதியில் உள்ள காந்தி நகரில் ஒரு வீட்டில் சமையல் செய்து கொண்டிருந்தனர். அப்போது அந்த பகுதியே அதிரும் வகையில் சமையல் காஸ் சிலிண்டர வெடித்தது. சிலிண்டர் வெடிப்பின் சக்தி அதிகமாக இருந்ததால் அந்த வீடு இடிந்தது. அதோடு வீடு முழுவதும் தீ பிடித்து எரிந்தது.

சிலிண்டர் வெடித்த வீட்டின் எதிர்ப்புறத்தில் உள்ள வீடும் நொறுங்கியது. அந்த வீட்டிலும் தீப் பிடித்தது. பக்கத்து வீடுகளிலும் தீ பரவியது.

அந்த பகுதி மக்கள் முதலில குண்டுவெடித்திருக்கலாம்என்ற பீதியில் தெருக்களில் திரண்டனர். தீயை அணைககும் பணியில் ஈடுபட்டனர். இதற்கிடையே தீயணைப்புத் துறையினரும் வந்து தீயை அணைத்தனர். 7 தீயணைப்பு வண்டிகள் மிகக கடுமையாக போராடிய பிறகே தீயை அணைக்க முடிந்தது. அதன் பிறகு மீட்புப் பணிகள் நடந்தன.

சிலிண்டர் வெடித்த வீட்டில் இருந்த ராஜேஷ் கோயல், புனம் சோனிராம்ஆகியோர உடல் கருகி சம்பவ இடத்திலேயே பலியாகி கிடந்தனர். ஏராளமானவர்கள் உயிருககுப் போராடிய படி கிடந்தனர்.அவர்களை மீட்டு வைத்தியசாலைகளில் சேர்த்தனர். அங்கு 4 பேர் உயிரிழந்தனர். இதனால் பலி எண்ணிக்கை 7 ஆக உயர்ந்தது.

33 பேர் படுகாயங்களுடன் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களில் சிலரது உடல் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

இந்த சிலிண்டர் வெடிப்பு நடந்த அடுத்த 30 நிமிடங்களில் தெற்கு டில்லி பகுதியில் உள்ள ஆஸ்ரம் பகுதியிலும் ஒரு வீட்டில் பயங்கர சத்தத்துடன் சிலிண்டர் வெடித்தது. இதில் அந்த வீட்டிலும் பக்கத்து வீடுகளிலும் தீ பற்றி எரிந்தது. தகவல் அறிந்ததும் பல இடங்களில் இருந்து தீயணைப்புப் படை வீரர்கள் விரைந்து சென்று தீயை அணைத்தனர். (இ-5)

# நான்கு படகுகள் கவிழ்ந்து 400 அகதிகள் உயிரிழப்பு

## மத்திய தரைக்கடல் பகுதியில் துயரச்சம்பவம்



(ரோம்)

இத்தாலி நாட்டிற்கு அகதிகளை ஏற்றிக் கொண்டு சென்ற 4 படகுகள் மத்திய தரைக்கடலின் நடுவழியில் கவிழ்ந்து விபத்திற்குள்ளானது. இதில் 400இற்கும் அதிகமான அகதிகள் பலியாகியிருக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

சோமாலியா. எதியோப்பியா மற்றும் எரித்ரீயா ஆகிய நாடுகளில் இருந்து 4 படகுகளில் அகதிகள் புறப்பட்டு இத்தாலி நாட்டிற்கு பயணம் செய்துள்ளனர். இந்த படகுகள் மத்திய தரைக்கடல் பகுதி வழியே பயணம் செய்துள்ளன.

எனினும் பயணத்திற்கேற்ற வகையில் படகுகள் இல்லை என கூறப்படுகிறது. இந்நிலையில், படகுகள் விபத்திற்குள்ளாகி இருக்கின்றன. இதனை எகிப்து நாட்டிற்கான சோமாலியா தூதர் ஒருவர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

இத்தாலி ஜனாதிபதி செர்கியோ மேட்டரெல்லா வெளியிட்டுள்ள செய்தியில், மத்திய தரைக்கடல் பகுதியில் மற்றொரு சோக சம்பவம் நடந்துள்ளது. நூற்றுக்கணக்கான மக்கள் பலியாகி இருக்கக் கூடும் என தெரிகிறது என்று தெரிவித்துள்ளார். (இ)

# காபூல் குண்டுத் தாக்குதலில் 7பேர் பலி; 329 பேர் காயம்!

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலில் ஏழு பேர் உயிரிழந்துள்ளதுடன் 329 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதல் நேற்று செவ்வாய்க்கிழமை காலை அந்நாட்டிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளதாக ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரவ் கஜானி தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்கொலை குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் இடம்பெற்று வருவதாக குறிப்பிடப் படுகிறது.

தாக்குதலிற்கு உள்ளான இடம் பாதுகாப்பு படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தற்கொலை குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற இடத்திற்கு அருகில் ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அமைச்சும மற்றும் இராணுவ முகாமகள் காணப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

இந்த தாக்குதலிற்கு தலிபான் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர். இதேவேளை, ஆப்கானிஸ்தானில் குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ளவுள்ளதாக தலிபான் தீவிரவாதிகள் அறிவித்திருந்த நிலையிலேயே நேற்று தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். (இ-5)

# சவுதியில் தீ விபத்து 3 இந்தியர் உட்பட 12 பேர் உயிரிழப்பு



சவுதியில் ஆலையில் கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் 3 இந்தியர்கள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர்.

இது தொடர்பாக சவுதி அரசு செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டதாவது.

அல்-ஜுபைலில் உள்ள யுனைட்டெட் பெற்றோல் கெமிக்கல் ஆலையில் பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வந்தன.

அங்கு சனிக்கிழமை தீ விபத்து ஏற்பட்டது. தீயைத் தொடர்ந்து பெற்றோலியப் பொருட்கள் தீயில் கருகின. அங்கு எழுந்த கறுத்த விஷப்புகையில் சிக்கி பராமரிப்புப் பணியாளர்கள் 12 பேர் உயிரிழந்தனர்.

இதில் 3 பேர் இந்தியர்கள். இவர்கள் கேரளத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் பெயர்கள் டென்னி, டானியல், வின்சென்ட் என்று சவுதி அரசு செய்தி நிறுவனம் தெரிவித்தது. (இ-5)

# 413 பேர் உயிரிழப்பு

## 2500 பேர் படுகாயம்



©AP

ஈக்குவடோர் நாட்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை 413 ஆக உயர்ந்துள்ளது.

தென் அமெரிக்க நாடான ஈக்குவடோரில் கடந்த சனிக்கிழமை உள்ளூர் நேரப்படி மாலை 6.58 மணிக்கு மியூஸ்னி நகருக்கு 27 கி.மீ. தொலைவில் 19.2 கி.மீ. ஆழத்தில் நில நடுக்கம் மையம் கொண்டிருந்து தாக்கியது.

ரிக்டர் அளவுகோலில் இது 7.8 புள்ளிகளாக பதிவானதாக அமெரிக்க புவியியல் மையம் கணித்தது. இந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து பலமுறை நிலஅதிர்வுகள் ஏற்பட்டன.

பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம், சுனாமி எச்சரிக்கை அறிவித்து, பின்னர் திரும்பப் பெற்றது.

இந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து மீட்பு மற்றும் பேரிட நிவாரணப் படையினர் களமிறங்கி மீட்பு, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர்.

இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்பதில் முழுக்கவனம் செலுத்தி வருகின்றனர். படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு, வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

இந்நிலையில், இடிபாடுகளில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 413 ஆக உயர்ந்துள்ளது. 2,500 இற்கும் அதிகமானவர்கள் படு காயம் அடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இதுதவிர, கட்டட இடிபாடுகளுக்கு அடியில் பல உடல்கள் இன்னும் மீட்கப்படாமல் இருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-5)




# மீண்டும் அணுஆயுத சோதனை நடத்த வடகொரியா திட்டம்

## தென்கொரியா குற்றச்சாட்டு

வடகொரியா 2006 ஆம் ஆண்டு முதல் உலக நாடுகளின் எதிர்ப்பினை மீறி, சர்வதேச ஒப்பந்தங்களை புறக்கணித்து, ஐ.நா. பாதுகாப்பு சபை தீர்மானத்தையும் மீறி, அணுஆயுத சோதனைகளை தொடர்ந்து நடத்தி வருகிறது.

இதுவரை 3 முறை அந்த நாடு அணுகுண்டு சோதனைகளையும், பல முறை அணு ஏவுகணை சோதனைகளையும் நடத்தி, பொருளாதார தடைகளை சந்தித்து வருகிறது.

ஆனாலும், அதிக சக்தி வாய்ந்த புதிய ஐதரசன் குண்டு ஒன்றை உருவாக்கி உள்ளதாக அந்த நாட்டின் ஜனாதிபதியான கிம் ஜாங் உன் அறிவித்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

கடந்த மாதம் 6 ஆம் திகதி புங்க்யேரி நகரில் உள்ள அணு ஆயுத சோதனைத்தளத்தில் ஐதரசன் குண்டு சோதனையை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளதாக வடகொரியா அதிகாரபூர்வமாக அறிவித்தது.

இதனையடுத்து உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. ஐ.நா. சபையும் வடகொரியா மீது மேலும் பொருளாதார தடைகளை கொண்டுவர முன்வந்தது. தொடர்ந்து அணு ஆயுத சோதனை மற்றும் ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

ஆகவே அமெரிக்கா மற்றும் ஐ.நா.சபை வடகொரியா மீது பொருளாதார தடை விதித்துள்ளது.

அதைப் பொருட்படுத்தாத வடகொரியா 5 ஆவது முறையாக அணு ஆயுத சோதனை நடத்த தயாராகிவிட்டது. அணு ஆயுதங்களை வெடித்து பரிசோதனை பார்ப்பதற்கான இடத்தை தேர்வு செய்து அதற்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டுள்ளது. இந்த அணுஆயுத சோதனை எதிர்வரும் மே மாத தொடக்கத்தில் நடைபெறலாம் என தென் கொரிய ஜனாதிபதி பார்க் கியூன் கே தெரிவித்துள்ளார்.

அணு ஆயுத உற்பத்திக்கு வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்.

இதன்மூலம் வட கொரியாவை முன்னிலைப்படுத்த தீவிரம் காட்டி வருகிறார் என தென்கொரிய ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ளார். (இ-5)

# புதுவருட சுப நேரங்களில் எவ்வித பிழையும் இல்லை

## எஸ்.பி.நாவின்ன தெரிவிப்பு

புதுவருட கால சுப நேரங்களில் எவ்வித பிழையையும் நாம் பார்க்கவில்லை என கலாசார விவகார அமைச்சர் எஸ்.பி. நாவின்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதுவருடம் தொடர்பிலான சுப நேரங்கள் சரியான முறையிலேயே அறிவிக்கப்பட்டுள்ளன. கலாசார விவகார திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட குழு ஒன்றினால்சுப நேரங்கள் அறிவிக்கப்பட்டன.

இந்தக் குழு நீண்ட காலமாக சுப நேரங்கள் பற்றி அறிவிக்கும் குழுவாகும். எனவே சுப நேரங்களில் எவ்வித குறைபாடுகளும் கிடையாது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம்முறை புதுவருடம் தொடர்பிலான சுபநேரங்களை அரசாங்கம் தனக்கு தேவையான வகையில் வெளியிட்டுள்ளதாகவும் சரியான முறையில் நேரங்கள் கணிக்கப்படவில்லை எனவும் குற்றம் சுமத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-19.04.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 143.03 | 146.89 |
| பவுண்ட் | பிரிட்டன் | 204.08 | 210.65 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 161.09 | 167.59 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 147.61 | 153.83 |
| டொலர் | கனடா | 111.42 | 116.11 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 110.27 | 115.45 |
| டொலர் | சிங்கப்பூர் | 105.63 | 109.71 |
| ரூபா | இந்தியா | 2.1660 | ------- |
| யுவான் | சீனா | 22.2181 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6976 |
| குவைத் | டினார் | 476.8532 |
| ஓமான் | ரியால் | 373.7517 |
| கட்டார் | ரியால் | 39.5172 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3718 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1767 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | கொடிகாமம் ரூபா | சுன்னாகம் ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 50 | 35 | 50 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 75 | 80-130 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 70 | 120 | 100 |
| தக்காளி | 100 | 100 | 80 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 40 | 60 | 50 |
| கோவா | 60 | 55 | 70 | 80 | 50 |
| கரட் | 100 | 90 | 80-200 | 120 | 100 |
| பூசணி | 30 | 15 | 40 | 40 | 40 |
| புடோல் | 70 | 35 | 60 | 80 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 100 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 70 | 90 | 80 | 90 |
| பாகற்காய் | 140 | 120 | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 80 | 100 | 100 |
| கருணைக்கிழங்கு | 80 | — | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 130 | 120 | 140 | 160 | 120 |
| பீற்றூட் | 100 | 65 | 80 | 120 | 80 |
| கறிமிளகாய் | 100 | 50 | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 350 | 250 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 200 | 100 | 100 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | — | 50 | 70 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 40 | 20 | 20 |
| தேசிக்காய் | 350 | 300 | 400 | 600 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 15-30 | 50 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 150 | 110 | 140 | 160 | 140 |
| வெங்காயப்பூ | 250 | — | — | — | — |
| முள்ளங்கி | 60 | 30 | 50 | 120 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## கப்பலுக்கு வெடி வைத்து கிட்டு தற்கொலை 160

**ஒரே குடும்பத்தில் 4 பேருக்குத் தூக்கு**

தூக்குத்தண்டனை அடைந்தவர்களில் 15 பேர் விடுதலைப் புலிகள். 10 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். ரெங்கநாத் பெங்களூரைச் சேர்ந்தவர்.

தண்டனை அடைந்தவர்களில் நளினி, அவரது தாயார் நர்சு பத்மா, நளினியின் சகோதரர் பாக்கியநாதன், கணவர் முருகன் ஆகிய 4 பேரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

தூக்குத்தண்டனை அடைந்தவர்களில் 5 பேர் பெண்கள். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு ஒரே வழக்கில் 5 பெண்களுக்குத் தூக்குத் தண்டனை விதிப்பது இதுவே முதல் தடவையாகும்.

**கார்த்திகேயன் பேட்டி**

ராஜீவ்காந்தி கொலை வழக்கை விசாரித்த சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வுத் குழு தலைவர் கார்த்திகேயன் ராஜீவ் காந்தி கொலை வழக்கின் தீர்ப்பு தொடர்பாகத் தனது கருத்தைத் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது,

மத்திய புலனாய்வுத் துறையின் (சி.பி.ஐ.) சிறப்புப் புலனாய்வுக் குழு ராஜீவ்காந்தி கொலையின் உண்மையைக் கண்டறிய ஒருமனதாக செயற்பட்டது.

இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் அதன் பலன் கிடைத்துவிட்டது.

சி.பி.ஐ. விசாரணையின் முடிவு சரியே என்று இந்தத் தனி கோர்ட்டு தீர்ப்பு கூறியுள்ளது. இந்திய பொலிஸார் யாருக்கும் சலித்தவர்கள் அல்ல என்று புலனாய்வுக்குழு நிரூபித்துள்ளது. நீதி கிடைத்துள்ளது. வாய்மையே வெல்லும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கார்த்திகேயன் கூறினார்.

**அப்பீல்**

1998 ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் திகதி குற்றவாளிகள் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டது.

ஏப்ரல் 11 ஆம் திகதி அவர்களின் தூக்குத் தண்டனைக்குச் சுப்பிரீம் கோர்ட் இடைக்காலத் தடை விதித்தது.

செப்ரெம்பர் மாதம் சுப்ரீம் கோர்ட்டில் விசாரணை தொடங்கியது. 1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி குறுக்கு விசாரணை முடிந்து தீர்ப்புத் தள்ளி வைக்கப்பட்டது.

**சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு**

இந்த வழக்கில் 11.5.1999 அன்று சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் கே.டி.தோமஸ், டி.பி.வாத்வா, எஸ்.எஸ்.எம். குவாத்ரி ஆகியோர் அடங்கிய பெஞ்ச் தீர்ப்பு வழங்கியது.

நளினி, அவள் கணவன் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்குத் தடா கோர்ட் வழங்கிய தூக்குத் தண்டனையைச் சுப்ரீம் கோர்ட் உறுதி செய்தது.

இவர்களில் நளினியைத் தவிர மற்ற 3 பேரும் விடுதலைப்புலி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்.

ராபர்ட், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகி யோருக்கு வழங்கப்பட்ட தூக்குத்தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

இவர்கள் 7 பேர் தவிர மீதம் உள்ள 19 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

ராஜீவ்கொலை வழக்கில் அமெரிக்கா உளவு நிறுவனத்துக்கு இணையாக மத்திய புலனாய்வுத் துறை துப்பு விலக்கி பாராட்டைப் பெற்றது.

(சோனியா காந்தியின் வேண்டுகோளால் நளினியின் தூக்கு தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. ராஜீவ் கொலையைத் தொடர்ந்து 1992 ஆம் ஆண்டு இந்தியா விடுதலைப் புலிகளின் அமைப்பைத் தடை செய்தது. இந்தத் தடை இன்று வரை நீடிக்கிறது.)

ஆயுதங்களுடன் கப்பலில் சென்று கொண்டிருந்த விடுதலைப்புலித் தளபதி கிட்டுவை இந்திய கடற்படை சுற்றி வளைத்தது. அதனால் ஆயுத கப்பலை வெடி வைத்து தகர்த்துவிட்டு கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.


சென்னைக்கு அருகே இந்த சம்பவம் நடந்தது.

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர்களில் பிரபாகரனுக்கு அடுத்த இடத்தில் இருந்தவர் கிட்டு. இவர் பிரபாகரனின் நம்பிக்கைக்குரிய தளபதியாகத் திகழ்ந்தார்.

இலங்கையில் நடந்த போரின்போது ஒரு காலை இழந்தார். அதன் பிறகு அவர் சில காலம் லண்டனில் தங்கியிருந்தார். இங்கிலாந்து அரசின் கெடுபிடியால் அவர் அங்கிருந்து தப்பி தலைமறைவானார்.

**கடலில் கைது**

இதற்கிடையே கிட்டு இந்துமகா சமுத்திரத்தில் சர்வதேச கடல் பகுதியில் கப்பலில் சென்று கொண்டிருந்தார். அப்போது இந்திய கடற்படையினர் 2 கப்பலில் சென்று அந்தக்கப்பலைச் சுற்றி வளைத்தனர்.



(தொடரும்)

# பொருளாதார நெருக்கடி விரைவில் நிவர்த்தியாகும்

## அமைச்சர் நிரோஷன் நம்பிக்கை

(கொழும்பு)

**நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி விரைவில் தீர்க்கப்பட்டு,பொதுமக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படும் நிலை உருவாகும் என்று அமைச்சர் நிரோஷன் பெரேரா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**



நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த நிலையில், சிங்கள ஊடகமொன்றிடம் தேசிய கொள்கைத்திட்ட, பொருளாதார மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், தேசிய கொள்கைத் திட்ட , கடந்த அரசின் செயற்பாடுகள் காரணமாக நம் நாட்டின் கடன் தொகை அதிகரித்து, வருமானம் குறைந்துள்ளது.

அதன் காரணமாக பொருளாதாரத்தை மறுசீரமைக்க ஒருசில நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது. இலங்கை தற்போது ஒரு முக்கியமான பொருளாதார திருப்புமுனைக் கட்டத்தை எதிர்கொண்டுள்ளது.

அதற்காக நாம் நிகழ் காலத்திலிருந்து தாண்டிச் சென்று எதிர்காலத்துக்கு முகம் கொடுப்பதற்கேற்ற வகையில் பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

பொருளாதார நடவடிக்கைகள் ஏனைய நாடுகளுடன் கொடுக்கல்- வாங்கல்களை இலகுபடுத்தும் வகையில் இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே வற்வரி அதிகரிப்பு குறித்து விசேட சந்திப்பு!



வற் வரி எனப்படும் பெறுமதி சேர் வரி அதிகரிப்பு தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் இடையில் விசேட சந்திப்பு ஒன்று இடம் பெறவுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு மேலதிகமாக சிரேஷ்ட அமைச்சர்களும் இந்த சந்திப்பில் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சந்திப்பு அலரி மாளிகையில் இந்த வாரத்தில் நடத்தப்படவுள்ளதாக பிரதமர் அலுவலகத் தகவல்களை ஆதாரம் காட்டி கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வற்வரி அதிகரிப்பானது நுகர்வோரையே பாதிக்கும் எனவும் தொலைபேசிக் கட்டணம், நீர்க் கட்டணம், மின்சாரக் கட்டணம், அத்தியாவசியப் பொருட்கள் போன்றவற்றில் தாக்கத்தை செலுத்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வற்வரி அதிகரிப்பிற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி நாடளாவிய ரீதியில் போராட்டமொன்றை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் முதற்கட்டமாக எதிர்வரும் மே தினத்தில் முதல் போராட்டம் நடத்தப்படவுள்ளதாகத் குறிப்பிடப்படுகிறது. (இ-5)

# பனாமா ஆவணக்கசிவு தொடர்பில் இலங்கையில் விசாரணை ஆரம்பம்

பனாமாவில் பண மோசடியுடன் தொடர்பு கொண்ட இலங்கையர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள அவற்றுக்குரிய திணைக்களங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க வோஷிங்டனில வைத்து தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அமெரிக்கா சென்ற நிதியமைச்சர் அங்கு சர்வதேச ஊடகம் ஒன்றிடம் கருத்து வெளியிட்ட போது, பனாமா மோசடிகளுடன் தொடர்புடைய இலங்கையர்கள் குறித்த விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படும்என்று தெரிவிததார்.

வரிச்சலுகையை பெற்றுக கொள்வதில்தடங்கல்இல்லை. ஆனால் உண்மையானசொதது விபரங்களை வெளியிடாமல் பதுக்கியமையே சிக்கலை ஏற்படுத்தி இருக்கிறது.

அத்துடன் பனாமா ஆவண மோசடியுடன் தொடர்பு கொணட நிறுவனங்கள் குறித்த தெளிவான தகவல்கள் இன்னும் கிடைக்கவில்லை என்றாலும் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள உரிய திணைக்களங்களுக்கு பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (இ-5)

# அனைத்துலக கப்பல் பாதையை பாதுகாக்கும் பொறுப்பு இலங்கைக் கடற்படையினரிடம்

(கொழும்பு)

மாலைதீவில் இருந்து மலாக்கா நீரிணை வரையான கடல் பகுதியில், பயணம் செய்யும் கப்பல்களின் பாதுகாப்பை இலங்கை கடற்படை உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது.

இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலுக்கு அமையவே, இலங்கை கடற்படை இந்த நடவடிக்கையில் ஈடுபடவிருக்கிறது.

கடந்த பத்தாண்டுகளில் இலங்கை அண்டிய கடற்பகுதிகளில், கடற்கொள்ளைகள் அதிகரித்துள்ள நிலையிலேயே, இலங்கை கடற்படையை இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த பாதுகாப்புத் திட்டம் அடுத்த பத்து ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும். இதற்கமைய, கப்பல்களின் பயணப்பாதைகளின் பாதுகாப்பை இலங்கை கடற்படை உறுதிப்படுத்தும்.

ஆழ்கடல் கண்காணிப்பை மேற்கொள்வதற்கு இலங்கை கடற்படை, இரண்டு கப்பல்களை, இந்தியாவிடம் இருந்து வாங்கவுள்ளது.

இவற்றில் முதலாவது கப்பல் அடுத்த ஆண்டு இலங்கை கடற்படையிடம் கையளிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## உங்கள் மீதே நீங்கள் கோபம் கொண்டதுண்டா?

பெரும்பாலும் இல்லை என்றே பலரும் பதில் சொல்வார்கள்.

சிலர் "அவனைச் சொல்லிப் பயனில்லை. என் புத்தியைச் செருப்பால் அடிக்கணும்" என்று கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். கிட்டத்தட்ட இதை ஒட்டிய சிந்தனைதான் நம் மீது நாமே கோபம் கொள்வது என்பதும்.

பிறர் மீது நாம் அர்த்தத்துடன் கோபப்படுகிறோம் என்றால் அதற்குச் சில காரணங்கள் இருக்கும்.

நாம் பாதிக்கப்பட்டோம் என்ற வேதனை போக நம் கோபத்திற்கு ஆளானவர்கள் மீண்டும் இத் தவறை செய்யக் கூடாது.

செய்த தவறை அவர்கள் உணர வேண்டும். தவறுக்காக அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றெல்லாம் நாம் விரும்புகிறோம்.

இந்த உணர்வுகளை–விருப்பங்களை நம் மீதே திருப்பி விட்டுக் கொண்டால் அச் செயல் எவ்வளவு பயனுடையதாய் இருக்கும்!

தயங்கித் தயங்கித் தவறான பாதையில் இறங்கி அதன் பலன்களை அனுபவிக்கும் போது நம்மீது நாமே கோபம் கொள்ள வேண்டும்.

உதாரணமாக,

ஒருவர் குடிக்கிறார். அதை வேறொருவர் அவர் வீட்டில் சொல்லிக் கொடுத்து விடுகிறார். இந் நிலையில் குடிகாரர் சொல்லிக் கொடுத்தவர் மீதும், அதன் காரணமாக கொந்தளித்து எழும் வீட்டினர் மீதும் கோபம் கொள்வதும் தான் உலக இயல்பாக இருந்து வருகிறது. ஆனால் குடிகாரர் தன் செயலுக்காகத் தன் மீது தான் கோபம் கொள்ள வேண்டும். இது போன்ற பெரிய தவறுகளுக்காக மட்டுமல்ல, சிறிய தவறுகளுக்கும் இவ் விதி பொருந்தும்.

இதை நம்மை நாமே எண்ணி வெறுப்பது என்றோ நம் செயல்களை எண்ணி நாமே வேதனைப்படுவது அல்லது சலிப்படைவது என்றோ யாரும் தவறாகப் பொருள் கொள்ளக் கூடாது.

இத்தகைய உணர்ச்சிகள் தாழ்வு மனப்பான்மையையும் தோல்வி மனப்பான்மையையுமே உருவாக்கும்.

கோபத்தை நம்மீது திருப்பி விட்டுக் கொள்வது ஆக்கப்பூர்வமான செயல்களுக்கே அன்றி அழிவிற்கல்ல.

நெருப்பு, நீர், அணுசக்தி போன்ற சக்திகளை நல்ல வழியிலும் பயன்படுத்தலாம், தீய வழியிலும் பயன்படுத்தலாம். இவற்றைப் போன்றதே கோபமும் அதைக் கையாளும் வகையில் தான் அது பலனைத் தருகிறது.

நம் தவறுகளை நாம் உணரவும் நம்மை நாமே திருத்தக் கொள்ளவும் நமக்கு நாமே சிறு தண்டனைகளை வழங்கிக் கொள்ளவும் அல்லது நம் கோபத்தால் ஏற்பட்டு விட்ட நட்டத்தின் தன்மையை உணர்ந்து அவற்றை ஏற்றுக் கொள்ளவும் அல்லது ஏற்பட்டு விட்ட நட்டத்தின் தன்மையை உணர்ந்து அவற்றை ஏற்றுக் கொள்ளவும் அல்லது ஏற்பட்டு விட்ட தீய பலன்களை அனுபவிக்க நாம் தயாராகவும்– ஏன் ஒரு முழுமனிதனாக விளங்கவும்– நம்மீது நாம் கோபம் கொள்ளத்தான் வேண்டும்.


**லேனா தமிழ்வாணன்**



*செவ்வாய் சனி சேர்க்கையினால் செய்யும் தொழிலில் வெற்றி வரும்! சாமர்த்தியமாகப் பேசுவதிலும் சேமிப்பை வலியுறுத்துவதிலும் கவனம் செலுத்தும் மிதுன இராசி நேயர்களே!*

# “துர்முகி வருஷ” இராசி பலன்கள்

## 14.04.2016-13.04.2017






மன்மத வருடம் முடிந்து துர்முகி வருடம் தொடங்கியிருக்கிறது. வந்திருக்கும் புத்தாண்டு வளர்ச்சியைக் கொடுக்குமா? மந்தன் சனியால் மகிழ்ச்சி கிடைக்குமா, சிந்தித்த காரியங்கள் சிறப்பாக முடியுமா? இல்லத்தில் உள்ளவர்களின் எண்ணங்கள் நிறைவேற எந்த வழிபாட்டை மேற்கொள்வது? வள்ளல்களாக மாறும் விதத்தில் வருமானப் பெருக்கம் ஏற்படுமா என்றெல்லாம் ஆண்டு தொடங்கும் முன்பே ஆசைகள் அலை மோதும்.

வருடம் பிறக்கும் பொழுதே உலா வரும் கிரக நிலைகள் உங்களுக்குப் பக்கபலமாக இருந்தால் சிக்கல்களிலிருந்து நீங்கள் விடுபட இயலும். இல்லையேல் தக்க தருணத்தில் தட்டுப்பாடுகளும், தனவிரயமும் அதிகரிக்கும். வெற்றி கைநழுவிப் போகாமலிருக்க விரும்பி வழிபட வேண்டிய தெய்வம் எது என்பதை அறிந்து கொள்ளுங்கள். பரிகாரங்களைச் செய்து பலன் தேடிக் கொள்ளுங்கள்.

இந்த ஆண்டு சித்திரை மாதப் பிறப்பு பங்குனி மாதம் 31 ஆந் தேதி மாலை நேரத்திலேயே நிகழ்கின்றது. சூரியன் மேஷத்தில் சஞ்சரிக்கும் பொழுது முத்திரை பதிக்கும் சித்திரை மாதம் பிறக்கின்றது. அதே நேரத்தில் முழுநிலவு என்று வர்ணிக்கப்படும் சந்திரன் உங்கள் ராசியிலேயே உலாவருகின்றது. தனாதிபதி சந்திரன் ராசியில் சஞ்சரிக்க, ராசிநாதன் புதனுக்கு உரிய கிழமையில் புத்தாண்டு பிறந்திருப்பதால், இவ் ஆண்டு வளம் சேர்க்கும் ஆண்டாகவே உங்களுக்கு அமையப் போகின்றது.

வறட்சி மாறும், வளர்ச்சி கூடும். அரை குறையாக நின்ற பணிகள் அனைத்தும் நடைபெறும். அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தியாகும். குறைவின்றிப் பலன் கொடுக்கும் ஆண்டாக, இவ் ஆண்டு அமையப் போகின்றது. அதுமட்டும் அல்லாமல் செவ்வாயும் சனியும் விருச்சிகத்தில் சஞ்சரிப்பது ஒரு வழிக்கு நன்மைதான். 6-க்கு அதிபதி செவ்வாயும், 8-க்கு அதிபதி சனியும் இணைந்து விபரீத ராஜயோகத்தை உருவாக்குவதால் ஆண்டு முழுவதும் வேண்டிய நற் பலன்களை வழங்கப்போகின்றது.

இருப்பினும் முரண்பாடான கிரக சேர்க்கையின் விளைவாக முன்னேற்றத் தடைகளும் ஒருசில சமயங்களில் வந்து சேரலாம். முன்னேற்றம் தரும் இடத்தில் ராகுவும், முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடுகளைக் கிடைக்க வைக்கும் இடத்தில் கேதுவும் சஞ்சரிப்பதால் சர்ப்ப கிரகங்களின் ஆதிக்கம் மேலோங்கியிருக்கிறது.

சனி, செவ்வாய் மற்றும் சர்ப்ப கிரகங்களாக விளங்கும் ராகு- கேது ஆகியவற்றுக்கு உரிய பரிகாரங்களை முறையாகச் செய்தால் முன்னேற்றத்தின் முதல்படிக்கு செல்ல இயலும்.

வருடத் தொடக்கத்தில் 7, 10-க்கு அதிபதியான குரு பகவான் 3 ஆம் இடத்தில் வக்ரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். பொதுவாகவே களத்திர ஸ்தானாதிபதி வக்ரம் பெற்றிருக்கும் பொழுது, குடும்ப ஒற்றுமை குறையத்தான் செய்யும். எனவே, குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வதுதான் நல்லது. விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் வீட்டில் உள்ளவர்களால் உங்களுக்கு அமைதியும் கிடைக்கும். ஆதாயமும் கிடைக்கும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எவ்வளவு திறம்பட வேலை செய்தாலும் மேலதிகாரிகள் பாராட்ட மாட்டார்கள். தொழில் மற்றும் செயல் ஸ்தானத்திற்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் அது வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது எதிர்பார்த்த சலுகைகள் தாமதம் ஆகும்.

வருடத்தொடக்கத்தில் குருவின் பார்வை 7, 9, 11 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே நீண்ட நாட்களாக குடும்பத்தில் நடைபெறாதிருந்த சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்பும், பிரச்சினைகளுக்கு நல்ல முடிவும் ஏற்படும். முன்னோர் சொத்துக்களை இப்பொழுது முறையாகப் பிரித்துக் கொண்டு அதை விற்று தொழிலுக்கு மூலதனமாக்கிக் கொள்வர்.

சுயதொழில் புரிபவர்கள் தொழில் நடத்தும் இடத்தை விரிவு செய்யவும், புதிய இயந்திரங்களுக்கு ஆர்டர் கொடுக்கவும் செய்த முயற்சி வெற்றிதரும். அயல்நாட்டு நிறுவனங்களிலிருந்து உங்களுக்கு அனுகூலத் தகவல் வந்து சேரும்.

**ஆண்டின் தொடக்கம் முதல் ஆடி பதினேழு வரை!**

இக்காலத்தில் நன்மைகளை வரவழைத்துக் கொள்ள குரு வழிபாட்டை மேற்கொள்ள வேண்டும். குரு தொழில் ஸ்தானாதிபதியாகவும் விளங்குகின்றார். அவர் வக்ர இயக்கத்தில் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. தொழிலில் கூட்டாளிகளை நம்பிச் செயற்பட வேண்டாம்.

உறவினர்களுக்கு என்றைக்கோ கொடுத்த தொகை இப்பொழுது கைக்கு வந்து சேரும். உங்கள் ராசிநாதன் சகாய ஸ்தானாதிபதியோடு இணைந்து சஞ்சரிப்பதால் வழக்குகள் சாதகமாகும். கலக்கம் தரும் தகவல்கள் மாறும். கல்விக்காக எடுத்த முயற்சி வெற்றி தரும்.

ராகு-கேதுக்களின் ஆதிக்கத்தைப் பொறுத்தவரை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. ஒன்பதில் கேது இருப்பதால் சொத்துக்கள் விரயமாகலாம். வாங்கிப்போட்ட சொத்துக்களை எதிர்பார்த்த இலாபத்திற்கு விற்க இயலாது.

ரோக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த முரண்பாடான கிரக சேர்க்கை ஆரோக்கியத் தொல்லைகளை அதிகம் வழங்கினாலும், ஆதாயத்தையும் வழங்கத் தவறாது. உங்கள் ராசி அடிப்படையில் பார்க்கும் பொழுது 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய் 8, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. 6, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதி இணையும் பொழுது விபரீத ராஜ யோகம் உருவாகின்றது. அதே நேரம் 9, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதி என்ற முறையில் கணக்கிடும் பொழுது, எதிர்பாராத தனலாபம் இயற்கையிலேயே கிடைக்கும் அமைப்பில் உருவாக்கப் போகின்றது.

**ஆடி 18 இல் தேடி வரும் யோகம்!**

துர்முகி வருடம் ஆடிமாதம் 18ஆம் திகதி (2.8.2016) அன்று கன்னி ராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக நல்ல மாற்றங்கள் உங்களுக்கு வந்து சேரப் போகின்றது. அர்த்தாஷ்டம குருவாக இருக்கிறாரே என்று நீங்கள் நினைக்கலாம். குரு தன் வீட்டை, தானே பார்க்கப் போகின்றார். எனவே 10 ஆம் இடம் புனிதமடை கின்றது.

இதனால் பொதுவாழ்வில் புகழ் கூடும். புதிய பொறுப்புகளும், பதவி களும் ஒருசிலருக்கு கிடைக்கும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். பெற்றோர்களின் ஒத்துழைப்பும், பெரும் செல்வந்தர்களின் ஒத்துழைப்பும் கிடைத்து தொழிலை வளப்படுத்திக் கொள்வீர்கள்.

குரு சஞ்சரிக்கும் இடமான நான்காமிடம் வாகனம் வீடு, கல்வி, சுகம், தாய், கொடுக்கல், வாங்கல்களை எடுத்துரைக்கும் இடம் என்பதால் வாகனம் வாங்க எடுத்த முயற்சி வெற்றி தரும். வசதி மிக்க வீடுகட்டிக் குடி யேறும் யோகம் உருவாகும். செய்யும் பணி யிலும் கவனம் செலுத்துவீர்கள்.

குருவின் சஞ்சாரத்தால் குழப்பங்கள் அகலும். கூடுதல் லாபம் தொழிலில் கிடைக்க வழிபிறக்கும். குருவின் பார்வை 8, 10, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது.

“எட்டினை குருதான் பார்த்தால் இழப்புகளை ஈடுசெய்யும் வாய்ப்பு கிட்டும், இருந்திடும் நோய்களும் விலகி ஓடும்” என்பார்கள். பொறுப்புள்ளவர்களை நண்பர்களாகத் தேர்ந்தெடுத்து பொன்னான எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள முன்வருவீர்கள். மறுப்பு சொல்லிய கூட்டம் விலகும். மனக்கசப்புகள் மாறும்.

“பத்தினை குருதான் பார்த்தால் பணிகளிலிருந்த தொய்வு அகலும்” என்பர். எனவே எடுத்த காரியங்களில் இனி எந்த தாமதமும் ஏற்படாது. தெரியாத தொழிலை செய்தாலும் லாபம் தேடி வரும். அறியாத தொழிலைச் செய்தாலும் அதிக லாபம் கிடைக்கும் நேரமிது.

“பன்னிரெண்டைக் குருதான் பார்த்தால் பயணத்தால் பலன் கிடைக்கும்” என்பர். வெளிநாடுகளுக்கும், வெளிமாநிலங்களுக்கும் தொழில் ரீதியாகச் சென்று வரும் வாய்ப்பு கிடைக்கும். தொழில் கூட்டாளிகளால் சென்ற ஆண்டில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்வீர்கள். தெய்வ பலம் உங்களுக்குப் பின்னணியாக் இருப்பதால் எதற்கும் கலைப்படத் தேவையில்லை. வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். வளர்ச்சிகூட அப்போதைக்கப்போது திசாபுத்திக்கேற்ற வழிபாடுகளையும் மேற்கொள்ளுங்கள்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

துர்முகி ஆண்டில் மிதுன ராசியில் பிறந்த பெண்களுக்கு வருடத் தொடக்கத்தில் தாய்வழி ஆதரவு கூடும். தக்க சமயத்தில் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். ஆரோக்கியத் தொல்லை அகன்று உற்சாகமாகப் பணியாற்றுவீர்கள். உங்கள் பெயரில் சொத்துக்கள் வாங்கும் யோகம் கூட உண்டு. ஊர் மாற்றமும், வீடு மாற்றமும் உள்ளம் மகிழ வைக்கும்.

குருப்பெயர்ச்சிக்குப் பிறகு பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் ஆதரவு கிடைத்து மேன்மை பெறுவீர்கள். பிடிவாத குணத்தைத் தளர்த்திக் கொள்வதன் மூலம் பிறர் போற்றுமளவு வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள இயலும். அங்காரகனையும், சனியையும் அதற்குரிய கிழமைகளில் வழிபட்டால் தங்குதடைகள் அகலும்.

**குரு மற்றும் சனியின் வக்ர காலங்கள்!**

புத்தாண்டில் குருவின் வக்ரமும், சனியின் வக்ரமும் நிகழ்கின்றது. மாபெரும் கிரகங்கள் வக்ரம் பெறும்பொழுது ஏற்றங்களும், மாற்றங்களும் ஒரு சிலருக்கு வந்து சேரும். ஒரு சிலர் ஏமாற்றங்களை சந்திக்க நேரிடலாம். உங்களைப் பொறுத்தவரை குருவின் வக்ர காலத்தில் பங்குதாரர்களால் ஏற்பட்ட கலக்கம் அகலும். பணவரவு திருப்தி தரும். மங்கல நிகழ்ச்சி மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். தொழிலுக்கு இடம் வாங்கும் அமைப்பு உருவாகலாம். துணிவும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்துவீர்கள். வரும் ஒப்பந்தங்கள் இலாபம் தருவதாக அமை யும். சனியின் வக்ர காலத்தில் சஞ்சல ங்கள் அதிகரிக்கும்.

சந்தோஷங்களைத் தக்க வைத் துக் கொள்வது அரிது. காரியங்களில் சிறு சிறு தடைகள் ஏற்படலாம். பெற் றோர் வழியில் பிரச்சினைகள் உருவாகலாம். உற்றார், உறவினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. சனிக்குரிய பரிகாரங்களை முறை யாகச் செய்து, சனி கவச பாராயணம் செய்தால் பிணிகளிலிருந்தும், பிரச்சினைகளிலிருந்தும் விடுபடும் வாய்ப்பு உருவாகும்.

**வளர்ச்சிக்கு வித்திடும் வழிபாடு!**

புதன்கிழமை தோறும் விரதமிருந்து விஷ்ணு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். ஏகாதசி விரதமிருந்து பெருமாளையும், லட்சுமியையும் வழிபட்டால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**நாளை கடகம்...**

# செவ்வாய் சனி சேர்க்கையினால் செய்யும் தொழிலில் வெற்றி வரும்!

# ராஜீவ் கொலைக் கைதிகள் விடுதலை வழக்கை மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரிக்கும்

## உச்ச நீதிமன்றம் திடீர் அறிவிப்பு

ராஜீவ் கொலை கைதிகள் முருகன், சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் விடுதலைக்கு எதிரான வழக்கை 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரிக்கும் என்று உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்தியாவின் முனனாள் ப்ரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய 3 பேருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த 3 பேரின் கருணை மனுக்கள் மீது முடிவு எடுக்க கால தாமதம் ஏற்பட்டதாக கூறி கடந்த 2014ஆம் ஆண்டு தூக்குத் தண்டனையை ஆயுள தண்டனையாக குறைத்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், இந்த 3 பேரையும் விடுதலை செய்வது குறித்து மாநில அரசு முடிவு எடுக்கலாம் என்றும் கூறியது.

இதைத்தொடர்ந்து, முருகன், சாந்தன், பேரறிவாளன் மட்டுமின்றி இந்த வழக்கில் ஏற்கனவே ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் நளினி, ராபர்ட் பயாஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய 7 பேரையும் சிறையில் இருந்து விடுதலை செய்யப்போவதாக தமிழக அரசு அறிவித்தது.

தமிழக அரசின் இந்த முடிவை எதிர்த்து அப்போது மத்தியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கூட்டணி அரசு உச்ச நீதிமன்றில் ரிட் மனு தாக்கல் செய்தது.

அந்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட உச்ச நீதிமன்றம் 7 பேரையும் விடுதலை செய்ய இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது.



பின்னர் 2014 ஏப்ரல் 24 ஆம் திகதி உச்ச நீதிமன்றம் அப்போதைய தலைமை நீதிபதி பி.சதாசிவம் தலைமையிலான அமர்வு, இந்த வழக்கில் 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு இறுதி முடிவு செய்யும் என்று தீர்ப்பு அளித்தார்.

அந்த அமர்வு, இந்த வழக்கு குறித்த 7 அம்சங்களை கருத்தில் கொண்டு விசாரிக்கும் என்றும் கூறப்பட்டது.

இந்த 7 அம்சங்களையும் தெளிவுபடுத்தி எச்.எல். தத்து தலைமையிலான நீதிபதிகள் அமர்வு கடந்த ஆண்டு டிசெம்பர் 2ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தது.

மேலும் ராஜீவ் கொலைக் கைதிகள் 7 பேர் விடுதலையை எதிர்த்து மத்திய அரசு தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனு மீதான விசாரணையை 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு தனியாக விசாரிக்கும் என்றும் தெரிவித்தது.

அதன்படி 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு வாரத்தில் திங்கட்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இந்த வழக்கை விசாரிக்கும் என்று உச்ச நீதிமன்றம நேற்று முன்தினம் அறிவித்தது.

எனினும் யாருடைய தலைமையிலான அமர்வு என்பதும், எப்போது முதல் விசாரணை தொடங்கும் என்பதும் தெரிவிக்கப்படவில்லை. (இ-5)

## எட்டுப் பேருக்குத் தொடர்பு

பங்களாதேஷ் மத்திய வங்கியில் இருந்து 10 மில்லியன் டொலர்கள் இணையத் திருட்டு தொடர்பாக இலங்கையின் 8 பேரும் பிலிப்பைன்ஸின் 12 பேரும் தொடர்பு கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் விசாரணையாளர்கள் இந்த தகவலை வெளியிட்டுள்ளனர்.

எனினும் இணையத் திருட்டை மேற்கொண்டவர்களுக்கு இந்த பணத்தின் தொகை சென்று சேரவில்லை என்று நம்பப்படுகிறது.

இந்த இணையத் திருட்டு, கடந்த பெப்ரவரி 4ஆம் மற்றும் 5ஆம் திகதிகளில் இடம்பெற்றுள்ளது. (இ-5)

## வெளிநாட்டு உறவை வலுப்படுத்தும் இலங்கை புலனாய்வு அமைப்புக்கள்

வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புகளுடனான உறவுகளை இலங்கை புலனாய்வுப் பிரிவுகள் வலுப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக, இலங்கை பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வெளிநாட்டு சக்திகளால் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்களை அடையாளம் காண்பதறகாகவே, வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புகளுடன் இலங்கை புலனாய்வு அமைப்புகள், உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளவுள்ளன.

குறிப்பாக தீவிரவாதச் செயற்பாடுகள், போதைப் பொருள் கடத்தல், இணையக்குற்றங்கள் போன்றவற்றைக் கண்டறிவதற்கு, வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புகளின் உதவியைப் பெற்றுக் கொள்ள இலங்கை புலனாய்வு அமைப்புகள் திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 697

Search for people, places and things | Nagendram | Home

### வின்ஜக்ஷன்




### சிவகுமார்




### சிந்துஜா

இரண்டையும் பொண்ணுங்களா பெற்றவங்கள விட
இரண்டையும் பசங்களா பெத்தவங்கதான்
அதிகமா முதியோர் இல்லத்தில இருக்காங்க...





எந்த ஒரு பெண்ணும் தன் தாயை கவனித்துக்கொள்ள மற்றவர்களை நியமிப்பதில்லை. கடைசி நேரம் வரை அவளுக்கு அம்மாவாக இருக்கவே விரும்புகிறாள்.

### அனு அனுஜன்

"மருந்துக் கடையில வேலை கேட்டுப் போனியே... 'இன்டர்வியூ'ல என்ன கேள்வி கேட்டாங்க?"

"ஒரு கிறுக்கு கிறுக்கி, 'இந்த மருந்தோட பேரென்ன'ன்னு கேட்டாங்க!"



### தனுசியன் தனு

சோக்கா சொல்றாருங்க @...ரிலாக்ஸ் ப்ளீஸ்..

லைட்ட Off பண்ணிட்டு தூங்குன்னு
சொன்ன காலம் போய்
நெட்ட Off பண்ணிட்டு தூங்குன்னு
சொல்ற காலம் தான்
இப்போ நாம ஏற்படுத்தின
ஆகப்பெரிய மாற்றம்.!

### மது



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கடந்தகால தவறுகளை சீர்செய்தல்

மீள் இணக்கப்பாட்டு வழிமுறைகளை சீரழிக்கும் முயற்சியில் சில சக்திகள் ஈடுபட்டிருக்கும் அதேநேரம் தமிழ் மற்றும் சிங்கள சமூகங்களுக்கிடையில் உள்ள இடைவெளியை நிரப்பி உறவுப்பாலம் அமைப்பதற்கான பெரும் அழுத்தமொன்றும் உருவாகி வளர்ந்து வருகின்றது.

சமாதானத்தை நிலைகுலைய செய்வதிலேயே குறியாக இருந்து வரும் தீவிரவாத சக்திகளை முறியடிக்க கூடுதல் சிறப்பாக செயற்படும்படியான அழைப்புக்கள் வலிமையான சிந்தனைத் தெளிவும் அமைதியான மனவளமும் மிக்க தலைவர்களாலும் பெரியோர்களாலும் அனைத்து மக்களுக்கும் விடுக்கப்பட்டு வருவதை கடந்தவாரங்களின்போது காணக்கூடியதாக இருந்தது. தீவிரவாதிகளின் கருத்துக்களை நிராகரிக்கும்படி வட மாகாண ஆளுநர் கொழும்பில் ஆதரவு தேடி அறைகூவல் விடுத்துவரும் அதே நேரம் கிழக்கு மாகாணத்தில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, போரின்போது பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்குமென உறுதியளிக்கும் பிரசாரங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

சிறப்பாகவே தமிழ் பேசக்கூடியவரான கூரே அவர்கள் கடந்தகால தவறுகளை சீர் செய்வதற்கான சந்தர்ப்பத்தினை ஒரு ஆட்சி மாற்றத்தின் மூலம் மக்கள் இந்த அரசுக்கு வழங்கியுள்ளனர் எனக் கூறுகிறார். சிங்கள, தமிழ் மக்களிடையே இருந்து வந்த பிளவினை சீர்செய்து கொள்வதற்கான கடந்த கால முயற்சிகளையெல்லாம் தீவிரவாதிகள் தடுத்திருந்தனர். முன்னாள் பிரதம மந்திரியான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாய்க்க இந்த விடயத்தில் தீர்வு காணும் முயற்சியாக தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களுடன் ஒப்பந்தமொன்றை செய்து கொண்டார். இதுவே "பண்டா- செல்வா உடன்படிக்கை" என அழைக்கப்பட்டது.

எப்படியோ, இந்த ஒப்பந்தத்தை தீவிரவாதக் குழுக்கள் எதிர்ப்பதாக கூறிய அவரே கிழித்து வீசியுமிருந்தார். அதற்குப் பின்னர், ஐக்கிய தேசியக் கட்சி இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு எடுத்திருந்த முயற்சிகளுங்கூட தோல்விகளிலேயே முடிவடைந்திருந்தன.

இனங்களுக்கிடையில் மீள்-இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட கடந்தகால முயற்சிகளுங்கூட நாடு இரு தேசங்களாக பிரிவுபடாமல் ஒரே நாடாக இருப்பதை உறுதி செய்து



கொள்ளும்படியாக சிங்களம் மட்டுமே ஒரே தேசிய மொழியாக இல்லாமல் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிரண்டுமே இரு தேசிய மொழிகளாக இருக்க வேண்டுமென்ற முக்கிய அடிப்படையிலேயே முன்னைய போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருந்தன என்பதே கூரேயின் கூற்றாக இருக்கிறது.

இன்றுங்கூட உங்களில் எவராவது யாழ்ப்பாணம் செல்வார்களாகில் அங்கு நீங்கள் பேசுவதை அங்குள்ள மக்கள் விளங்கிக் கொள்ள முடியாதவர்களாயிருப்பது பெரும் பிரச்சினைக்குரிய விடயமாக இருப்பதை காண்பீர்கள். அநேகமாக 90% மக்கள் சிங்களம் பேச முடியாதவர்களேயாவர். எப்படியும் தெற்கிலுள்ள சிங்களப் பாடசாலைகளில் தமிழ் மொழியைக் கற்பிப்பதன் மூலம் அங்கு தகவல் தொடர்பு பிரச்சினைகளில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாயிருப்பதாக அவர் குறிப்பிட்டுக் கூறுகிறார். ஆனால், வட பகுதிப் பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்கப்படாதிருப்பது பிரச்சினைக்குரிய விடயமாகவே இருந்து வருகிறது.

நடைமுறையில் இருந்து கொண்டிருக்கும் மற்றும் உருவாகிவரும் பிரச்சினைகள் பற்றி கருத்திற்கொள்ளும் உணர்வற்றவர்களாக தீவிரவாதிகளின் கருத்துக்களை எதிர்கொள்ளும் விதத்தில் மட்டும் அரசியலை முன்னெடுப்பீர்களானால் அது உங்களை ஆபத்தான சூழ்நிலைகளுக்கே இட்டுச் செல்வதாயிருக்கும் என்று அவர் கூறுகிறார்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற இன ரீதியிலான கட்சிகளையோ எந்தவித மத ரீதியிலான கட்சிகளையோ உருவாக்காமல் அவைகளனைத்துக்கும் பொதுவாகவே சேவை செய்து அரவணைத்துச்செல்லும் அரசியல் கட்சிகளையே உருவாக்கி செயற்படுத்த வேண்டும் என்று கூறும் அவர், சகல சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொதுவான கட்சியாகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா மாற்றுவார் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாகவும் கூறுகிறார். கடந்த காலங்களில் சிறுபான்மையினரின் குறிப்பிடத்தக்க ஆதரவினை பெற்றிருந்த 'SLFP' யின் அந்த ஆதரவு நிலையில் மிக அண்மித்த காலப்பகுதியில் நிகழ்ந்த தேர்தல்களின் போது மோசமான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு வாழ் மக்களின் துன்பதுயரங்களையிட்டு தான் பெரிதும் அக்கறை கொண்டுள்ளதாகக் கூறும் அவர் அவர்களுக்கான குடிநீர் மற்றும் போதிய வீடுகள் இல்லாத மற்றும் வதிவிடப் பற்றாக்குறைகள் போன்றவற்றை குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

யாழ்ப்பாணத்து குடிநீர் பெரும்பாலும் குடிப்பதற்கு உகந்ததாக இல்லாத காரணத்தினால் சிறுநீரக நோய்த் தாக்கங்கள் பரவலாகவே அங்கு காணப்படுவதாகவும் கூறி தனது சொந்த குடிநீர் பயன்பாட்டிற்கு கொழும்பிலிருந்து குடிநீர் கொண்டு வரும் அனுபவத்தையும் எடுத்துக் கூறுகிறார். வட பகுதி மக்களது வீடில்லாப் பிரச்சினை விடய சம்பந்தமாக கூறுகையில் போர் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்கென 60 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்ற போதிலும் அதுவும் பற்றாக்குறையானதென்பதால் ஒரு இலட்சத்திற்கும் கூடுதலான வீடுகளாவது அவர்களுக்கு தேவைப்படும் என்றே தான் எண்ணுவதாக அவர் கூறுகிறார். அநேகமான வடபகுதி மக்கள் வருமானத்திற்கான வழி வகைகளெதுவும் அற்றவர்களாகவே காணப்படுவதால் இந்த விடயத்தை அரசு தனது அக்கறைக்குரிய விடயமாக கருதிச் செயற்படுவதாகவும் அவர் கூறுகிறார். தேசியப் பாதுகாப்பு முக்கியமானதாயிருக்கும் அதேநேரம் போரின்போது கையேற்கப்பட்ட வீடுகளில் தற்போது தேவையற்றவையாகக் கருதப்படுபவை மீளவும் அவற்றின் உரிமையாளர்களுக்கு திரும்பக்கொடுக்கப்படும்.

இலங்கையின் தென் பகுதி மக்களிலும் பார்க்க வடபகுதி மக்கள் பாரிய கடின வாழ்க்கைக்கு முகங்கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறும் ஆளுநர் கூரே அவர்கள், தான் வடமாகாண ஆளுநர் என்ற வகையில் மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் தனக்கு எந்தவித பிரச்சினையும் ஏற்பட்டதில்லை. அவருக்குங்கூட என்னுடன் எவ்வித முரண்பாடோ சிக்கலோ ஏற்பட்டதில்லை என்பதுடன் வட பகுதி மக்களுக்கு பணியாற்றுவதே தனது பிரதான இலக்காக கொண்டு நாட்டில் நடைபெற்றுவரும் மீள் இணக்கப்பாட்டு

**சண்டே லீடர் பத்திரிகையில் "கடந்த கால தவறுகளை சீர் செய்தல்" எனும் தலைய்லிஸ்வரன் றட்ணம் எழுதிய அரசியல் கட்டுரையின் தமிழாக்கம்.**

நடைமுறைகள் நாட்டினது அரசியலமைப்புக்கேற்ப நடைமுறைப்படுத்தப்படுகிறதா என கண்காணித்து வழிப்படுத்துவதே தனது பணியாகுமென கூறுகிறார்.

அரசாங்கத்தின் மீள் இணக்கப்பாட்டு வழிமுறைகளுக்கு விக்னேஸ்வரனவர்கள் என்றுமே தடையாக இருந்தவருமல்ல.

போரினால் நேரடியாகவே பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தமக்கு நீதி கிடைக்க வேண்டுமென்றே விரும்புகிறார்கள் என்பதுடன் அரசாங்கமும் கூட நீதியை பெற்றுக்கொடுப்பதாக உறுதியளித்துள்ளது.

காணாமற் போனவர்களுக்கான ஆணைக்குழு தனது விசாரணைகளுக்கான புதிய அமர்வுகளை கடந்தவாரம் நடத்தியதுடன் காணாமற்போனோர்களது குடும்பங்களின் வாக்கு மூலங்களையும் பதிவு செய்திருந்தது.

கிழக்கில் காணாமற்போனோர்களது குடும்பங்கள் மத்தியில் பேசிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, காணாமற்போனோர் பற்றிய விசாரணைகளுக்கான நிரந்தர அலுவலகமொன்றை உருவாக்குவதற்குரிய சட்டவிதிகள், ஏற்பாடுகள் இந்த வருட மே அல்லது ஜுன் மாதங்களில் இறுதி செய்யப்படும் என்று கூறியிருந்தார். காணாமற்போனோர்களுக்கான இந்த அலுவலகத்தை உருவாக்கும் தனது இப்பணியை 'ICRC' தொண்டு நிறுவனத்துடன் இணைந்தே அரசு மேற்கொள்ளும்.

இலங்கையில் போரின் போதும் அது முடிந்த பின்னருங்கூட ஆட்கள் காணாமற்போனது, போகச் செய்யப்பட்டது. போன்ற முன்னைய நிகழ்வுகள் திரும்பவும் இடம்பெறாமலிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகளை நிறைவேற்றும் நடவடிக்கைகளை அரசு எடுக்கும் விசாரணைகளின்போது போர் சம்பந்தப்பட்ட விடயங்கள் மட்டில் பாதிக்கப்பட்டவரது குடும்பங்களின் கருத்துக்கள்- ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கென உடனுக்குடன் அதிரடியாகச் செயற்படும் பணிக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளில் உண்மைத் தன்மையை கண்டறிவதற்கான "உண்மைகள் பற்றிய ஆணைக்குழு" ஒன்றினை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் இலங்கை அரசு எடுத்து வருவதாகக் கூறும் வெளிவிவகார அமைச்சரவர்கள் இதுமட்டிலான தென் ஆபிரிக்கவினது "உண்மைக்கும் மீள் இணக்கப்பாட்டிற்குமான ஆணைக்குழு" பொறிமுறையினை ஆராய்ந்து அறிவதற்கென தொழில் நுட்பக்குழுவொன்று அங்கு சென்றுள்ளது. முன்னாள் அரசாங்கம் செய்தது போல் ஒன்றுக்கொன்று போட்டியான ஆணைக்குழுக்களை இந்த அரசு திரும்பத் திரும்ப நியமிக்கப்போவதில்லை! ஆனாலும் போரின்போதும் அதற்குப் பிற்பாடும் தொடர்ந்தும் இடம்பெற்ற, நடக்கக்கூடாத நிகழ்வுகள் மீண்டும் இடம்பெறுவதை தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றியே இந்த அரசு ஆராய்ந்து அவற்றை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் என்வும் அமைச்சரவர்கள் கூறினார்.

**-தமிழில் யோகர்-**

## வடக்கு; முறையற்ற நியமனங்களை விசாரிக்கும்

# விசாரணைக் குழுவிலிருந்து அன்ரனி ஜெகநாதன் விலகல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி திணைக்களங்களில் இடம்பெற்ற முறையற்ற நியமனங்கள், இடமாற்றம், பதவி உயர்வு தொடர்பான விசாரணைக் குழுவில் இருந்து விலகியுள்ளதாக வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் உள்ளூராட்சி திணைக்களங்களில் இடம்பெற்ற முறையற்ற நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் தொடர்பான விசாரணையை மேற்கொளவதற்காக வடக்கு மாகாண சபையால் கடந்த வருடம் மார்ச் மாதம் 7 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி திணைக்களங்களில் இடம்பெற்ற முறையற்ற நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் தொடர்பாக எமக்கு 300 முறைப்பாட்டு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன எனவும் இவற்றில் 150 விண்ணப்பங்கள் தொடர்பான விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளதாகவும் விசாரணைகள் நேரடியாகவும் கடிதம் மூலமாகவும் நடைபெற்று வருவதால் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் இந்த வருடம் ஜனவரி மாதம் இது தொடர்பான முழுமையான அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படும் என குழுவின் தலைவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அக்குழுவின் நடவடிக்கை தொடர்பாகவும் விசாரணை அறிக்கை தொடர்பாகவும் குழுவின் தலைவரான அன்ரனி ஜெகநாதனைதொடர்புகொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

குறித்த நியமனங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் போது முன்னைய ஆளுநர் மீது அதிகப்படியான முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. என்னால் அழைக்கப்படும் கூட்டங்களுக்கு உறுப்பினர்கள் சிலர் வருகை தருவதில்லை. மேலும் பாதிக்கப்பட்டவர்கள் என்னிடம் தொடர்பு கொண்டு உடனடியான தீர்வை பெற்றுத்தருமாறு கேட்கின்றனர். தரக்குறைவான வார்த்தைகளாலும் பேசுகின்றனர். எனவே பல்வேறுபட்ட இடையூறுகள் காரணமாக குறித்த குழுவில் இருந்து விலகுவதாக கடந்த ஜனவரி மாதம் வடமாகாணசபை அவைத் தலைவருக்கு கடிதம் அனுப்பியுள்ளேன் என தெரிவித்தார்.

இது தொடர்பாக வடமாகாணசபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது குறித்த இராஜினாமா கடிதம் கிடைத்துள்ளதாகவும் அக்கடிதத்தை முதலமைச்சருக்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார்.

முறையற்ற நியமனங்கள தொடர்பான விசாரணையை மேற்கொள்ளும் ஏழு பேர் கொண்ட குழுவின் தலைவராக வடக்கு மாகாண சபை பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதபன், அ.பரஞ்சோதி, க.விந்தன, அ.அஸ்மின், தா.லிங்கநாதன், க.சர்வேஸ்வரன் ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

## இத்தாலி கடற்பரப்பில்—

# படகில் பயணித்த போது 214 அகதிகள் கைது!



சட்டவிரோதமான முறையில் ஆபத்தான படகு பிரயாணத்தை மேற்கொண்ட 214 பேர் இத்தாலிய கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 64 சிறுவர்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதியோப்பியா, சூடான், சோமாலியா, கமரூன், எகிப்து, ஏமன் மற்றும் எரிட்றியன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இவர்கள் எகிப்திலிருந்து இந்தப் படகுப் பயணத்தை ஆரம்பித்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இதேவேளை எகிப்திலிருந்து இத்தாலி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த அகதிகள் படகு மத்திய தரைக்கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானதில் 400 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டது.

இந்த நிலையில் மற்றுமொரு படகு இத்தாலி கடற்பகுதியில் வைத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை முற்றுகையிடப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளில் நிலவி வரும் அசாதாரண நிலைமைகளால் அங்கிருந்து இடம் பெயரும் ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளில் அகதி அந்தஸ்து கோருவதற்கு ஆபத்தான படகுகள் மூலம் பிரயாணம் செய்து வருகின்றனர்.

பொருளாதார* மற்றும் பயங்கரவாத தாக்குதல் சவால்களை எதிர்நோக்கி வருகின்ற ஐரோப்பிய வலய நாடுகள் தற்போது அகதிகள் நெருக்கடியையும் சந்தித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# செய்தித்துளிகள்

## குளியாபிட்டியில் மூன்று கைக்குண்டுகள் மீட்பு

குளியாபிட்டி ஹெட்டிபொல பிரதேசத்தில் மூன்று கைக்குண்டுகள் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த கைக்குண்டுகள் ஐஸ்கிறீம் கொள்கலன் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (இ-5)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவு தோட்டத்தில் வீடு ஒன்றில் இருந்து ஒரு தொகை கஞ்சாவுடன் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேக நபரின் வீட்டில் இருந்து கஞ்சா மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## தாய், சிசுவை தாக்கிவிட்டு தலைமறைவானவர் கைது

பொகவந்தலாவ மேற்பிரிவு தோட்டத்தில் கடந்த 14ஆம் திகதி பிறந்து 45 நாட்களேயான சிசுவை தாக்கிவிட்டு தலைமறைவாகியிருந்த தந்தையை நேற்று மாலை கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் கடந்த 14ஆம் திகதி மதுபோதையில் வந்து தகாத வார்த்தைகளால் பேசி தன்னையும் தனது சிசுவையும் கடுமையாக தாக்கிவிட்டு தலைமறைவாகியிருந்ததாக சந்தேகநபரின் மனைவி கடந்த 15ஆம் திகதி பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்திருந்தார்.

தாக்கப்பட்ட சிசுவும் தாயும் பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொகவந்தலாவ பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)

## தீர்த்தவாரித் திருவிழா நாளை

வயாவிளான் மானம்பராய் பிள்ளையார் ஆலய தீர்த்தவாரித் திருவிழா வழிபாடு நாளை 21 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற இருப்பதால் இத்தருணம் சகல அடியார்களும் சென்று வழிபடும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இதில் பங்குபற்றும் அடியவர்கள் காலை 8.30 மணியளவில் வயாவிளான் மத்திய கல்லூரியில் ஒன்று கூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு 077 507 8025,077 780 2466 என்ற தொலைபேசி இலக்கங்களுடன்தொடர்பு கொள்ளவும். (இ-5)

## 101 கிலோ ஹெரோயின் கடத்திய நபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

101 கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின்போதைப் பொருள் கடத்திய சந்தேக நபர்களின் விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தென் பகுதி கடற்பரப்பில் வைத்து அண்மையில் 101 கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

இந்த போதைப்பொருளுடன் ஈரான், பாகிஸ்தான் மற்றும் இலங்கையர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சந்தேக நபர்கள் நேற்று கொழும்பு கோட்டை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதி வரையல் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் லங்கா ஜயரட்ன உத்தரவிட்டுள்ளார். (இ-5)

# செல்பியால் சர்ச்சையில் சிக்கிய பெண் அமைச்சர்

மகாராஷ்டிராவில் வறட்சியை பார்வையிடச் சென்ற இடத்தில் சென்று செல்பி எடுத்த பெண் அமைச்சரின் செயல் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மகாராஷ்டிர மாநிலத்தில் போதிய மழை பெய்யாததால் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக குடிக்கக்கூட தண்ணீர் கிடைக்காமல் அம்மாநில மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஏனைய பகுதிகளில் இருந்து ரயில்கள் மூலமாக தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மகாராஷ்டிரா மாநிலத்தின் ஊரக வளர்ச்சித்துறை மற்றும் நீர் பாதுகாப்பு அமைச்சரான பங்கஜா முண்டே லத்தூர் பகுதியில் உள்ள கால்வாய்களை பார்வையிடச் சென்றுள்ளார்.

அப்போது வறண்டு இருந்த கால்வாய்கள் முன்னால் நின்று அவர் செல்பி எடுத்துள்ளார்.

இச்செயலுக்கு சிவசேனா அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. சிவசேனாவின் செய்தித்தொடர்பாளர் மனிசா கூறுகையில் , தண்ணீருக்காக பெண்கள் மற்றும் குழந்தைகள் நெடுந்தூரம் செல்கின்றனர். வறட்சி பாதித்த பகுதிகளுக்கு நீர் கிடைக்க சிவசேனா கூட உதவி வருகிறது. ஆனால் அமைச்சரோ செல்பி எடுத்துக்கொண்டிருக்கிறார் என்று தெரிவித்துள்ளார்.

இதேபோல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளும் தங்களது கண்டனத்தை தெரிவித்துள்ளன. இந்நிலையில், வறட்சியான அந்த பகுதியில் தண்ணீர் ஊறியிருந்தது. நாங்கள் மேற்கொண்ட பணிகளால் தண்ணீர் வந்ததை தெரிவிக்கவே சில படங்களை எடுத்தேன் என்று தனது செயலுக்கு பங்கஜா முண்டே விளக்கமளித்துள்ளார். (இ-5)

# தமிழ் சினிமா வரலாறு

142

## மனைவியின் சம்மதத்துடன் வி.என்.ஜானகியை மணந்தார் எம்.ஜி.ஆர்

தவறுமேயானால் குறி வைக்க மாட்டான் என்று வசனம் பேசி பல வீரதீர செயல்களைச் செய்தார்.

ஒரு கட்டத்தில் நாற்காலியை காலால் உதைத்து அது தன்னிடமே வருமாறு செய்து அதில் உட்கார்ந்து அஞ்சலிதேவியைச் சந்திப்பார். அக்கட்டம் ரசிகர்களிடையே பெரும் கை தட்டலைப் பெற்றது. சுருக்கமாகக் கூறினால் இந்தப்படத்தின் மூலம் எம்.ஜி.ஆரின் புகழ் மேலும் ஒரு படி உயர்ந்தது.


செருகளத்தூர் சாமா மர்ம ஜோகியாகத் தோன்றி ரசிகர்களைப் பயமுறுத்தினார். அதனால் இப்படத்துக்கு "ஏ" சர்டிபிகேட் (வயது வந்தோருக்கு மட்டும்) கொடுக்கப்பட்டது. தமிழில் "ஏ" சர்டிபிகேட் பெற்ற முதல் படம் இதுதான்.

என் தங்கை

1952 இல் எம்.ஜி.ஆர் நடித்த குமாரி, என் தங்கை ஆகிய படங்கள் வெளிவந்தன.

இதில் என் தங்கை அருமையான படம். பிற்காலத்தில் சிவாஜி கணேசனும் சாவித்திரியும் நடித்த பாசமலர் எப்படி அண்ணன் தங்கை பாசத்திற்கு எடுத்துக் காட்டும் காவியமாக அமைந்ததோ அதுபோன்ற உன்னதமான படம் என் தங்கை.

இதில் எம்.ஜி.ஆருக்கு ஜோடி கிடையாது. பார்வை இழந்த தன் தங்கையின் (ஈ.வி.சரோஜா) எதிர்காலம் நன்றாக அமைய



வேண்டும் என்பதற்காக தன் வாழ்க்கையையே அர்ப்பணித்த தியாகியாக எம்.ஜி.ஆர் நடித்தார்.

பல சோதனைகளுக்குப் பின் தங்கைக்கு மாப்பிள்ளை பார்த்து திருமண ஏற்பாடுகள் செய்வார் எம்.ஜி.ஆர். கடைசி நேரம் எதிர்பாராத விதமாக தங்கை இறந்துவிடுவாள்.

தங்கையின் உடலை தோள் மீது போட்டுக் கொண்டு கடற்கரையில் நடப்பார் எம்.ஜி.ஆர். அவரைக் காப்பாற்றுவதற்காக பி.எஸ்.கோவிந்தன் தன் காதலியுடன் ஓடுவார்.

ஆனால் கடற்கரை சாலையில் நடக்கும் எம்.ஜி.ஆர். கடல் மணலில் வேகமாக நடப்பார். பி.எஸ்.கோவிந்தன் காப்பாற்றுவதற்குள் கடலில் இறங்கிடுவார் தங்கையின் உடலுடன்!

இந்தக் காட்சியைப் பார்த்த பெண்கள் கதறினார்கள். ஆண் கண் கலங்கினார்கள்.

மருதநாட்டு இளவரசி போல இதிலும் எம்.ஜி.ஆருக்கு சாதரண உடை. நாலு முழ வேட்டி கட்டம் போட்ட சட்டை. படம் முழுவதும் இந்த தோற்றத்தில்தான் எம்.ஜி.ஆர் வருவார்.

பெண்களின் கண்ணீர் வெள்ளத்தின் வெற்றி நடை போட்ட படம் என்தங்கை.

மேகலா பிக்சர்ஸ்

இதற்கிடையே கருணாநிதி, எம்.ஜி.ஆர், டைரக்டர் காசிலிங்கம், பி.எஸ்.வீரப்பா ஆகியோர் சேர்ந்து மேகலா பிக்சர்ஸ் என்ற படக் கம்பெனியைத் தொடங்கினர்.

இந்த நிறுவனத்தின் முதற்படம் நாம். இதில் எம்.ஜி.ஆரும் வி.என். ஜானகியும் இணைந்து நடித்தனர். (ஜானகி கடைசியாக நடித்த படம் இதுதான்)

கதை வசனத்தை கருணாநிதி எழுதினார்.

எம்.ஜி.ஆர். பாக்சர் வேடத்தில் சிறப்பாக நடித்தார். (தொடரும்)



# ரணில் அரசாங்கத்தையும் கவிழ்க்குமா இந்தியா?

...ரணில் சீனாவிற்குச் சென்ற போது, இலங்கைக்கு வருகை தந்திருந்த ஜேர்மனிய நாடாளுமன்ற பிரதிநிதிகள் அடங்கிய குழுவினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்துக் கலந்துரையாடினார். குறித்த ஒரு நாட்டுடனான உறவு நிலையைக் கருத்திற் கொண்டு அந்நாட்டின் பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவிக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் இலங்கை மேற்கொள்ளாது என மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். இந்தச் செய்தியை மைத்திரி இந்தியாவிற்கே வழங்கியிருந்தார்.

இலங்கையில் சீனாவின் செயற்பாடுகள் என்ன என்பதை அறிவதில் ஜேர்மனி ஆர்வங் காண்பிக்கும் ஒரு நாடாகும். மைத்திரி ஜேர்மனிக்குப் பயணம் செய்த போது, ஜேர்மனிய ஜனாதிபதி ஏஞ்சலா மார்க்கல், இலங்கை மற்றும் சீனாவிற்கு இடையிலான உறவு நிலை குறித்துக் கலந்துரையாடுவதில் ஆர்வங் காண்பித்தார். மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் சீனாவுடனான இலங்கை உறவு தொடர்பாக ஜேர்மனி அதிருப்தி அடைந்தததாக ஜனாதிபதி மைத்திரியிடம் குறிப்பிட்டிருந்தார்.

இந்தியா மற்றும் அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் மைத்திரி-ரணில் அரசாங்கத்தை அமைப்பதற்கு உதவின என்பது வெளிப்படையான உண்மையாகும். சீனாவின் செல்வாக்கிற்கு இலங்கை உட்பட்டிருந்ததே இதற்கான மிக முக்கிய காரணமாகும். எனினும், இந்த நாடுகள் சீனாவுடனான மைத்திரி-ரணில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு ஆராய்வார்கள் என்பது எமக்குத் தெரியாது.

பண்டாரநாயக்காக்கள் இந்தியாவுடன் நெருங்கிய நட்புறவைப் பேணினார்கள். எனினும், 1962 இல், இந்திய-சீன யுத்தத்தின் போது, இந்த யுத்தத்தை நிறுத்துவதற்கான ஒரு அனுசரணையாளராக சிறிமாவோ செயற்பட்டார். ஆனால் இவர் சீனாவிற்கு ஆதரவாகச் செயற்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. இந்திய-சீன யுத்தம் இடம்பெற்றால், திருகோணமலைத் துறைமுகத்தை சீனாவிடம் கையளிப்பது தொடர்பான ஒரு இரகசிய உடன்பாடும் சிறிமாவோவால் எட்டப்பட்டதாக சந்தேகிக்கப்பட்டது.

1964 இல், சிறிமாவோவைப் பதவி நீக்கம் செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு இந்தியா உதவியாகக் கூறப்படுகிறது. சிறிமாவோ அரசாங்கத்தின் சீன ஆதரவு நிலைப்பாடே இதற்குக் காரணமாகும். 1970 இல், சிறிமாவோ மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது, 1971 இல் இடம்பெற்ற ஜே.வி.பி கிளர்ச்சிக்கு துணை போனதாக குற்றம் சுமத்தப்பட்டது. அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியுடன் சிறிமாவோ நெருங்கிய உறவைப் பேணிய போதிலும், இந்திய - பாகிஸ்தானிய யுத்தத்தின் போது பாகிஸ்தானிய விமானமானது இலங்கையல் தரித்து நின்று எரிபொருள் நிரப்புவதற்கு சிறிமாவோ அனுமதி வழங்கியிருந்தார். எனினும், இந்தியா சிறிமாவுடனான உறவை முறிக்கவில்லை.

சீனாவிற்கான ரணிலின் பயணத்தின் போது, இந்தியாவிற்கு சந்தோசமளிக்கும் செய்தியை சீன ஊடகங்கள் வெளியிட்டன. சீனப் பட்டுப்பாதைத் துறைமுகத் திட்டம் அமுல்படுத்தப்படும் இந்தவேளையில், சீனாவானது பாகிஸ்தானிய துறைமுகங்கள் மீதோ அல்லது பாகிஸ்தான் மீது தங்கியிருக்காது என சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. பாகிஸ்தானில் தோன்றியுள்ள பயங்கரவாத அச்சுறுத்தலே இதற்குக் காரணம் எனவும் சீன ஊடகங்கள் சுட்டிக்காட்டின. இது இந்தியாவிற்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் இணைந்து செயற்படுவதற்கு கொழும்புத் துறைமுக நகரம் தளமாக அமையும் என்பதன் காரணமாகவே இத்திட்டம் தொடர்பாக இந்தியா அச்சமடைந்தது. பாகிஸ்தான் பாதுகாப்பற்ற ஒரு நாடு என்பதை சீனா தெரிவித்ததானது இந்தியாவிற்கு வழங்கப்பட்ட ஒரு சமிக்ஞையாகும். அதாவது இந்த சமிக்ஞையானது மைத் திரி-ரணில் அரசாங்கத் தால் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ள கொழும்புத் துறைமுக நகரத் திட்டமானது இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையாது என்பதைக் குறித்து நிற்கிறது.

சீனாவின் இந்த சமிக்ஞைகளை எவ்வாறு இந்தியா ஏற்றுக்கொள்ளும்? மைத்திரி-ரணில் அரசாங்கத்திற்குப் பாடத்தைப் புகட்டுவதற்காக மகிந்தவுடன் இந்தியாவானது தனது உறவைப் புதுப்பித்துக் கொள்ளுமா என்பதைத் தற்போது கூறமுடியாது.

(முற்றும்)

வாக்குறுதி கொடுப்பவன் அதற்கு கடனாளி ஆகிறான்.

–தலாமூத்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழர்களின் எதிர்காலம் ஒரு சிலரிடம் இருந்தால்...

தமிழர்களின் எதிர்காலம் எப்படி அமையப் போகிறது என்பதை துணிவதற்கு எந்த ஆதாரங்களும் இல்லாமல் உள்ளது.

தென்பகுதியைப் பொறுத்தவரை மைத்திரி அரசா? மகிந்தவின் அரசா? சிறந்தது என பட்டிமன்றம் நடத்துவதிலேயே நேரத்தை செலவிடுகின்றது.

அப்படிச் செய்வேன்; இப்படிச் செய்வேன் என்று கூறும் ஜனாதிபதி மைத்திரி எதனையும் செய்யாததால் முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் எதிர்ப்பு வீறு கொள்கிறது.

இத்தகைய போக்கில் விடுதலைப் புலிகள் மீளவும் எழுகை பெறலாம் என்ற பிரசாரங்களும் தென்பகுதியில் முளைவிட ஆரம்பித்துள்ளன.

இது ஒருபுறம் நடந்து கொண்டிருக்க பேரினவாதத்தை தூண்டும் தென்பகுதி ஊடகங்கள் வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத்திட்ட முன்வரைபை அடிப்படையாகக் கொண்டு வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் ஒரு தீவிரவாதி எனக் காட்டுவதில் முனைப்புக் காட்டியுள்ளன.

நிலைமை இதுவாக இருக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை என்ன செய்கிறது? என்ன செய்யப் போகிறது? அது யார் பக்கம் நிற்கிறது? என்று எதுவுமே புரியாமல் உள்ளது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அண்மையில் தெரிவித்த கருத்துக்கள் தமிழ் மக்கள் தக்க தலைமையை இழந்துவருகின்றனர் என்பதை கோடி காட்டுவதுடன் சம்பந்தரின் முதுமை வெளிப்படுகிறது என்ற உண்மையையும் உணர்த்தி நிற்கின்றது.

இத்தகையதொரு நிலையில் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றிய விவகாரங்களைத் தீர்மானிக்கின்ற அதிகாரம் கூட்டமைப்புக்குள் இருக்கக் கூடிய ஒரு சிலரிடம் இருப்பதால் தமிழ் மக்கள் மிகப்பெரும் அபாயத்தை எதிர்கொள்ளப் போகின்றனர் என்பதை அறுதியிட்டுக் கூற முடியும்.

ஒரு இனம் பற்றிய முடிவுகள், தீர்மானங்கள் பரவலாக்கப்படாமல் ஒரு சிலரின் கைகளில் இருக்குமாயின் அதன் விளைவு பாரதூரமானது என்பது அனைவரும் அறிந்ததே.

அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இடம்பெற்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கூட, கூட்டமைப்பின் தலைமை என்ன செய்கிறது? என்ன நடக்கிறது? என்பதே தெரியாமல் உள்ளது.

அட, இனப்பிரச்சினை தொடர்பில் கூட்டமைப்பின் தலைமை என்ன செய்கிறது என்பதை எங்களுக்குச் சொல்லுங்கள் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்கலாம்தானே! என்றால் அதுவும் நடக்கப் போகின்ற காரியமல்ல.

ஏனெனில் கேள்வி கேட்டால் அடுத்த தேர்தலில் ஆசனம் தரப்பட மாட்டாது. எனவே மௌனமாக இருப்பதுதான் ஒரே வழி என்ற முடிவு எடுக்கப்படுகிறது.

கூட்டமைப்பு ஆசனம் தராவிட்டால் புதிய கட்சி அமைத்தல்; சுயேட்சையாகப் போட்டியிடுதல் என வெளிக்கிட வேண்டியதுதானே என்றால், ஐயா வீட்டுக்கு வாக்களித்த எங்கள் மக்கள் உண்மையை உணர்ந்து விட்டார்களா என்று கேட்கப்படுகின்றது.

இத்தகையதொரு சூழ்நிலையில் ஒரு சிலரின் தீர்மானங்களும் இரகசியமான முடிவுகளும் தமிழ் மக்களை கடுமையாகப் பாதிக்கும் என்பதை மட்டும் இப்போதைக்கு இவ்விடத்தில் கூற முடியும்.

# சித்தாந்த அட்டகம் தந்த சிவனருட் செல்வர் உமாபதி சிவாச்சாரியார் குருபூசை



சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெருமைக்கு உரியவர்கள் சமயகுரவர்களும் சந்தான குரவர்களும் ஆவர். சமய குரவர்களின் வரலாற்றையும் பெருமையையும் பெரியபுராணம் எடுத்து இயம்புகிறது. சைவசித்தாந்தத்துவங்களைக் கூறும் நூல்களைத் தந்த பெருமைக்கு உரியவர்கள் சந்தான குரவர்கள் ஆவர். மெய்கண்டதேவர், அருணந்தி சிவாச்சாரியார், மறை ஞானசம்பந்தர், உமாபதிசிவாச்சாரியார் ஆகிய நால்வரும் சந்தான குரவர்கள் என்று போற்றப்படுகின்றனர். இவர்களுள் இறுதி வரிசையில் வைத்து எண்ணப்படுபவர் உமாபதி சிவாச்சாரியார் ஆவார்.

உமாபதி சிவாச்சாரியார் சிதம்பரம் தில்லைவாழ் அந்தணர் குலத்தை சேர்ந்தவர். வேதநெறியிற் சிறந்து விளங்கிய உமாபதி சிவாச்சாரியார் சைவசித்தாந்த ஞானத்திலும் பெரும் புலமை பெற்று விளங்கினார்.

சிதம்பரம் திருக்கோயிலின் சூழலில் உள்ள கொற்றவன்குடி என்ற சிற்றூரில் நிரந்தரமாக வாழ்ந்த காரணத்தால் கொற்றவன்குடி முதலியார் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார்.

கோயிற்புராணம், சேக்கிழார் புராணம், திருத் தொண்டர் புராணசாரம், திருமுறை கண்ட புராணம், திருப்பதிக் கோவை முதலான நூல்களும் பாடியுள்ளார்.

திருவாவடுதுறை ஆதீனத்தை ஸ்தாபித்த நமசிவாய தேசிகர் இவரது மாணவருள் ஒருவராவார்.

உமாபதி சிவாச்சாரியார் முத்தியடைந்த தினம் சித்திரை அத்த நட்சத்திரமாகும்.

**சிவஸ்ரீ.சா.சோமதேவக் குருக்கள்**
**அரசகேசரிப் பிள்ளையார் கோவில், நீர்வேலி**

# நீதிபதிகள் இடமாற்றம்

(வவுனியா)

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் வவுனியாவில் இருந்து திருகோணமலைக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் வவுனியாவுக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பிரதம நீதியரசரின் உத்தரவுக்கமைய இடம் பெற்றுள்ள இந்தத் திடீர் இடம் மாற்றம் இன்று 20 ஆம் திகதி புதன்கிழமையில் இருந்து நடைமுறைக்கு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# பரணகம குழுவினரின் கிளிநொச்சி அமர்வின்போது புதிய முறைப்பாடுகளையும் செய்ய முடியும்

காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் மக்ஸ்வெல் பரணகம தலைமையிலானஜனாதிபதிஆணைக்குழு கிளிநொச்சியில் மீண்டும் அமர்வுகளை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

இது குறித்து ஆணைக்குழு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 28ஆம் திகதி வியாழக்கிழமை வரையிலான மூன்று தினங்கள் அமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

இந்த அமர்வுகள் அனைத்தும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் காலை 8.30 முதல் மாலை 5 மணி வரையில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 25, 26 ஆம் திகதிகளில் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்காகவும் 27 ஆம் திகதி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்காகவும், 28 ஆம் திகதி பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்காகவும் அமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

இந்த அமர்வுகளின் போது சாட்சியமளிப்போருக்கான அழைப்புக்கள் மாவட்ட செயலகத்தின் ஊடாக விடுக்கப்பட்டுள்ளதோடு புதிதாக முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கும் முடியுமென ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பெப்ரவரி மாதம் 15ஆம்திகதியுடன் ஆணைக்குழுவின் பதவிக் காலம் நிறைவுக்கு வந்திருந்த நிலையில் மேலும் மூன்று மாதகாலம் ஆணைக்குழுவின் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இறுதி அறிக்கையொன்றும் கோரப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டு வரையில் இடம்பெற்றிருந்த காணாமல்போனோர் தொடரபான சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்வதற்காக முன்னாள் நீதியரசர் மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஆணைக்குழுவை 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் பல்வேறு அமர்வுகளை நடத்திய இந்த ஆணைக்குழு 23 ஆயிரத்திற்கும் அதிகமான முறைப்பாடுகளை பதிவு செய்திருந்ததோடு கடந்த ஆண்டு இடைக்கால அறிக்கையொன்றையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-281)

# மணற்காடு றோ.க.த.க.பாடசாலைக்கு 8.6 மில்.ரூபா செலவில் புதிய கட்டடம்

## நாளை அடிக்கல் நாட்டு விழா

சுனாமியால் பாதிப்படைந்து குறைந்தளவு கட்டட வசதிகளுடன் இயங்கி வருகின்ற மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு 8.6 மில்லியன் ரூபாய் செலவில் வகுப்பறைக கட்டடத் தொகுதியொன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, நாளை 21ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் இணைந்து அடிக்கல்லை நாட்டவுள்ளனர். இடவசதி குறைந்த இந்தப் பாடசாலைக்கு கட்டடம் கட்டுவதற்கு நிதி தேவையென்பதை கவனத்தில் எடுத்த யாழ். மாவட்டச் செயலாளர் நாகலிங்கன் வேதநாயகன், மேற்கொண்ட நடவடிகையின் பயனாக பிரித்தானியாவில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்தவர்களால் நிதியுதவி கிடைக்கப்பெற்றது.

இந்த நிதியைக் கொண்டு 110 அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்ட இரண்டு மாடிக்கட்டடத்தொகுதி10 வகுப்பறைகளை உள்ளடக்கியதாக அமைக்கப்படவுள்ளது. சுனாமி பாதிப்பையடுத்து, கடற்கரையிலிருந்து சுமார் 300 மீற்றர் தூரத்துக்கு அப்பால் இந்தக் கட்டடத் தொகுதியானது அமைக்கப்படுகின்றது.

அடிக்கல் நாட்டும் நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா, சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், யாழ். மாவட்டச் செயலாளர் நாகலிங்கன் வேதநாயகன், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன்,

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.நந்தகுமார், நிதியுதவியில் 70 வீதமான பங்களிப்பை வழங்கிய இங்கிலாந்தில் வாழும் மாணிக்கம் கந்தையா மற்றும் வே.சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (இ-4)

# இறுதி நாள் நிகழ்வு இன்று

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம், மாதர் சங்கம், பாலர் பாடசாலை என்பன இணைந்து நடத்தும் 64 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இல்ல மெய் வல்லுநர் போட்டியும் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வுகளினது இறுதி நாள் நிகழ்வு இன்று 20 ஆம் திகதி புதன் கிழமை பி.ப. 4 மணிக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலைய முன்றலில் நடைபெறும். (இ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** இரணைமடு, திருவையாறு, முறிகண்டி, வட்டக்கச்சி, இரணைமடு விமானப்படை I மற்றும் II, வட்டக்கச்சி பாம், மத்திய வங்கி, இரணைமடு விசேட அதிரடிப்படை இராணுவ முகாம, MAS Active, யுனிச்செலா, பொறியியல் பீடம், விவசாயபீடம், North Cargill's Agri foods, 651 ஆவது படைப்பிரிவு முகாம, 652ஆவது படைப்பிரிவு முகாம், இராணுவ பாசறை I, இராணுவபாசறை II, இராணுவ பாசறை, 7ஆவது படையணி இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** நறுவிலிக்குளம், தோமஸ்புரி, வங்காலை நீர்ப்பாசன சபை, வங்காலை கடற்படை முகாம ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## நம்பிக்கை வேண்டும்



✦ கடவுளிடம் நம்பிக்கை இல்லாததே துன்பத்திற்கெல்லாம் அடிப்படைக் காரணம்.

✦ எண்ணத்திற்கும், பேச்சிற்கும் ஒற்றுமை இருந்து விட்டால் போதும். வேறு எந்தச் சாதனையும் தேவையில்லை.

✦ உடலைப் பெற்று விட்ட உயிர்கள் அனைத்திற்கும் இன்பம், துன்பம் வந்தே தீரும்.


✦ முற்பிறவியில் செய்த நல்வினை, தீவினைக்கேற்ப இந்த பிறவியில் வாழ்வின் போக்கு அமைகிறது.

✦ பக்தியுடன் கடவுளின் திருநாமத்தைச் சொல்லுங்கள். எல்லாப் பாவங்களில் இருந்தும் விடுதலை கிடைக்கும்.

## புதுவருடத்தினை முன்னிட்டு

# சன்ஸ்டார் வி.கழகம் நடத்திய கரப்பந்து; பாரதிபுரம் அம்பிகை வி.கழகம் முதலிடம்







தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு பூவரசங்குளம் கந்தன்குளம் 'சன்ஸ்டார்' விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், வவுனியா மாவட்டத்தில் அழைப்பு விடுக்கப்பட்டு கலந்து கொண்ட கழகங்களுக்கிடையில் கரப்பந்தாட்டப்போட்டியில் பாரதிபுரம் அம்பிகை விளையாட்டுக்கழகம் முதலிடத்தை கைப்பற்றிக் கொண்டது.

கந்தன்குளம் 'சன்ஸ்டார்' விளையாட்டுக்கழகத்தின் தலைவர் சிவானந்தம் (ரவி) தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கந்தன்குளம் கிராமத்தில் நடைபெற்ற இந்த கரப்பந்தாட்ட போட்டியில் ஓமந்தை, வேப்பங்குளம், நெளுக்குளம், கற்பகபுரம், பாரதிபுரம், தாலிக்குளம் பூவரசங்குளம், வேலங்குளம், கந்தன்குளம் கிராமங்களைச்சேர்ந்த 18 அணிகள் பங்கு பற்றியிருந்தன.

அணிக்கு நான்கு வீரர்களைக் கொண்டு விலகல் முறையில் knock out) நடைபெற்ற கரப்பந்தாட்ட போட்டியில்,

முதலாம் இடத்தை அம்பிகை விளையர்ட்டுக்கழகமும் (பாரதிபுரம்), இரண்டாம் இடத்தை கிருஷ்ணா விளையாட்டுக்கழகமும் (தாலிக்குளம்), மூன்றாம் இடத்தை வேப்பங்குளம் விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன.

பூவரசங்குளம் கிராம அலுவலர் கஜேந்தன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் சார்பில் அவரது பிரதிநிதியாக கந்தா ஆகியோர் கலந்து கொண்டு வெற்றியீட்டிய கழக வீரர்களை வெற்றிக்கிண்ணங்களும், பதக்கங்களும் வழங்கி கௌரவித்தனர்.

இந்த கரப்பந்தாட்ட போட்டிக்கான நிதியுதவி அனுசரணையை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வழங்கியிருந்தார். (க-250)



ரேவடி விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்ட தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இப்போட்டியில் சைனிங்ஸ் அணியை எதிர்த்து ரேவடி அணி மோதியது. பரபரப்பான ஆட்டத்தில் ரேவடி அணி வெற்றி பெற்றது. இப்போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற சைனிங்ஸ அணியைப் படத்தில் காணலாம்.

# உடுவில் இ.கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கபடி சுற்றுப் போட்டி

## இணுவில் கலை ஒளி சம்பியன்



உடுவில் இளைஞர் சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வருகின்ற 2016 ஆம் ஆண்டுக்கான பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வில் ஆண்களுக்கான கபடிப் போட்டியின் இறுதிப்போட்டியில் சுன்னாகம் அம்பாள் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி கபடியில் சம்பியனானது இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழகம். (க)

SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இறுதிப்போட்டியில் வீனஸ் அணி

அருள்ஒளி சிறுவர் கழகம் நடத்திய மென்பந்துச் சுற்றுத் தொடரின் முதல் போட்டியில் முல்லைத்தீவு இ.போ.ச அணியையும் காலிறுதியில் வதிரி ஸ்ரீமுருகன் அணியையும் அரையிறுதியில் தொண்டைமானாறு ஒற்றுமை அணியையும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது வீனஸ் அணி. (க)

# கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம் - 2016 பரிஸ் கே.சி.சி.சி அரையிறுதிக்கு தெரிவு

கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணத்திற்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 1991 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 23 வருடங்களாக நடத்தும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் மேற்பிரிவு இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் மானிப்பாய் பரிஸ் அணி கே.சி.சி.சி. அணியை 5 இலக்குகளால் வெற்றி பெற்று மேற்பிரிவில் பரிஸ் முதலாவது அணியாகவும் கே.சி.சி.சி. அணி இரண்டாவது அணியாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. அணி 28.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெயரூபன் 20, யனுதாஸ் 18, ராகுலன் 30, பானுஜன்-26, உத்தமன் 17, ஆதித்தன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். கிசோ 2, சுபாஸ் 1,சாந்தன் 2, யாழினியான் 1 இலக்கினைக் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் அணி 19.4 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றனர்.

யாழினியான் 13, ஆன்சிலி 71, கிசோ 39 ஓட்டங்களைப் பெற்றனர். இப்போட்டியில் வெற்றி பெற்ற மானிப்பாய் பரிஸ் அணியினர் அன்று மாலை நடைபெற்ற போட்டியில் தோல்வியடைந்த திருநெல்வேலி சீ.சீ. அணியுடன் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவிருக்கும் அரையிறுதிப்போட்டியில் கலந்து கொள்வர். (க)

# பாகிஸ்தான் தெரிவுக்குழு தலைவரானார் இன்சமாம்



பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவராக இருந்தவர் இன்சமாம் உல்-ஹக்.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக கடந்த 2015 முதல் பணியாற்றிய இவர் சமீபத்தில் அந்த பொறுப்பிலிருந்து விலகினார்.

46 வயதான இவர் தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய தெரிவுக்குழுத் தலைவராக நேற்று முன்தினம் அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்டார்.

இதுபற்றி அவர் கூறுகையில், 'பாகிஸ்தான் அணிக்காக நிறைய போட்டிகளில் விளையாடியிருந்தாலும் தெரிவாளராக பணியாற்றுவது முதன்முறையாகும். உடனடியாக வெற்றியை கொண்டுவர என்னிடம் எந்த மந்திரக்கோலும் இல்லை. வலுவான பாகிஸ்தான் அணியை உருவாக்க பல விடயங்களை சரி செய்ய வேண்டியுள்ளது.

எனவே வெற்றிக்கு ரசிகர்கள் பொறுமை காப்பது அவசியம். இங்கிலாந்துக்கெதிரான தொடருக்கு நம்பிக்கையான அணியை உருவாக்குவேன். அணித்தலைவர் மற்றும் பயிற்சியாளர் சொல்லும் யோசனைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பேன்' என்றார்.

மேலும் முன்னாள் வீரர்கள் வாசீம் ஹைதர், வஜஹத் உல்லா வாஸ்தி, தவ்சீப் அகமது ஆகியோர் தெரிவு க்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். (க)

## மூன்று மாதங்களுக்குள் 70 எயிட்ஸ் நோயாளிகள்

கடந்த 3 மாதங்களுக்குள் 70 எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தகவல் தெரிவித்துள்ளது.

மேலும் ஓரினச் சேர்க்கை மூலமே அதிகளவு எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் எயிட்ஸ் நோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

இவ்வாறு எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளானவர்களுள் 100க்கு 70 வீதமானோர் ஆண்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் 25 தொடக்கம் 46 வயதுக்கு இடைப்பட்டவர்களே எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் எயிட்ஸ் நோய் தொடர்பாக மக்களை தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார். (இ-5)

## விசாரணைக்கு...

பின்னர் நேற்றைய தினம் கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவினரின் விசாரணைக்காக 2 ஆம் மாடிக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இவர் நேற்றைய தினம் விசாரணைக் செல்வதற்கு முன்னதாக கொழும்பில் உள்ள மனிதஉரிமை ஆணைக்குழுவில் அறிவித்து விட்டு சென்றுள்ளார்.

இந்நிலையில் விசாரணைக்காக 2 ஆம் மாடிக்கு சென்ற இவரை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளதாக உறவினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த யுத்தத்தின் போது இவர் ஒரு கண்ணை இழந்த நிலையில் தற்போது மாற்றுக்கண் பொருத்தப்பட்டுள்ளது.

வடக்கில் கடந்த சில மாதங்களாக இவ்வாறான விசாரணைகள், கைதுகள் தொடர்சியாக இடம்பெற்று வருவதுடன் சமீப காலமாக முன்னாள் போராளிகள் மீதான கைது நடவடிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-4-9)

## சுவிஸ் வெளிவிவ...

பேச்சுக்களை நடத்தவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹேஷினி கொலன்னே தெரிவித்துள்ளார்.

அத்துடன் யாழ்ப்பாணம் மறவன்புலோவில் சுவிஸ் நாட்டின் நிதியுடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடமைப்பு திட்டத்தை பார்வையிடுவதற்காக சுவிஸ் அமைச்சர் எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அங்கு வருகைதரவுள்ளார்.

அவரது யாழ்ப்பாண விஜயத்தின்போது வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், ஆளுநர் ரெஜி னோல்ட் குரே ஆகியோரை சந்திக்கவுள்ளார். அத்தோடு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரையும் சந்திக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர கூறியுள்ளார்.

மேலும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயத்தை மேற்கொள்ளவுள்ள சுவிஸ் அமைச்சர், சபாபதிப்பிள்ளை முகாமுக்கும் விஜயம செய்து, அங்கு முகாம்களிலுள்ள இடம் பெயர்ந்து வாழும் மக்களையும் சந்திக்கவுள்ளார்.

முன்னதாக சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் எதிர்வரும் 25ஆம் திகதி வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீரவையும சந்தித்து பேச்சு நடத்துவார் என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## நீதிமன்றிலிருந்து...

அழைத்து வரப்பட்ட கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.20 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பிச் சென்ற கைதியை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையில் முல்லைத்தீவு பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மூங்கிலாறு - உடையார் கட்டு பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் கடந்த 2 மாதங்களுக்கு முன் வீடு ஒன்றில் 30 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் இலத்திரனியல் அட்டையை திருடிய குற்றத்திற்காக கைது செய்யப்பட்டிருந்தார்.

வவுனியா சிறையில் முன்னர் தடுத்து வைக்கப்பட்டு பின் அண்மையில் விடுதலையாகிய, இவர் திருட்டுச் சம்பவத்துக்காக மீண்டும் கைது செய்யப்பட்டு நீதிமன்றிற்கு நேற்று அழைத்துச் செல்லப்பட்டார்.

முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட போது இவருக்கு 8 மாதகால சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே அவர் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பொலிஸாரின் பாதுகாப்புப் பிடியிலிருந்து தப்பிச் சென்றுள்ளார். (செ-281)

## எழிலன் தொடர்...

பொறுப்பாளர் எழிலன் உள்ளிட்ட பலர் தொடர்பான வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த வழக்கு எதிர்வரும் மே மாதம் 19 ஆம் திகதிக்கு முல்லைத்தீவு நீதிமன்றத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது சரணடைந்தவர்கள் தொடர்பான விபரங்கள் இராணுவத்தின் 58ஆவது படைப்பிரிவு முகாமில் இருப்பதாகவும் இதனை நேற்று 19ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் முல்லைத்தீவு நீதிமன்றம் கடந்த விசாரணையின் போது உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று செவ்வாய்கிழமை முல்லைத்தீவு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை.

இதனையடுத்து வழக்கு விசாரணை எதிர வரும் மே மாதம் 19 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (செ-281)

## ஊழல் புரிந்த நப...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

மகிந்தவின் ஆட்சிக்காலத்தின் போது அவர் உட்பட அவரின் குடும்பத்தினரும், பல அமைச்சர்களும் செய்த ஊழல்களை நாங்கள் சாட்சிகளுடன் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு தெரிவித்தோம். ஆனால் அது தொடர்பாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

தங்களுடைய நிலையை பலப்படுத்துவதற்காக நல்லாட்சி எனக்கூறும் அரசு ஊழல் செய்தவர்களுக்கு அமைச்சு பதவி வழங்குகின்றது. இதன்மூலம் ஊழல் செய்தவர்கள் நிம்மதியாக வாழ இந்த நாட்டை ஆள்பவர்கள் உதவி செய்கிறார்கள்.

அத்துடன், ராஜபக்ஷ தன்னுடைய சகோதரர்களுக்கு வழங்கிய சலுகைகள் போல் மைத்திரியும் தனது சகோதரர்களுக்கு சலுகைகள் வழங்குகிறார் இது என்ன நியாயம்? இவை அனைத்தையும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். மிக விரைவில் இதற்கு எதிராக மக்களை ஒன்று திரட்டி மக்களின் ஊடாகவே உரிய நடவடிக்கை எடுக்கப் போகிறோம்.

அண்மையில் வெளி வந்த பனாமா பத்திரிகையில் இலங்கை அமைச்சர்களின் ஆலோசகர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னும் சில அமைச்சர்களின் உறவினர்களின் பெயர்களும் வெளிவந்துள்ளன. மிக விரைவில் அவர்களின் பெயர்களை நாமும் வெளியிடுவோம்.

கடந்த ஆட்சி போன்றே இந்த ஆட்சியிலும் ஊழல் மோசடிகள் இடம்பெறுகின்றது. ஊழல் மோசடிகள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட குற்றங்கள் தொடர்பில் இதுவரை விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை.

இதுவும் அரசின் சதியே, ஆட்சிக்கு வரும் போது கூறியதை மறந்து விட்டு திருடர்களுக்கு உதவுகிறது என ஊழலுக்கு எதிரான குரல அமைப்பின் ஏற்பாட்டாளர் வசந்த சமரசிங்க தெரிவித்தார். (செ-12)

## தங்க கடத்தலை...

படையினருக்கும் பொலிஸாருக்கும் வழங்கப்பட்டுள்ள நிலையில், இந்த சட்டவிரோத தங்க வர்த்தகத்தை தடுக்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து சந்திப்பின் போது கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தங்கம் சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படுவதனை தடுக்க உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (செ-12)

# வடமராட்சி சவுக்கு காட்டினை பாதுகாக்க விசேட திட்டம்

வடமராட்சி. மணற்காடு சவுக்குகாட்டை பாதுகாப்பதற்கு விசேட செயற்றிட்டம் ஒன்றை ஆயிரத்து 500 தொண்டர்களின் உதவியுடன் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 7 மணி முதல் 2 மணி வரையில் முன்னெடுக்கவுள்ளதாக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மணற்காடு சவுக்கு காடுகளுக்கு தீவைத்து, சவுக்கு மரங்களை விறகுக்கு எடுக்கும் செயற்பாட்டை அண்மைக்காலமாக சிலர் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் சவுக்கு காடு அழிவடையும் நிலையில் உள்ளது. இதனைப் பாதுகாக்க வேண்டியது கட்டாயமாகும்.

எதிர்வரும் 22ஆம் திகதி உலக பூமி தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அத்தினத்தில் இராணுவம், பொலிஸார், பல்கலைக்கழக மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ஆகியோரை இணைத்து, சவுக்கு காட்டை பாதுகாப்பதற்கான செயற்பாட்டை முன்னெடுக்கவுள்ளோம்.

சவுக்கு மரங்களின் கீழுள்ள தீப்பற்றக் கூடிய சருகுகளை முழுமையாக அகற்றல், சவுக்கு மரங்களின் கிளைகளை சுமார் 5 அடி உயரம் அளவுக்கு அகற்றல் உள்ளிட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். கீழ் மட்டத்திலுள்ள கிளைகளை அகற்றும்போது, காட்டுக்குத்தீவைப்பவரகளை இலகுவாக இனங் காணக்கூடியதாக இருக்கும்.

மணற்காட்டில் தற்போது சுமார் 500 ஏக்கரில் சவுக்கு காடு அமைந்துள்ளது. இதனைப் பாதுகாப்பதற்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குமாக இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது" என அவர் மேலும் கூறினார். மேலும் சில தினங்களுக்கு முன்னர் கூட சில விசமிகளால் பல சவுக்கு மரங்கள் தீயிட்டு எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-4)




யாழ்ப்பாணம் நல்லூர் பண்டாரக்குளம் அருள்மிகு ஸ்ரீ கௌரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம்

20.04.2016 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அலங்கார உற்சவம் ஆரம்பம்.
27.04.2016 புதன்கிழமை மாலை உற்சவம் சப்பறம்
28.04.2016 வியாழக்கிழமை தேர் உற்சவம்
29.04.2016 வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவம்

உற்சவத்தின் பிரதம குருவாக
சிவஸ்ரீ.து.விவேகானந்தக்குருக்கள்
(யாழ் வண்/வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பிரதமகுரு தலைமையாக இருந்து நடத்தி வைக்கிறார்.)

ஆலய பிரதமகுரு
சிவஸ்ரீ.பஞ்சலிங்கம் ஐயர்

உதவி
சிவஸ்ரீ.வி.பிரணவன் ஐயர்

(4253) - ஆலய பரிபாலன சபை

வன்னிக் குறோஸ் கலாசார பேரவையால் நடத்தப்படும் முல்லை மாவட்டக் கலைஞர்களுக்கான போட்டி நிகழ்வுக்கான அறிவித்தல்

- அரிச்சந்திரன் மயான காண்டம்
- கோவலன் கூத்து
- பண்டாரவன்னியன் வரலாற்று நாடகம்
- சமூக நாடகம்
- கிறிஸ்தவ சமய நாடகம்

மேற்படி போட்டி நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 23.04.2016 சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஒட்டுசுட்டான் வைமன் முன்பள்ளியில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குகொள்ள ஆர்வமுள்ள அண்ணாவிமார்கள், நாடக நெறியாளர்கள், கலைஞர்கள், ஆர்வலர்களை இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறும், அன்றைய தினமே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு போட்டிக்கான திகதியும் தீர்மானிக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
செயலாளர் - 077 678 7338
இணைப்பாளர் - 077 805 2903

தகவல் :
வன்னிக் குறோஸ் கலாசார பேரவை

(4387)

# சுன்னாகம் நீர்மாசு வழக்கு;...

வரும் நிலையில், நேற்றையதினம் குறித்த வழக்கு நீதவான் ஏ.யூட்சன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே கட்டளைக்காக எதிர் வரும் மூன்றாம் திகதிக்கு வழக்கினை நீதவான் ஒத்திவைத்துள்ளார்.

அதிகாரமின்றி சுன்னாகம் நீர் மாசு விடயத்தில் வடக்கு மாகாண சபை ஏன் தலையிட்டு நிபுணர்குழு ஒன்றை நியமித்து அறிக்கை வெளியிட்டது? என மல்லாகம் நீதிமன்றம் கடந்த வழக்கு தவணையின் போது கேள்வியெழுப்பியிருந்தது.

மேலும் இரண்டாம் மாதம் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் ஆகியோருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

இதில் விவசாய அமைச்சு சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி, குடிநீர் வழங்குவது தொடர்பில தமக்கு அதிகாரமில்லை எனவும்,

மத்திய அரசுக்கு தான் அதிகாரம் உள்ளது எனவும், கூறினார். நீதிமன்றின் அறிவுறுத்தலுக்கு அமைய மேற்படி வழக்கின் வழக்காளர்களுக்கு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை குடிநீர் வழங்கிக்கொண்டு இருக்கின்றது.

இதற்கு இடையூறினை ஏற்படுத்தும் வகையில், வடக்கு மாகாண சபை ஏன்? நிபுணர் குழுவினை நியமித்து அறிக்கை வெளியிட்டது என கேள்வியெழுப்பிய நீதவான்,

இவை தொடர்பில் அடுத்த வழக்கு தவணையின் போது அமைச்சர் நீதிமன்றில் ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும் எனவும் கடந்த மாத வழக்கு தவணையில் உத்தரவிட்டிருந்தார்.

மேலும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் வடபிராந்திய செயலர், பிரதேச செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர்கள் ஆகியோர், குடிநீர் வழங்குவதற்கு தம்மிடம் போதிய நிதி இல்லை எனவும் இதன் போது மன்றில் தெரிவித்திருந்தனர்.

மேலும் இவ்விடயத்தில் மாகாண சபைக்கு அதிகாரம் இல்லை எனவும், மத்திய அரசுக்கே அதிகாரம் உண்டெனவும் அமைச்சு சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி மன்றில் கூறியதனை அடுத்து இருதரப்பு சட்டத்தரணிகளிடையே கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றும் இருந்தன.

இந்நிலையில், குறித்த வழக்கு நேற்றைய தினம் எடுத்துக்கொள்ளப்பட்ட போது,

அமைச்சர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி எம்.கேமுத்துக்குமார், நிலத்தடி நீரில்கழிவெண்ணை கலந்தமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தனியே அமைச்சர் ஐங்கரநேசனால் முன்னெடுக்கப்பட்டதல்ல, வடக்கு மாகாண சபையினாலேயே முன்னெடுக்கப்பட்டதாகவும் இந்த குற்றச்சாட்டு அரசியல் ரீதியாக அமைச்சர் மீது முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் சமர்ப்பணம் செய்தார்.

இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் நலன்களை கவனிப பதற்கு ஆஜராகியிருந்த சட்டத்தரணிகளான சோ.தேவராஜா, எஸ்.ஜெயரூபன், ரி.சோபிகன், வி.மணிவண்ணன் ஆகியோர், குறித்த வழக்கின் நோக்கம் நிலத்தடி நீரில் எண்ணெய் கலந்துள்ளதனை கண்டுபிடித்து அதற்கான தீர்வினை காண்பதே. மாறாக அமைச்சர் மீது குற்றம் சாட்டுவது எமது நோக்கமல்ல என மன்றில் தெரிவித்தனர்.

இரு தரப்பு வாத சமர்பபணங்களின் பினனர் மேற்படி வழக்கின் கட்டளை எதிர்வரும் மே மாதம் மூன்றாம் திகதி வழங்கப்படும் என நீதவான்கூறி வழக்கினை கட்டளைக்காக ஒத்திவைத்தார். (செ-4)

# சட்டம், ஒழுங்கு...

மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து, நாட்டின் பொலிஸ் திணைக்களம் இரண்டு வாரங்களுக்கு அமைச்சர் சுவாமிநாதனின் தற்காலிகக் கட்டுப்பாட்டின் கீழ் வந்திருக்கிறது.

சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க வெளிநாடு சென்றிருப்பதாலேயே, இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன இருந்த போது, 1980 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி உள்நாட்டலுவல்கள் அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்த கே.டபிள்யூ.தேவநாயகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் பொலிஸ் திணைக்களம் இயங்கி வந்தது.

இந்நிலையில், தற்காலிக ஏற்பாடாக பொலிஸ் திணைக்களம் அமைச்சர் சுவாமிநாதனின் கட்டுப்பாட்டின் கீழ் வந்திருக்கிறது. (செ-12)

# ஜனாதிபதி மைத்திரியின்...

அமெரிக்காவில் இடம்பெறவுள்ள சூழல் பாதுகாப்பு தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நான்கு நாள் பயணத்தை மேற்கொண்டு நாளை 21ஆம் திகதி அமெரிக்கா செல்வதற்கு திட்டமிட்டிருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அமெரிக்காவுக்கான பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு, அதற்கான காரணங்கள் எதனையும் குறிப்பிடவில்லை.

இந்தப் பயணத்தின் போது, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவைச் சந்தித்து இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இதனிடையில், செலவினங்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் தனது வெளிநாட்டுப் பயணங்களை குறைத்துக் கொள்ளப் போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கூறியிருந்த நிலையில் மேற்படி விஜயம் ரத்து செய்யப்பட்டுள்ளது. (செ-11)

# ஐ.நா. கூட்டத்தில்...

பங்கேற்கவுள்ளார். உலகப் போதைப் பொருள் பிரச்சினை தொடர்பில் நடைபெறும் மேற்படிக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் சாகல ரட்நாயக்க நேற்றுமுன்தினம் அமெரிக்காவின் நியூயோர்க் நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளார்.

19-ம் திகதி முதல் நாளை 21-ம் திகதி வரையில் இந்த விசேட கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் சாகல ரட்நாயக்க உரையொன்றையும் நிகழ்த்தவுள்ளார்.

இதற்கு மேலதிகமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் விசேட பிரதிநிதியாக, அமெரிக்காவின் உயர் அதிகாரிகளையும் அமைச்சர் சந்திக்கவுள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில், அமெரிக்காவின் உயர் அதிகாரிகளுடன் சாகல ரட்நாயக்க கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

இதன்படி அமைச்சர் சாகல 2 வாரங்களின் பின்னரே நாடுதிரும்புவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே, சட்டம் ஒழுங்கு பதில் அமைச்சராக அமைச்சர் சுவாமிநாதன் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். (செ-12)


**தொலைபேசி திருத்துநர் தேவை**

பிரபல இடத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு தொலைபேசி திருத்துவதற்கு திருத்துநர் தேவை.

0773381398 / 0772497160 (4252)

**வேலைவாய்ப்பு**

கிளிநொச்சியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அசைவ உணவகத்திற்கு சகல விதமான வேலையாட்களும் தேவை.

(தங்கி நிற்பவர்களுக்கும், கிளிநொச்சியில் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.)

தொடர்புகளுக்கு : 0777474111
0213900110 (C-4383)

**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.





அழையுங்கள் - 077 29 31 062

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை) (C-4379)

**FALC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH**

**பிரெஞ்சு மொழி வகுப்பு**

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1079 மாணவர்கள் French கற்றுள்ளனர்....

No. 40, பலாலி வீதி, இலுப்பையடி.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 23.04.16 சனி 08 am.

பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 25.04.16 Mon@ 4pm.

ஆரியகுளம் →100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC (C-4353)

**BCHS சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 20% கட்டணக் கழிவில் கற்கை நெறிகள்**

**Spoken English with Grammar - Quick Learning Course** 1½ Months

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.

Rs.6000/=

இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

**Diploma In English** 2 Months

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

Rs.8000/=

★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்.

★ எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது

★ Excellent Teacher's Panel & Individual Attention

★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும். (C-4385)

உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 23.04.2016 காலை 10.00, மாலை 2.30 ஆரம்பமாகின்றது

**Batches Start On**

22.04.2016@10.00am | 25.04.2016@ 9.00am | 27.04.2016@10.00am | 29.04.2016@ 9.00am | 30.04.2016@ 9.00am

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road),
Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550

HotLine(S)
0777585913, 0777222422
0770365728





**பண்டிகைக்கால விசேட சலுகைகள்**

220க்கு மேற்பட்ட உள்நாடு வெளிநாடுகளுக்கான துரிததபால்கள் பொதிகள் சேவைகள்!

வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், உணவுப் பொருட்கள், கருவாடு, மருந்து, எண்ணெய் வகைகள் என்பவற்றை அனுப்பி வைக்கலாம்

11Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1Kgக்கு மிக குறைந்த கட்டணம்.
UK-600/= Canada-900/= France-700/= Germany-650/=

மற்றைய நாடுகளுக்கும் மிகக்குறைந்த கட்டணத்தில் அனுப்பி கொள்ள முடியும் (4230)

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்

**திருமுருகன் கொம்நெற் (PVT) Ltd**

● 271A, K.K.S Road, Jaffna.
● 46, Aadiyapatham Road, Thirunelvely.
● 18, பிரதான வீதி, நெல்லியடி.
● பிரதான வீதி, பருத்தித்துறை. (பஸ் நிலையம் முன்பாக)
● பிரதான வீதி, சங்கானை (ஆசைப்பிள்ளை நகைக்கடை முன்பாக)
021222 7835


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி கல்விப்பிரிவு

## தரம்-5 மாணவர்களுக்கான

# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-07



பகுதி-I

நேரம்:- 45 நிமிடங்கள்

1 தொடக்கம் 3 வரையுள்ள வினாக்களில் பொருத்தமற்ற உருவின் கீழ்க் கோடிடுக.

01.  I  II  III 

02.  I  II  III 

03.  I  II  III 

தரப்பட்டுள்ள படத்துடன் மிக நெருங்கிய தொடர்புடைய சொற்களைக் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.

04. 

1.வீட்டிலும் வளர்ப்பர், மாமிசத்தை உண்ணும், சமாதானத்தின் சின்னம்
2.தானியத்தை உண்ணும், சமாதானத்தின் சின்னம், வீட்டில் வளர்ப்பர்
3.தானியத்தை உண்ணும், பறக்கமாட்டாது, பாலூட்டி

05 

1. ஈரூடக வாழி, மாமிச உண்ணி, கொடிய பிராணி
2.நீரில் மட்டும் வாழும், கொடிய பிராணி, தாவர உண்ணி
3.தாவர உண்ணி, ஈரூடக வாழி, சாதுவான பிராணி

◆ கீழே தரப்பட்டுள்ள குறியீடுகளை அவதானித்து 6 ஆம் 7ஆம் வினாக்களினுள் சரியான விடையைத் தெரிவு செய்க

△ -அம்மா ○ -சென்றாள் ▭ -தங்கை

⊞ -சோறு ⊕ -கடைக்குச் ⚠ -பாடசாலைக்குச்

◍ -அப்பா ◬ -குடித்தான்/ குடித்தாள்

06. △⊕○ என்ற குறியீடு உணர்த்தும் கருத்து யாது?

1.தங்கை கடைக்குச் சென்றாள் 2.அம்மா கடைக்குச் சென்றாள்
3.அண்ணா கடைக்குச் சென்றான் 4.நான் பாடசாலைக்குச் சென்றேன்

07.தங்கை பாடசாலைக்குச் சென்றாள் என்ற வாக்கியம் உணர்த்தும் குறியீடு யாது?

1. ▭○⚠ 2. △⊕○ 3. ▭⚠○ 4. ◍△○

◆பின்வரும் விபரத்தை வாசித்து 8ஆம், 9ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | |
|---|---|
| 1 கிலோகிராம் சீனியும் 500 கிராம் தேயிலையும் | ரூ.195.00 |
| 1 கிலோகிராம் சீனியும் 400 கிராம் பால்மாவும் | ரூ.175.00 |

1 கிலோ கிராம் சீனி ரூ.65.00

500 கிராம் தேயிலையும் 1 கிலோகிராம் பிஸ்கட்டும் ரூ.250.00

08.ஒரு கிலோகிராம் பிஸ்கட்டின் விலை என்ன?

1.ரூ.110 2.ரூ130 3.120

09.800 கிராம் பால்மாவின் விலை என்ன?

1.ரூ.110 2.ரூ.220 3.ரூ.140

10.ஒருவர் அச்சமடைந்த சந்தர்ப்பத்தைக் காட்டுவதற்கு உகந்த உவமானம் பின்வருவனவற்றுள் யாது?

1.மான்குட்டி போன்று நடுங்குகின்றார் 2.புறாப்போன்று ஒலியெழுப்புகின்றார் 3.சிங்கம் போல் கர்ச்சிக்கின்றார்

◆ **11ஆம் 12 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் வெற்றிடத்தை நிரப்புவதற்குச் சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லை கீழே தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து தெரிவு செய்க.**

11.என்னுடைய அம்மா இன்று சந்தைக்குச் சென்று........................வாங்கி வந்தார்

1.மரக்கரிகள் 2.மறக்கறிகள் 3.மரக்கறிகள்

12. சூரியனின் பிரகாசமான...................... பூமியின் மீது பரவியது

1.ஒலி 2.ஒழி 3.ஒளி

◆ **13 ஆம், 14 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க**

13.ஸ்ரீகுமரனனினதும் சாந்தனினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 45 வருடங்களாகும். ஸ்ரீகுமரனின் வயது சாந்தனின் வயதிலும் 4 மடங்காயின் சாந்தனின் வயது எத்தனை வருடங்களாகும்.


1.10 வருடங்கள் 2.8 வருடங்கள் 3.9 வருடங்கள்

14.ரமணன் தனது வீட்டிலிருந்து வடக்கு நோக்கிச் சிறிது தூரம் சென்றபின் வலது கைப்பக்கம் திரும்பிச் சிறிது தூரம் சென்றான். பின்பு வலது கைப்பக்கம் திரும்பிச் சிறிது தூரம் சென்று மீண்டும் வலது கைப்பக்கம் திரும்பிச் சிறிது தூரம் சென்றபின் இறுதியில் இடதுபக்கம் திரும்பினான். இப்போது ரமணன் எந்தத் திசையை நோக்கி நிற்கின்றான்.

1.வடக்குத்திசை 2.தெற்குத்திசை 3.மேற்குத்திசை

15. கீழே நீளங்களின் அலகுகளில் பெறுமதி கூடியதிலிருந்து குறைந்ததுவரை இறங்குவரிசை ஒழுங்கைக் காட்டுவது எது?

1.mm,cm,m,km 2.km,m,cm,mm 3.cm,mm,m,km

16. 


வெற்று வட்டத்தினுள் வரவேண்டிய எண்ணை அதனுள் தெரிவு செய்க

1.8

2.9

3.18

17.ஒரு வயோதிபனான குருடன் ஒருவருக்கு பாதையைக் கடக்க உதவி செய்தமை கீழே ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளது. அதனைச் சரியாக ஒழுங்கமைத்தால் வரும் விடையை தெரிவு செய்க.

a.அந்தக் கிராமத்தில் குமார் என்னும் சிறுவன் வசித்து வந்தான்

b.ஒருநாள் பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தான்

c.அவன் கையைப் பிடித்து மறுபக்கம் அழைத்துச் சென்றான்

d.நகரை அண்டிய பிரதான பாதையிலமைந்த சிறு கிராமம் அது

e.வயோதிபரான ஒரு குருடன் பாதையைக் கடக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தார்

1.d,a,b,e,c 2.d,a,b,c,e, 3.e,d,b,a,c

18.தரப்பட்ட உருவை மேலிருந்து பார்க்கும் போது அது தோன்றும் விதத்தினைக் காட்டும் உருவைத் தெரிவு செய்க




19.மாலதி எப்போதும் உண்மையே பேசுவாள். எச் சந்தர்ப்பத்திலும் யாருக்கும் பொய் சொல்லமாட்டாள். அதன்படி மாலதி

1.கீழ்ப்படிவுள்ள மாணவி 2.திறமையான மாணவி 3.நேர்மையான மாணவி

20. நேர அட்டவணையின்படி வேலை செய்வதனால் ஏற்படும் ஒரு விளைவு அல்லாதது

1.வேலைகள் குளறுபடியாவதைத் தடுத்தல் 2.நேரம் மிக வேகமாகச் செல்லுதல்

3.நேரத்தை வீணடிக்காது மிச்சப்படுத்திக் கொள்ள முடிதல்

21.எழுத்துப் பிழையற்ற வாக்கியத்தை தெரிவு செய்க

1.அரசன் அரம்மனை நோக்கி விறைந்து சென்றான்

2.வீதியில் வயோதிபன் ஊன்றுகோல் உதவியுடன் நடந்தான்

3.பாடசாலையில் பரிசலிப்பு விழா நடைபெற்றது

22.கீழேயுள்ள வினாவில் தரப்பட்டுள்ள எண் பிரசினங்களில் வெற்றிடத்திற்கு பொருத்தமான எண்கள் யாவை?

```
  4   5   7
  3   -   4
 -----------
  1   -   3
```

1) 2    2) 1    3) 1

   3      3      6

23.தவறிழைத்துத் தண்டனை பெற்ற மாணவனொருவன் மீண்டும் அந்தத் தவறைச் செய்ய முன்வரான் என்ற கருத்தை விளக்கப் பொருத்தமான பழமொழியைத் தெரிவு செய்க

1.அழுத பிள்ளை பால் குடிக்கும் 2.அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது

3.சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது

◆ **24ஆம் 25 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள விபரங்களினால் குறிக்கப்படும் சொல்லை எழுதுக.**

24. கண்ணில் உண்டு ஆனால் காதில் இல்லை
சொல்லில் உண்டு ஆனால் எழுத்தில் இல்லை
விடையில் உண்டு ஆனால் கேள்வியில் இல்லை
அச்சொல் என்ன?.....................................................

25. பாசத்தில் உண்டு ஆனால் பயத்தில் இல்லை
நடனத்தில் உண்டு ஆனால் நாட்டியத்தில் இல்லை
சாமரையில் உண்டு ஆனால் தாமரையில் இல்லை
சேலையில் உண்டு ஆனால் பாளையில் இல்லை
அச்சொல் எது?.....................

◆ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக**

26.பாடசாலையில் மாணவர்களுக்குக் கற்பிப்பவர் ஆசிரியர் என்பதுபோல ஒரு பாடசாலைக்குப் பொறுப்பாக இருப்பவர்

1.ஆணையாளர் 2.அதிபர் 3.பணிப்பாளர்

27.செய்திகள் உட்பட பற்பல விடயங்களையும் உள்ளடக்கியதாக அன்றாடம் பிரசுரிக்கப்படுவது

1.மாதஇதழ் 2.வாரஇதழ் 3.நாளிதழ்

28. கடை ஒன்றில் எப்போதும் இருக்கவேண்டியது

1.பொருட்கள் 2.தராசுகள் 3.மேசை 4.காசு

29.ஆசிரியர் எப்போதும்

1.பெண்ணாக இருப்பார் 2.ஆணாக இருப்பார் 3.இளமையாக இருப்பார் 4.கற்றவராக இருப்பார்

30.வெளியில் போகும்போது நண்பன், வீட்டிற்குள் வந்தால் விரோதி அவன் யார்

1.செருப்பு 2.நாய் 3.பகைவன்

31.மின்சக்தியை வெப்பசக்தியாக மாற்றும் உபகரணம்

1.மின்குமிழ் 2.வானொலி 3.மின்னமுத்தி

32.3 கோணமுள்ள உரு முக்கோணி, 5 கோணமுள்ள உரு ஐங்கோணி 9 கோணமுள்ள உரு

1.ஒன்பது கோணி 2.நவகோணி 3.தசகோணி

33.புடைவைக் கடையில் ஒரு சாறியின் விலை KIIY.00 என ஆங்கில எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்தது. அப்பொருளின் விலையாக இருக்கக்கூடியது.

1.4500.00 2.4550.00 3.4540.00

34.2011 இல் முப்பது நாட்களைக் கொண்ட மாதங்கள் எத்தனை

1.3 2.4 3.5

35.முதன்முதலில் சந்திரனில் காலடி வைத்தவர்

1.யூரி ககாரின் 2.நீல் ஆம்ஸ்ரோங் 3.கல்பனா

36.  இவ்வுருவில் காணப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை

1.4 2.8 3.6

37.இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் நூல்

1.திரிபீடகம் 2.பகவத்கீதை 3. மகாவம்சம்

38.தகவல்களை விரைவாகப் பெறக்கூடிய சாதனம்

1.பத்திரிகை 2.இணையம் 3.தொலைக்காட்சி

39.G.S. என அழைக்கப்படுபவர்

1.கிராமசேவகர் 2.மந்திரி 3.அரச அதிகாரி

40. 36 ☐ 9 ☐ 4 = 8 கட்டங்களுக்குப் பொருத்தமான குறியீடு

1.÷,+ 2.×,+ 3.+,- 4.÷,×


41.பருப்பு, கத்தரி, அரும்பு எனும் சொற்கள் 3146, 0287,9156 ஆகிய இலக்கங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளன எனில் கரும்பு எனும் சொல்லை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட இலக்கங்கள் யாவை?


1.9156 2.0156 3.5106

42.  ஆகிய இரு உருக்களையும் சேர்க்கும்போது கிடைக்கும் உரு யாது?

1.  2.  3.  4. 

43. பின்வரும் பொருட்களின் விலைகளின் கூட்டுத் தொகையைப் பார்த்து அப்பிளின் விலையைக் காண்க?

ரூபா - 45.00


ரூபா - 70.00


ஒரு அப்பிளின் விலை யாது?

.............................

43.ஆபத்து ஏற்படுவதை உணர்ந்தவுடன் கண்களில் மிரட்சியுடன் சத்தம் போடும் விலங்கு எது?

1.புலி 2.சிங்கம் 3.மான்

44.தேசியக் கொடியில் பச்சை நிறம் குறிப்பது

1.தமிழர் 2.சிங்களவர் 3.முஸ்லிம்கள்

45.இலங்கை, இந்தியா இரண்டு நாடுகளையும் பிரிப்பது

1.பசுபிக் சமுத்திரம் 2.பாக்குநீரிணை 3.இந்து சமுத்திரம்

46.சந்திரனின் ஒளியேற்றம் முழுமையாகத் தெரியும் நாள்

1.பௌர்ணமி 2.அமாவாசை 3.அட்டமி

47.பம்பரகந்த மிக உயர்ந்த நீர்வீழ்ச்சியாகும். இது இருப்பது

1.இந்தியாவில் 2.இலங்கையில் 3.சீனாவில்

48.நள்ளிரவில் பூக்கும் பூ எது?

1.கடுபுல் 2.அல்லி 3.நித்தியகல்யாணி

49.நமது வீட்டில் தொற்று நோயாளி ஒருவர் இருக்கும் பட்சத்தில் நாம் தெரிவிக்க வேண்டியது யாரிடம்?

1.அமைச்சருக்கு 2.கிராம சேவை உத்தியோகத்தருக்கு 3.பொதுச்சுகாதார பரிசோதகருக்கு ( P.H.I)

50.சந்தையில் பொருட்களை வாங்குவோர்

1.வியாபாரி 2.நுகர்வோர் 3.தரகர்

51.சூரியனுக்கு மிகத் தொலைவிலுள்ள கோள்

1.சனி 2.யுரேனஸ் 3.வியாழன்

52.  இக்குறியீட்டின் விளக்கம்

1.கடும்பனி பெய்யும் 2.கடும்மழை பெய்யும் 3.தூறல் மழை பெய்யும்

53.தனது வாயால் கௌவிக்கொள்வதன் மூலம் குட்டிகளைப் பாதுகாக்கும் பிராணி அல்லாதது

1.நாய் 2.நரி 3.ஆடு

54.இலங்கையின் முக்கிய குன்றுகளில் ஒன்று

1.பேதுருதாலகால 2.சிகிரியா 3.நக்கிள்ஸ்

55.கொழும்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் அமைந்துள்ள மாகாணங்கள் முறையே

1.தென்மாகாணம், கிழக்கு மாகாணம் 2.மேல்மாகாணம், கிழக்கு மாகாணம்

3.வடமேல் மாகாணம், கிழக்கு மாகாணம்

56.தொலைவில் உள்ள இரையைக் கண்டு அதனைப் பிடிக்கும் ஆற்றல் கூடுதலாக உள்ள பறவை எது?

1.கொக்கு 2.பருந்து 3.காகம்

57.சந்தேகத்திற்கிடமான பொதியைக் கண்டவுடன் பாதுகாப்பிற்காக அறிவிக்கவேண்டிய தொலைபேசி இலக்கம்

1.119 2.147 3.456

◆ ◆ ◆

இவ் வினாக்களுக்குரிய விடைகள் நாளை வியாழக்கிழமை (21.04.2016) வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.